
கயிலை மால்வரை



பழனியப்பா பிரதர்ஸ்

கயிலை மால்வரை

[யாத்திரை நூல்]

வித்துவான்

ம. வி. இராகவன்

தலைமைத் தமிழாசிரியர்

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி

தியாகராயநகர், சென்னை.

பழனியப்பா பிரதர்ஸ்

திருச்சிராப்பள்ளி :: சென்னை—6

பதிப்புரிமை] 1951 [விலை அணா 14

முதற் பதிப்பு - 1949
இரண்டாம் பதிப்பு - 1951

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS-6.

முன்னுரை

"கயிலை மால்வரை" என்னும் இந்நூல் உயர்நிலை வகுப்புக்களிற் பயிலும் மாணவர்கட்கு உரியதொரு யாத்திரை நூலாகும். இதன்கண் கயிலாய யாத்திரையின் அரிய அனுபவங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் படித்தற்குரிய பயன் மிகு நூல்களுள் யாத்திரை நூல்கள் சிறப்புடையன என்பர். அவற்றுள் கயிலாய யாத்திரை பற்றிய இந்நூற்குத் தனிச் சிறப்பு உண்டு. இந்நூல், மாணவர் உலகுக்குப் புதியது; ஆயின் இதிற் கூறப்படும் செய்திகள் பழையன. வரலாறு, இலக்கியம், வாழ்க்கை, சமயம் இவற்றோடு நெருங்கிய தொடர்புடையன. இமயப் பெருமலை, திபேத்துப் பீடபூமி இவற்றின் இயற்கை நலங்களும், வழியின் அருமையும், மலைவாணர், திபேத்தியர் ஆகியோரின் பழக்க வழக்கங்களும், கயிலை மால்வரை, மானசசரோவரம் இவற்றின் தெய்விகச் சிறப்பும் மாணவர்கட்கு விருந்தாகி விழுப்பயன் தருவனவாம். யாத்திரையின் அரிய அனுபவங்களும், அவற்றால் விளங்கும் உயர்ந்த உண்மைகளும் அவர்களுடைய உலகியல் அறிவைப் பெருக்குவதோடு ஆன்ம ஞானத்திற்கும் ஆக்கம் தந்து அரண் செய்யும். தாய்நாட்டின் பண்பாட்டையும், நாகரிகச் சிறப்பையும், பாரமார்த்திகப் பெருமையையும் விளக்கும் இந்நூல் அவர்கட்கு இன்றியமையாத தன்னம்பிக்கையையும் தன்மதிப்பையும் ஊட்டும் என்பது ஒருதலை. எனவே இதனைக் கல்வியுலகம் விரும்பி ஏற்றுப் பெரும் பயன் கொள்ளும் என நம்புகின்றோம்.

"ஔவைத் தமிழகம்,"
தியாகராயநகர்,
சென்னை.
15—3—1949.

வித்துவான் ம. வி. இராகவன்.

உள்ளுறை

கயிலை மால்வரை

1. இமயமும் கயிலையும்

திருமாலும் சிவபெருமானும் பாரத நாட்டின் பழம் பெருந் தெய்வங்கள். பழம் பாரத மக்கள் இறைவன் இயற்கையை உடலாகக் கொண்டு அதனுள் உயிராக உறையும் தன்மையை உணர்ந்திருந்தனர். அவர்கள் இயற்கையினூடே இறைவனைக் கண்டு இறைஞ்சினர்; இயற்கையின் இன்பக் காட்சிகள் நிறைந்த இடங்களையெல்லாம் இறைவன் இனிது உறையும் திருக்கோயில்களாகக் கொண்டு தொழுது வழிபட்டனர். உலகிலேயே இயற்கையின் எழில் நிலையமாக அமைந்திருப்பது இமயப் பெருமலை. அதன் இதய பீடமாக விளங்குவது கயிலாயம். அஃது இறைவன் திருவுருவினை இடையறாது யாவருங் காணக் காட்டி நிற்கிறது. அதனைக் கண்டு களித்த நம் முன்னோர் அக்கயிலாயத்தைச் சிவபெருமான் உறைவிடமாகக் கொண்டனர்; அப் பெருமான் அங்கிருந்தே தன் மூர்த்தியைப் பாரெங்கும் பரப்பி வருவதாகக் கருதினர்; அதன் அமைப்பையும் தோற்றத்தையும் கொண்டே அப்பெருமானுக்கு உருவும் குணமும் கற்பித்து வழிபடலாயினர்.

இமயமும் இறைவனும்

கயிலாயம் சிவபெருமான் உறைவிடம் என்பதும், அஃது இமயமலையின்கண் உள்ளது என்

பதும் புராண காலத்திலேயே நம் மூதாதையரால் நன்கு அறியப்பட்டிருந்தன.

கயிலையும் புராணங்களும்

இச் செய்திகள் நம் நாட்டுப் பழம் புராணங்கள் பலவற்றிலும் பரக்கக் கூறப்பட்டிருத்தல் காணலாம். கயிலாயத்தைப் பற்றி நம் முன்னோர் கொண்டிருந்த கருத்துக்கள் பலவும் இப்பொழுது அதனை நேரிற் சென்று காணும் காட்சிகளோடு ஒத்திருப்பது வியப்பைத் தருவதாகும். முற்காலத்தில் நம் மூதாதையருள் பலர் கயிலாய மலைக்கு யாத்திரை சென்ற செய்திகள் பல உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை பாரத காலத்தவராகிய பாண்டவர்களைப் பற்றியதும், முறையே கி. பி. ஏழாவது நூற்றாண்டிலும் ஒன்பதாவது நூற்றாண்டிலும் வாழ்ந்த சிவனடியார்களாகிய அப்பரையும் சுந்தரரையும் பற்றியதும் ஆகும். பாண்டவர்கள் பாரதப் பெரும் போரை முடித்து நாட்டில் அமைதியான ஆட்சியை நிலைநிறுத்திய பின்னர் கயிலாயத்திற்குச் சென்றதாகப் பாரதம் கூறுகின்றது. திருநாவுக்கரசர் சிவபெருமானைக் கயிலையிற் கண்டு வணங்க விரும்பி, நாடும் காடும் சுரமும் கடந்துசென்று, இமயமலையை அடைந்து அதன்கண் ஏறலுற்று, வழியருமையால் உடல் ஓய்ந்து, உளம் வருந்த, கயிலையின் காட்சியைத் திருவையாற்றினின்றே கண்டு மகிழும்படி இறைவன் அவருக்கு அருள் செய்தான் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் பின்தொடரப் பூத உடம்போடு கயிலாயம் சென்றனர் என்றும் பெரிய புராணம் பகர்கின்றது. ஆனால், பிற்காலத்தில் அத்தெய்வத் திருமலையின் இருப்பிடமும் சிறப்பியல்பும் மக்கள் மனத்தினின்றும் மறையலாயின. அவர்கள் அவைபற்றிப்

புராணங்களிற் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கற்பனைகளாகக் கருதிவிட்டனர். கயிலாயம் என்பது மற்றத் தலங்கள் போலப் பூமியில் உள்ளதொரு தலமே என்பதும், ஏனைத் தலங்கட்கு யாத்திரை செல்வது போன்று இதற்கும் செல்லக்கூடும் என்பதும் பிற்கால மக்களுக்குத் தெரியாதனவாயின.

முற்காலத்தில் தீர்த்த யாத்திரை செய்வதென்பது செயற்கரிய செயலாக இருந்தது. பிரயாண வசதி ஏதும் அக்காலத்தில் இல்லை. காடுகளையும், மலைகளையும், காட்டாறுகளையும் கால் நடையாகவே கடந்து செல்லவேண்டும். வழியிடையில் பல விபத்துக்கள் விளைவதுண்டு. காசி போன்ற இடங்கட்கும் சென்று மீள்வதே எளிதில் இயலாத அருஞ்செயலாக இருந்தது. அந்நிலையில் இமயத்தைக் கடந்து கயிலைக்குச் செல்வது எத்துணை

கயிலாய பதவி

அருமையுடையது என்பது கூறாமலே விளங்கும். அக்காலத்தில் கயிலாயத்தை நோக்கிச் சென்றவர்கள் மீள்வதில்லை; வழியிடையில் விபத்துக்களுக்கு உள்ளாகி உயிரிழப்பர். ஆகவே கயிலாயம் போவது பரகதி அடைவதோடு ஒப்பிடப்பட்டது. அது சிவபெருமான் உறைவிடமாதலால் அங்குச் செல்வோர் அப்பெருமானோடு ஒன்றி உடன் கலந்து விடுவதாகக் கருதலாயினர். மரணம் அடைவதைக் கயிலாய பதவி பெறுவதாகக் கூறுவதும் வழக்கமாயிற்று. 'கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு, பயிலு மானுடப் பான்மையோர் எய்துதற் கெளிதோ, அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற் கரிது' என்னும் எண்ணம் நம்மனோர் உள்ளத்தில் நன்கு ஊன்றி உறுதிபெற்று நின்றது. ஆயின், அஃது உண்மையில் அத்தன்மையது அன்று;

ஏனைத் தலங்கள் போன்று இம்மண்ணுலகத்திலேயே உள்ளதொன்று.

இந்தியத் தாய்க்குச் சிகரமாயிருப்பது இமய மால்வரை. இந்தியாவுக்கு வடக்கின்கண் இயற்கை வரம்பாக இஃது அமைந்துள்ளது. இது கிழக்கு மேற்காக இரண்டாயிரம் மைல் தூரம் தொடர்ந்து பரந்துள்ளது. இயற்கையின் வேறுபட்ட வேறுபாடுகள் அனைத்தையும் தன்னகத்தேகொண்டு தனித்து நிற்கும் இதனை இயற்கை யன்னையின் இன்பத் திருவுருவம் என்று கூறலாம். 'அளக்கலாகா அளவும் பொருளும், துளக்க லாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும்' வாய்ந்து 'மலையரசு' என்பதற்கேற்பப் பெருமிதத் தோற்றம் கொண்டு நிற்கிறது. மகான்களுடைய உள்ளம் போலப் பரந்து, அவர்கள் தம் எண்ணம் போல ஓங்கி உயர்ந்து நிற்கும் இது, பழம் பாரதத்தின் புகழ்க் கம்பமாகப் பொலிந்து, புதுப் பாரதத்திற்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டி வருகிறது. பூமண்டலத்தின் முடிவெல்லைகளையும் முயன்று கண்டு வெற்றிகொண்ட மனித சக்தி இதன் சிகரங்களை இவர்ந்து காண மாட்டாமல் இதன்முன் தலை வணங்கி நிற்பதொன்றே இதன் பெருமைக்குப் போதிய சான்றாகும். எல்லாவற்றையும் கீழ்ப் படுத்திக்கொண்டு தனித்தோங்கி நிற்கும் இதன் உயர்ச்சியும், மாறிக்கொண்டே இருக்கும் இவ்வுலகத்தில் மாறுதல் இன்றித் தோன்றும் இதன் வீறுபெறு தோற்றமும் பாரத நாட்டின் பாரமார்த்திக ஞானத்திற்குஆக்கம் தந்து வந்துள்ளன. இதன் கலக்கமற்ற பெருமித நிலை, கலங்கிய உள்ளத்திற்கு ஆறுதலும் அமைதியும் அளித்து வருகின்றது.

இமயமலைத் தோற்றம்

இமயமலை பாரத நாட்டின் உன்னதமான இலட்சியத்தை உலகுக்கு உணர்த்தி நிற்கிறது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டில் எழுந்த எண்ணங்களும் உருவாகிய கொள்கைகளும் இதன்கண் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பழம்பெரு நாட்டின் விழுமிய விற்பன்னங்களுக்கெல்லாம் இஃது உறைவிடமாக இருந்து வருகிறது. உலகிலேயே மிகப் பெரிய மலையாகிய இது, மிகப் பெரிய தத்துவங்கள் விளங்குவதற்கும், மிக உயர்ந்த எண்ணங்கள் எழுவதற்கும் ஆதாரமாக இருந்து வந்துள்ளது. ஆன்ம சாந்தியை நாடினவர்கட்கும், ஆன்ம விடுதலையை விரும்பினவர்கட்கும் இது புகலிடமாக அமைந்திருக்கின்றது. இஃது இந்தியாவின் ஆன்ம ஞானம் போன்று உயர்ந்தும், ஆன்ம சக்தி போன்று அசைவற்றும் நிற்கிறது. இது நிலைத்திருப்பது போன்று இந்தியாவின் தேசியப் பண்பாடும், நாகரிகமும் அழிவின்றி நிலைத்திருக்கும் என்று பெருமக்கள் நம்பி வருகின்றனர். தியான முறையையும் யோக நிலையையும் இஃது உலகுயிர்கட்கு ஓயாது உணர்த்தி நிற்கின்றது. இதனைக் கண்டு தியான நெறிப்பட்டவர் பலர்; யோக நிலை யெய்தியவர் பலர். இதன் தோற்றத்தால் அறிவொளி பெற்றவர் எண்ணிலர். இதன் காட்சியில் கடவுளைக் கண்டவர் கணக்கிலர். இதனால் ஆன்ம ஞானம் பெற்று அருட்பணியில் ஈடுபட்டவர்களையும், உணர்ச்சி பெற்றுப் பழம் பாரதத்தின் பாரமார்த்திகப் பெருமையைப் பாரறியப் பறைசாற்றியவர்களையும் இத்துணையர் என்று எண்ணிக் கூறுதல் இயல்வதன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக இதன்கண்

இமயமலையின் பெருமை

ஊறி உறைந்து கிடக்கும் உயர்ந்த ஞானங்களெல்லாம் உருகி, கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா போன்ற புண்ணிய நதிகளாகப் பெருகி வந்து இப்பரந்த பாரத நாட்டை ஊட்டி வளர்த்து வருகின்றன. அவற்றால் உரம்பெற்ற நம் தாய்நாடு உலகுக்கே அறிவொளி காட்டும் ஆசாரிய நிலையை அடைந்திருக்கின்றது.

மனித சமூகம் அதன் ஆன்ம லட்சியத்தையும் அறிவியற் குறிக்கோளையும் அடைவதற்கு அமைந்த ஏணியாக உள்ளது இப் பெருமலை. ஆன்மிகத் துறையிற் சென்ற நம் மூதாதையர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இதன் வழியாக அதன் லட்சியமாகிய கயிலாயத்தை அடைந்து விட்டனர். அறிவியல் துறை மேற்கொண்ட மேனாட்டார் இன்னும் அதன் குறிக்கோளாகிய இதன் கொடுமுடியைக் கண்டாரில்லை. ஆன்மிகத் துறையிலும் அறிவியல் நெறியிலும் காலந்தோறும் படிப்படியாக முன்னேறியுள்ள மனித சமூகத்தின் அடிச் சுவடுகளை இது தன்னகத்தே கொண்டுள்ளது. இது பாரத மக்களை அவர்களுடைய முன்னோரால் காணப்பட்ட ஆன்ம லட்சியத்தை அடைந்து ஆனந்திக்கத் தூண்டியும் மேனாட்டினரை அவர்களால் காணப்படாத அறிவியல் லட்சியமாகிய தன் கொடுமுடியைக் காணும் முயற்சியில் ஊக்கியும் வருகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த இவ்விமயப் பெருமலை சிறிய இமயம், பேரிய இமயம், எல்லை கடந்த இமயம் என மூப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெரிய இமயத்தின் தென் சாரலில் பழம் பெருமை வாய்ந்த பல க்ஷேத்திரங்கள் உள்ளன.

இமயமலைத் தலங்கள்

அவற்றுள் திருக்கேதாரம், பத்திரிகாசிரமம், கங்கோத்ரி, யமுனேத்ரி, அமரநாதம், பசுபதிநாதம் என்பன மிகவும் பெயர்பெற்றவை. இவற்றிற்கு யாத்திரை செல்வது இக்காலத்தில் அத்துணை அருமையுடையதன்று. இவற்றிற்குச் செல்லும் வழிகள் இப்பொழுது மிகவும் செப்பம் செய்யப்பட்டிருக்கின்றன. அஞ்சத் தக்க அபாயம் ஏதும் இவ்வழிகளில் இல்லையென்றே கூறலாம். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இவற்றிற்குச் சென்று வருகின்றனர். முதியவர்களும் மகளிருங்கூட இன்று இத் தலங்கட்கு எளிதில் சென்று மீள்கின்றனர்.

இமய மலைக்கு மணிமுடியாக இருப்பது கயிலையங்கிரி. இது பேரிமயத்திற்கு அப்பாலுள்ள எல்லை கடந்த இமயத்தில் இருக்கின்றது; இமய மலையின் வடசாரலில் மேற்குத் திபேத்தில் அமைந்துள்ளது. இதன் அருகில் மானஸசரோவரம் என்னும் பெரிய தடாகம் ஒன்று உள்ளது. அழகில் அதற்கு ஒப்பான தடாகம் உலகத்தில் வேறு இல்லை என்று

கயிலையின் சிறப்பு

உலகம் அறிந்தோர் கூறுகின்றனர். கயிலாயமும் மானஸசரோவரமும் சேர்ந்து கௌரி சங்கர் என்று சொல்லப்படுகின்றன. கயிலாயம் சிவசொரூபமாகவும் மானஸசரோவரம் சக்தி வடிவாகவும் காட்சியளிக்கின்றன. கயிலாயம் இயற்கையன்னையின் இதயம் போன்றது. இமய மலையை இறைவன் திருக்கோயில் எனின், இக்கயிலாயத்தை அவ்விறைவன் மூர்த்தி வைகும் மூலத்தானம் எனலாம். இஃது இயற்கையாகவே பாரமார்த்திக உண்மையை விளக்கிக் காட்டும் கோயில் போன்று அமைந்துள்ளது. ஆன்ம ஞானத்தின் பிழம்பாக விளங்கும் இமயமலையின் முடியிலுள்ள இக் கயி

லாயம் அவ்வான்ம ஞானத்தின் முடிந்த முடிவாகிய இறைவன் திருவுருவினைக் காட்டி நிற்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாகவே நம் மூதாதையர் தம் உட்கண்ணால் இதன்கண் இறைவனது இன்பத் திருவுருவினைக் கண்டு அன்பு செய்து வந்திருக்கின்றனர். அவர்கள் இதனைப் பாரத நாட்டின் பழம்பெருந் தெய்வமாகிய சிவபெருமான் உறையும் திருப்பதியாகக் கொண்டனர்; அப்பெருமான் இங்கிருந்தே தன் மூர்த்தியை நாடெங்கும் பரப்பியதாகக் கருதினர். இதன் அமைப்பையும் தோற்றத்தையும் கொண்டே அப் பெருமானுக்குக் குணமும் குறியும் குறித்தனர். இதன் தோற்றத்தினின்றும் அவர்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணமே நாளடைவில் நாடெங்கும் காணும் சிவாலயங்களாகப் பரிணமித்தது. இது தனது இயற்கைச் சக்தியால் நம் முன்னோர்களின் உள்ளத்தைக் கவர்ந்து அவர்களைத் தன்பால் ஈர்த்தது. அவர்கள் இதன்கண் இறைவன் திருக்கோலத்தினைக் காண விழைந்து தம் உயிரையும் இழக்கத் துணிந்தனர். "ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண் டல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று உறுதிகொண்டு இதனை நோக்கிச் சென்றனர். இது தொன்று தொட்டுப் பாரத மக்களால் மிகச் சிறந்த க்ஷேத்திரமாகப் பக்தியோடு பாராட்டப் பட்டு வந்துள்ளது. பழங்காலத்தில் முற்றத் துறந்த முனிவர்கள் பலர் இதனை அடைந்து இங்குத் தவம் செய்து வந்தனர். அமரர்களும் அசுரர்களும் சிவபெருமான் அருள் வேண்டி இதன்கண் தவம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவர்கள் தவம் செய்த இடங்கள் இன்றும் இங்குக் காட்டப் படுகின்றன.

இங்ஙனம் இது நம் மூதாதையர் உள்ளத்தில் எழுந்த கடவுள் நினைவுகளை நம்மை நினைப்பித்து, அவர்கள் கண்ட கடவுட் காட்சியை நமக்கும் வழங்கி வருகிறது. கடவுள் அன்பு இல்லாதவர்களும் கயிலையைச் சென்று காணின் அவ்வன்பு வெள்ளத்தில் மூழ்கித் தம்மை மறப்பர். உலகிலேயே அற்புதமான இடமாகிய இதன்கண் இறைவனின் அற்புதச் சக்தி ஒளிவிட்டுத் திகழ்கின்றது. காலையும் மாலையும், இரவும் பகலும் ஆகிய வேளைதோறும் இதன் புறத் தோற்றத்தில் உண்டாகும் விதம் விதமான வேறுபாடுகளும், அவ்வேறுபாடுகளுக்கிடையே மாறுபாடின்றி மிளிரும் இதன் அகநிலையும், இதன்கண் ஒளிரும் அருள் ஒளியும் எத்தகையோர் உள்ளத்திலும் கடவுள் உணர்ச்சியை எழுப்பி, அதன் அருட் சக்தியை உணர்த்தும் பெற்றி வாய்ந்தவை ஆகும்.

கயிலாயம் இந்துக்களுக்கே அன்றிப் பௌத்தர்களுக்கும் புண்ணியத் தலமாகப் பொருந்தியுள்ளது. இந்துக்களைப் போன்றே பௌத்தர்களும் இதனைத் தங்கட்குரிய புனித க்ஷேத்திரமாகப் போற்றி வருகின்றனர். திபேத்தில் உள்ளவர்கள் அனைவரும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கட்குக் கடவுள் வழிபாடு இல்லை. ஆயினும் அவர்கள் கயிலாய கிரி, மானஸசரோவரம் இவற்றின்பால் கொண்டுள்ள பக்தி வியத்தற்குரியது. அவர்கள் இந்துக்களோடு சேர்ந்து கயிலையைச் சிவபெருமானது உறைவிடம் என்று கூறுகின்றனர். சிவ பதவி என்பதையும் மகா நிர்வாணம் என்பதையும் அவர்கள் ஒன்றாகவே கருதுகின்றனர். தங்கள் முன்னோர்களில் பலர் கயிலையில் சிவபதவி அடைந்திருப்பதாக இந்துக்கள் கருதுவதுபோலவே புத்தர்களில் பலர் அங்கு

மகாநிர்வாண நிலையை எய்தியுள்ளனர் என்று அவர்கள் கூறுகின்றனர். இந்தியாவினின்றும் கயிலைக்குச் செல்வோர்பால் அவர்கள் பேரன்பு காட்டுகின்றனர். அவர்கள் கயிலையைப் பற்றித் தங்கள் நாட்டில் வழங்கும் ஐதிகங்களை இந்தியாவினின்று செல்வோர்க்கு எடுத்துக் கூறுகின்றனர். இராவணனைப் பற்றிய பல செய்திகள் திபேத்தில் வழங்கி வருகின்றன. கயிலையை எடுத்துச் செல்ல இராவணன் வந்ததும், தவம் செய்ததும், கயிலையை எடுக்க முயன்றதும் ஆகிய செய்திகள் அங்குப் பெருவழக்காக வழங்கி வருகின்றன.

இமயப் பெருமலையால் இடையில் பிரிக்கப்பட்டுள்ள இந்தியாவையும் திபெத்தையும் கயிலை மால்வரை ஒன்றாக இணைத்து நிற்கிறது. இந்தியரும் திபேத்தியரும் கயிலாயத்தில் ஒன்றுகூடி ஒற்றுமை காண்கின்றனர். இவ்விரு நாடுகளின் பழைய நினைவுகட்கு நிலைக்களமாக இருந்துகொண்டு, இவ்விரு சமூகங்களின் பழைய உறவினை இது புதுப்பித்து வருகிறது. இந்து மதம், புத்த மதம் ஆகிய இவ்விரு பெருஞ் சமயங்களும் ஓர் உண்மையினின்றும் கிளைத்தவையே என்பதையும், முடிவில் இவ்விரண்டும் அவ்வோர் உண்மையை நாடி அதன் கண்ணே ஒன்றுகின்றன என்பதையும் இது நமக்கு உணர்த்தி நின்றது.

2. வழியும் செலவும்

கயிலாயம் பேரிமயத்தின் வடசாரலில் மேலைத் திபேத்தில் உள்ளது என்பது முன்னர்க் கூறப்பட்டது. கயிலாயத்திற்குச் செல்வோர் அப் பேரிமயத்தைக் கடந்தாகவேண்டும். அஃது என்றைக்கும் உருகாத உறைபனியை உடையது. அதனைக்கடந்து வடபுறம் செல்லுதற்கு வசதியான

கணவாய்கள் இல்லை. உபயோகத்தில் உள்ள ஒரு சில கணவாய்களும் வேனிற் காலத்திலேயே வழி விடும். மற்றக் காலங்களில் அவை உறைந்த பனி யடையால் அடைபட்டுக் கிடக்கும். ஆகவே, கயிலாய யாத்திரை இன்றும் அருமையுடையதாகவே இருக்கின்றது. சில ஆண்டுகட்கு முன்னர் வரையில் கயிலாயம் சென்றவர்கள் மிகச் சிலரே. இரண்டு மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை யாரேனும் ஒருவர் இருவரே இதற்குச் சென்று வந்தனர். அவ்வாறு சென்றவர்களிற் சிலர் வழியிடையில் விபத்துக்குள்ளாகி உயிரிழப்பதும் உண்டு. வட நாட்டு வயிராகிகள் கயிலாய யாத்திரையில் உயிர் விடுவதை ஒரு புண்ணிய கருமமாகக் கருதி அதனை மேற்கொண்டு மடிந்து வந்தனர். இதனைக் கண்டே மேனாட்டு அறிஞர்கள், 'சிறிது காலத்திற்கு முன்னர்வரை இந்து பக்தர்கள் உயிரை விடுவதற்கென்றே இமய மலையை நாடிச் சென்றனர்' என்று கூறுவாராயினர். சில ஆண்டுகளாக இதற்குச் செல்லும் வழிகள் சிறிது சிறிதாகச் செப்பனிடப்பட்டு வருகின்றன. இப்பொழுது வழியின் நிலைமை ஓரளவு சீர்பட்டுள்ளது என்றே சொல்லலாம். இன்று இதன் வழி கடக்க முடியாத அத்துணை அருமையுடையதாகவும் இல்லை; யாத்திரையிற் கருத்தும் துன்பங்களைத் தாங்கும் உறுதியும் இல்லாதவர்களும் உல்லாசமாகச் செல்லக் கூடிய அத்துணை எளிமையுடையதாகவும் இல்லை. யாத்திரையே கருத்தாக மெய்வருத்தம் பாராது செல்வோர்க்கே இதனைக் கடத்தல் இயல்வதாகும். இன்று நம் நாட்டின் பல்வேறு பாகங்களினின்றும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மக்கள் கயி

கயிலாய வழிகள்

லாயத்திற்குச் சென்று மீள்கின்றனர். மகளிரிலும் பலர் இவ் யாத்திரையில் கலந்துகொள்ளுகின்றனர். இன்னும் சில்லாண்டுகளில் இவ் யாத்திரை மிகவும் எளிதாவதோடு பெருவழக்காகவும் ஆவதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

நம் நாட்டினின்றும் கயிலாயத்திற்குச் செல்லப் பல வழிகள் இருக்கின்றன. வடமேற்கில் உள்ள காஷ்மீரம் என்னும் சமஸ்தானத்தின் தலை நகரமாகிய ஸ்ரீநகரினின்று கிழக்குத் திசையாகக் கயிலாயத்துக்கு ஒரு வழி செல்லுகின்றது. இது மிகவும் தூர வழியாகும். ஆகவே, இது யாத்திரை செல்வோர்க்கு ஏற்றதன்று. டெஹரி சமஸ்தானத்தில் உள்ள கார்வால் என்னும் இடத்தினின்று மற்றொரு வழி செல்லுகின்றது. சிம்லாவினின்றும் ஷிப்கி கணவாய் வழியாகச் செல்லும் இன்னொரு மார்க்கமும் உள்ளது. கங்கை நதி உற்பத்தியாகும் கங்கோத்ரி என்னும் தலத்தினின்று நீலக் கணவாய் வழியாக ஒன்றும், பத்ரிகாசிரமம் என்னும் க்ஷேத்திரத்தினின்றும் மானக் கணவாய் வழியாக மற்றொன்றுமாக வேறு இரு மார்க்கங்களும் செல்லுகின்றன. பத்ரிகாசிரமத்தினின்று செல்லும் வழியில் தெலிங்கமடம் என்னும் புகழ்பெற்ற திபேத்திய பௌத்த மடாலயம் ஒன்று உள்ளது. பத்ரிகாசிரமத்திற்குக் கீழே இருபது மைல் தூரத்தில் ஜகத்குரு ஆதி சங்கரால் அமைக்கப்பட்ட ஜோதிமடம் இருக்கிறது. அதினின்றும் நீதிக் கணவாய் வழியாக ஒரு மார்க்கம் கயிலாயத்திற்குச் செல்லுகின்றது. இக் கூறப்பட்டவை யாவும் பெயரளவில் வழிகளாகக் கூறுதற்கு உரியனவேயன்றி யாத்திரை செல்வோர்க்கு ஏற்றன அல்ல. மலையேறுவதில் பயிற்சியுள்ள அம் மலைவாழ் மக்களே இவ் வழிகளில் செல்லுதல் கூடும்.

கயிலாயத்திற்கு யாத்திரை செல்ல விரும்பும் நம்மனோர்க்கு அல்மோராவினின்றும் தொடங்கி லிப்புத் தடாகக் கணவாய் வழியாகச் செல்லும் மார்க்கமே ஏற்றதாகும். மேற்கூறிய வழிகள் அனைத்திலும் இவ்வழியே மிகக் குறைந்த தூரம் உடையது. அவ் வழிகளில் உள்ள அளவு இதில் ஆபத்து இல்லை. லிப்புத் தடாகக் கணவாய் கயிலைக் கோயிலுக்கு அமைந்த வாயில் போன்றுள்ளது. குளிர் காலத்தில் இது பனிக்கட்டியால் முற்றிலும் மூடப்பட்டு விடுகின்றது. அக்காலத்தில் இதனைக் கடந்து திபேத்தில் புகுதல் இயலாது. இளவேனிற் காலத்தில் பனிக்கட்டி உருகத் தொடங்கி, முதுவேனிற் காலத்தில் பெரும்பாலும் அகன்றுவிடும். அப்பொழுது இக்கணவாய் திறக்கப்படும். இது திறக்கப்பட்டதும் திபேத்தினின்றும் வணிகர்கள் இதனைக் கடந்து இந்தியாவுக்கு வரத் தொடங்குவர். அச் செய்தி அல்மோராவை எட்டியதும் அதனை எதிர் நோக்கி அங்குக் காத்திருக்கும் யாத்திரிகர் தங்கள் யாத்திரையைத் தொடங்குவர். ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மூன்று மாதங்களே இவ் யாத்திரைக்கு ஏற்ற காலமாகும். அக்காலத்திற்குள் யாத்திரையை முடித்துக்கொண்டு மீளுதல் வேண்டும்.

லிப்புத் தடாகக் கணவாய் வழி

கயிலாயத்திற்கு யாத்திரை செல்ல விரும்புவோர் சில மாதங்கள் முன்கூட்டியே அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுதல் வேண்டும். யாத்திரைக்கு உடன் கொண்டு செல்லுதற்குரிய பொருள்களை அறிந்து சேகரித்துக்கொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். கூடுமாயின் முன்னரே அவ் யாத்திரை

ஆயத்தம்

சென்று வந்தவர்களை அணுகி அவர்கள் அனுபவங்களை அறிந்து, அவர்களுடைய ஆலோசனையைப் பெறுவது மிகவும் உதவியாக இருக்கும். இமயமலைப் பிரதேசம் முற்றிலும் மாறுபட்ட தட்ப வெப்ப நிலை உடையது. பனி உறைந்து குளிர் மிகுந்த அப்பிரதேசத்தில் இரண்டு மாதகாலம் பிரயாணம் செய்ய வேண்டும். ஆகையால் அதற்கு வேண்டும் பொருள்களை ஆராய்ந்து தெரிந்து உடன்கொண்டு செல்லாவிடில் இடைவழியில் இடுக்கண்படுவர். மக்களுக்கு உணவும் உடையும் இன்றியமையாதவை. உண்ணும் பொருள்கள் பிரதேசந்தோறும் வேறுபடும். ஒருவகை உணவை உண்டு பழகியவர்கள் வேறு வகை உணவை உட்கொள்ள ஒருப்படார். இத்தகையோர்க்குக் கயிலாய யாத்திரை இயல்வதன்று. மற்றப் பிரதேசங்களில் கிடைக்கும் பொருள்களில் பல அங்குக் கிடைத்தல் அரிது. அவை அப்பிரதேசத்தின் தட்ப வெப்ப நிலைக்கு ஒவ்வாதனவும் ஆகும். ஆகவே கயிலாயத்திற்குச் செல்ல விரும்புவோர் தமக்குப் பழக்கமில்லாத உணவையும் ஏற்று உட்கொள்ளத் தம் மனத்தை இசைவித்துக் கொள்ளவேண்டும். இமய மலையின் மேலே செல்லச் செல்லப் பருப்பு, அரிசி போன்ற பொருள்கள் உதவா. திபேத்துப் பிரதேசத்தில் பருப்பு வேகாது. அரிசியும் உலையில் இருக்கையில் சோறாகத் தோன்றுமே அன்றி, அடுப்பினின்று இறக்கியதும் ஊறிய அரிசி போன்று உருமாறிவிடும். ஆகவே அங்கு பூரி, சப்பாத்தி போன்ற கோதுமை உணவையே உட்கொள்ள வேண்டும்.

இமயமலையில் உருளைக் கிழங்கும் வெங்காயமும் நீங்கலாக வேறு காய்வகைகள் கிடையா. ஆதலால் வற்றல், மசாலைத்தூள் முதலியவைகளை இங்

கிருந்தே செய்து கொண்டுபோதல் வேண்டும். அவரவருக்கு விருப்பமானவையும், நெடுநாளைக்குக் கெடாதிருக்கக் கூடியவையுமான தின்

உணவு

பண்டங்களும் வேண்டிய அளவு செய்து கொள்ள வேண்டும். நன்கு தயாரிக்கப்பட்ட ஊறுகாயும், உப்பிட்டு ஊற வைத்து உலர்த்தப்பட்ட மாங்காய் வற்றலும் மிகவும் இன்றியமையாதவை. வழியில் பால் தயிர் இவை கிடைப்பது அரிதாகலின், உறைந்த பால்புட்டிகள் வேண்டுமளவு கொண்டு செல்லுதல் நல்லது. செல்லும் பிரதேசத்திற்குரிய உணவுகளை மனத்திற் கொண்டு அவற்றைச் சமைப்பதற்கு வேண்டும் பாத்திரங்களைத் தெரிந்து சேகரித்துக் கொள்ள வேண்டும். இலேசான அலுமினியப் பாத்திரங்களே இவ் யாத்திரைக்கு ஏற்றவை. இமயமலையில் செல்லும் இடங்களில் எல்லாம் உணவு சமைக்க அடுப்பும் விறகும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. திபேத்தில் விறகே கிடைக்காது. ஆகவே மண்ணெண்ணெய் அடுப்பு மிகவும் அவசியமானதாகும். இவ்வனைத்தினும் மிகவும் இன்றியமையாதது வெப்பம் காக்கும் குப்பி. அதன் துணையின்றிக் கயிலாய யாத்திரை நடவாது.

கயிலாயம் செல்வோர் உணவிற் போலவே உடையிலும் தங்கள் பழக்கத்தைக் கைவிட வேண்டும் குளிர்மிக்க இமயமலைப் பிரதேசத்தில் பருத்தி உடையோடு பிரயாணம் செய்ய முடியாது. பழக்கமான பருத்தி உடைகளோடு போதுமான கம்பள உடைகளும், போர்வைகளும்

உடை

உடன்கொண்டு செல்ல வேண்டும். கம்பள உட்சட்டை, காற்சட்டை, கையுறை, காலுறை, விரிப்பு, போர்வை

இவை இமயச் செலவிற்கு இன்றியமையாதவை. இவை வெப்பம் மிக்க தென்னாட்டில் உரிய விலைக்குக் கிடைப்பது அரிது. குளிர்மிக்க வடநாட்டில் இவற்றைக் குறைந்த விலைக்கு எளிதில் பெறலாம். உறுதியாகச் செய்யப்பட்ட செருப்பும், புறங்காலையும் சேரமூடும் பூட்சும், கூர்மையான இருப்புப்பூண் இட்ட ஊன்றுகோலும், குடையும் மிகவும் அவசியமான பொருள்களாகும். காணும் காட்சிகளையும், சந்திக்கும் மக்களையும், தங்கும் இடங்களையும் படமெடுத்துக் கொள்ளப் புகைப்படக் கருவியும், அதற்கு வேண்டும் படத்தாள்களும் கொண்டுசெல்ல வேண்டும். மலைச் செலவினிடையே அவ்வப்போது உண்டாகும் சிறு பிணிகட்குரிய மருந்து வகைகளை மறவாது கொண்டுபோக வேண்டும். முற்காலத்தில் யாத்திரை செய்தவர்களுக்குப் போதிய உணவும், உடையும், மருந்தும் இல்லாமையாலேயே அவர்கள் யாத்திரையை முடிக்க மாட்டாமல் தாங்களே முடிந்து வந்தனர். இவை யாவும் வாய்க்கப் பெற்றுள்ள இக்காலத்தில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்வோர் யாத்திரையை இனிது முடித்தல் இயலும்.

கயிலாய யாத்திரை ஏழைகட்கும் மெலிந்தோருக்கும் ஏற்றதன்று. செல்வரும் வலியருமே அதனை மேற்கொள்ளக் கூடும். மிகவும் குறைவாகச் செலவு செய்யும் இயல்புடைய நால்வர் அல்லது ஐவர் கூடி அல்மோராவினின்றும் கயிலைக்குச் சென்று, மீண்டும் அவ்விடம் வந்து சேரக் குறைந்த அளவு ஒவ்வொருவருக்கும் இருநூறு ரூபாய் செலவாகும். ஒவ்வொருவரும் நானூறு ரூபாய் செலவு செய்யின் துன்பம் நிறைந்த அவ்

பொருட் செலவு

யாத்திரையை இன்ப யாத்திரையாகச் செய்து முடிக்கலாம். உணவு, உடை, மருந்து முதலிய பொருள்களை வாங்கவும், கூலியாட்களையும் குதிரைகளையும் அமர்த்திக் கொள்ளவுமே இத்தொகை செலவாகும். கயிலை வழிபாட்டுக்காக யாத்திரிகர்கட்கு எவ்வித செலவும் இல்லை. கயிலைக்கு வழிபாடு செய்துவரும் பௌத்த லாமாக்கள் அதனைத் தங்கள் கடமையாகக் கருதிச் செய்து வருவதால் அவர்கள் அதற்காக யாத்திரிகர்களிடம் பொருட் பயனை எதிர்பார்ப்பதில்லை.

கயிலைக்குச் செல்வோர் முக்கியமாகக் கடைப் பிடிக்க வேண்டுவன சில உள. அவர்கள் இடத்திற்கு ஏற்ற உடையை உடுக்கவும், உணவை உட்கொள்ளவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

சில எச்சரிக்கைகள்

அரை வேட்டி, மேலாடை இவற்றோடு கயிலாய யாத்திரை செய்வது இயலாது. கம்பளத்தால் ஆன உடற்சட்டை, கால் சட்டைகளை அணிந்து கொள்ள வேண்டும். மலை வழியில் கூரான கற்களின் மேல் நடந்து செல்லவேண்டுமாகலின் காலிற் செருப்பின்றிப் பிரயாணம் செய்யலாகாது. பனியும் குளிரும் மிக்க இடங்களில் செருப்பும் பயன்படாது. அவ்விடங்களில் காலுறையும் பூட்சும் அணிந்துகொள்ளவேண்டுவது மிக அவசியமாகும்.

இமயமலைக்குப் புதியதாகப் போவோர் தண்ணீரைப் பருகலாகாது. எந்நீரையும் காய்ச்சி வெந்நீராக்கியே பருகுதல் வேண்டும். சில நாட்கள் பழகிய பின்னர் ஊற்று நீரை வேண்டுமாயின் ஒரோவழிக் காய்ச்சாமலும் குடிக்கலாம். எப்பொழுதும் ஆற்று நீரை மட்டும் காய்ச்சியே குடிக்க வேண்டும். வழியில் சில இடங்களில் ஊற்று நீர்

கிடைக்காது. ஆறு அண்மையிலேயே ஓடும். வெயிலில் வழி நடந்து செல்வோர்க்கு அக் குளிர்ச்சி மிக்க ஆற்று நீரை அருந்துவது இன்பமாக இருக்கும்; ஆயின் அது பின்னர்த் துன்பமாக முடியும். இமய மலையில் உள்ள ஆறுகளில் பெருகும் நீர், உருகிய பனிக்கட்டியினின்றும் ஊறி வருவதாகையால் அதனை உட்கொள்ளின், அதன் விறுவிறுப்பைத் தாங்கும் பழக்கமில்லாத நம் வயிறு ஊறுபடும். அது நம் குடரை நலிவித்து வயிற்றுக் கடுப்பையும், இரத்த பேதியையும் உண்டாக்கும். வழியில் சில ஊர்களில் கண் வலி, கழுத்து முடிச்சுப் போன்ற நோய்களால் வருந்துபவர்களைக் காணலாம். அவ்விடங்களில் நீரைக் காய்ச்சிப் பருகுதலே நலம். அன்றியும் எங்கும் தண்ணீரில் நெடுநேரம் துளைந்து நீராடலாகாது. வழியிற் காணும் கனிகளையெல்லாம் பறித்துக் தின்னலாகாது. வனத்திலுள்ள கனிகளில் சில விஷத்தன்மையுடையவை. அவற்றைப் பற்றி அங்குள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். வழியிடையே ஆங்காங்குச் செழித்து வளர்ந்திருக்கும் செடிகளில் சில நச்சுத் தன்மை வாய்ந்தவை. அவை உடலிற் பட்டவுடனே பட்டவிடம் தடித்து அரிப்புண்டாக்கும். ஆகவே அத்தகைய செடிகளை அறிந்து, உடலிற் படாதவாறு ஒதுங்கிச் செல்ல வேண்டும்.

செங்குத்தாக நிமிர்ந்து செல்லும் ஒடுங்கிய வழிகளில் நடந்து செல்கையில் இடையிடையே ஆட்டு மந்தைகளையும் குதிரைகளையும் கடக்க நேரும். அச்சமயங்களில் முன்னுற விரைந்தோ, அல்லது பின்னுறத் திரும்பியோ சென்று, வழி சிறிது அகன்றுள்ள இடத்தில் சுவர்போலச் செங்குத்தாக

உயர்ந்திருக்கும் பக்கமாக ஒதுங்கி ஒடுங்கி நிற்க வேண்டும். தாழ்வான சரிவின் ஓரத்தில் ஒதுங்கி நிற்கவோ செல்லவோ செய்யின் அப்பிராணி களால் மோதப்பட்டுப் பள்ளத்தில் உருண்டு பாதா ளத்தில் வீழ்ந்து விடுவர். அங்ஙனம் வீழ்ந்தோர் வீழ்ந்தோரே; மீண்டு எழுந்து வருதல் இலர்.

வழியில் ஆங்காங்கு அமர்த்திக்கொள்ளும் கூலிகட்கும் குதிரைகட்கும் வழங்குதற்குரிய கூலிக்கு, வழக்கமான அளவு உண்டு. அதனை அறிந்து அவ்வளவே வழங்குதல் வேண்டும். அதனைக் கூட்டவோ குறைக்கவோ செய்யவேண் டுவதில்லை. உண்மையாக உதவிசெய்வோரை மகிழ் விக்க வெகுமதி வழங்கலாம். இவ்யாத்திரை மேற் கொள்வோர் கருத்திற் கொண்டு கடைப்பிடிக்க வேண்டுவது மற்றொன்று உண்டு. பாண்டவர்கள் தங்கள் வாழ்க்கையின் இறுதியில் கயிலாய யாத் திரை சென்றபோது தருமர் ஒருவரே கயிலை போய்ச் சேர்ந்தார் என்றும், ஏனையோர் இடை வழியிலேயே தடையுற்று ஒழிந்தனர் என்றும் பாரதம் பகர்கின்றது. இதன் உண்மையை இன் றும் கயிலைக்குச் செல்வோர் தம் அனுபவத்திற் காணலாம். மலைவழியில ஏறிச் செல்கையில் எக் காரணம் கொண்டும் பின்னுறத் திரும்பிப் பாராது முன்னோக்கியவாறே முனைந்து செல்வோர்தாம் முன்னேறிச் செல்லுதல் கூடும். இடையில் பின் புறமாகத் திரும்பிப் பார்த்துவிடின் மேலே ஓரடி யும் செல்ல மாட்டாது அல்லற்பட நேரும். மலையில் ஒவ்வோர் அடியும் முயன்று வருந்தி நடந்து கடக்கப் படுவதாகலின் அங்ஙனம் கடக்கப்பட்ட வழியில் ஓர் அடியும் பின்னிடலாகாது. அவ்வாறே நம் முன் இருக்கும் காலத்தின் ஒவ்வொரு கணமும் விரைந்து

பயன்படுத்திக்கொள்ள வேண்டுவதாகலின் கண நேரத்தையும் பயனின்றிக் கழியவிடலாகாது. இங்ஙனம் கடந்த வழியையும், கழியவிருக்கும் காலத்தையும் வீணாக்காமல் வழியிடையில் இடையூறுகளால் தடை நேராவாறு விழிப்புடனும், உறுதியுடனும், கடவுளிடத்துக் கலங்காத பக்தியுடனும் முன் நோக்கிச் செல்வோர்க்கே இச்செலவு இனிது முற்றுப் பெறும்.

இமயமலையின் அடிவாரம் சென்னையிலிருந்து சற்றேறக் குறைய ஆயிரத்தெழுநூறு மைல் தூரத்தில் உள்ளது. அங்குள்ள அல்மோராவிலிருந்தே கயிலாய யாத்திரை தொடங்குகிறது.

வழிக் காட்சி

இவ்விடைவழியில் நாட்டின் பல்வேறு இடங்களில் வெவ்வேறு இனங்களாகப் பிரிந்து வாழும் இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கு கூடி ஒற்றுமை காணச் செய்யும் பழம் பெருமை வாய்ந்த க்ஷேத்திரங்களும், ஆங்காங்கு இந்திய மக்களின் கடவுள் பக்தி, கலைத் திறன் ஆகியவற்றின் வளர்ச்சியைக் காட்டும் தெய்வத் திருக்கோயில்களும், பாழடைந்த நகரங்களும், சிதைந்த கோட்டைகளும், மலைகளும், ஆறுகளும் தோன்றித் தாய் நாட்டின் ஆன்மிக, பௌதிகப் பெருமைகளை உணர்த்தி யாத்திரிகர்கட்கு உறுதியும் ஊக்கமும் மிகுவிக்கும். சென்னையினின்று செல்வோர் முதலில் டெல்லி மாநகரிலும், பின்னர் மொராதபாத், பரீலி என்னும் சந்திப்புக்களிலும் வண்டி மாறவேண்டும். கயிலை யாத்திரை செல்வோர்க்குக் காத்கோடம் என்னும் நிலையத்தோடு இரயில் வண்டிப் பிரயாணம் முடிவுபெறும். இமயமலைச் சரிவிலுள்ள பெரிய ஊர்களாகிய நைனித்தால், ராணிக்கேட், அல்மோரா ஆகிய இடங்கட்குச் செல்

வோர் இங்கு இறங்கி மோட்டார் வண்டியில் செல்ல வேண்டும். காத்கோடத்தினின்று அல்மோரா நூறுமைல் தூரத்தில் உள்ளது. மோட்டார் வண்டி செல்வதற்கான நல்ல பாதை உள்ளது. அது நைனித்தால், ராணிக்கேட் ஆகியவற்றின் வழியாக அல்மோராவிற் சென்று சேர்கிறது.

அல்மோரா இமய மலையில் கடல் மட்டத்துக்கு மேல் 5,600 அடி உயரத்தில் உள்ளது. இதில் சற்றேறக் குறைய 10,000 மக்கள் வாழ்கின்றனர்.

அல்மோரா

இஃது ஒரு மலையின் மேற்பாகத்தில் நீண்டு அழகாக அமைந்திருக்கிறது. இஃது அமைதிக்கும் ஆரோக்கியத்திற்கும் பெயர்பெற்ற இடமாகும். இதனைப் பரிபாலிக்க நகரசபை உள்ளது. இதில் உள்ள பழைய கோட்டைக்குள் அரசாங்கக் காரியாலயங்கள் பல இருக்கின்றன. இங்கு இரண்டாந்தரக் கல்லூரி ஒன்றும், உயர்நிலைப் பள்ளிகள் இரண்டும் உள்ளன. ஆட்டுமயிரைக் கொண்டு நூல் நூற்றுக் கம்பளம் நெய்யும் தொழில் இங்கு மிகுதியாக நடைபெறுகிறது.

கயிலாய யாத்திரை இவ்வூரினின்றே தொடங்குகின்றது. இவ்வூரினின்றும் கயிலைக்குச் சென்று மீண்டும் இங்கு வந்து சேர்வதற்கு உள்ள தூரம் ஐந்நூறு மைலுக்கும் அதிகமாகும். வழி மிகவும் குறுகியது; இடையில் பல ஏற்றங்களும் இறக்கங்களும் உள்ளன. வண்டி முதலியன அவ்வழியிற் செல்லா. அத்துணைத் தூரமும் நடந்தே செல்ல வேண்டும். சிற்சில இடங்களில் குதிரையின்மீது செல்லலாம். கயிலைக்குச் செல்வோர் அல்மோராவில் ஒருவார காலத்துக்குக் குறையாமல் தங்கியிருக்க வேண்டும். அத்தனை நாட்களுக்கும் அவர்

கட்கு அங்கு வேலை உண்டு. பொருள்களை எடுத்துச் செல்வதற்குக் கூலியாட்களையும் குதிரைகளையும் அங்கேயே அமர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு கூலியாள் அறுபது பவுண்டு நிறையளவும், ஒரு குதிரை நூற்றிருபது பவுண்டு நிறையளவும் பொருள்களை எடுத்துச் செல்லுவது வழக்கம். பெட்டி, படுக்கை, மூட்டைகள் முதலியவைகளை அவ்வளவு நிறைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். குதிரைமீது கொண்டுசெல்லும் பொருள்கள் பெரிதும் பழுதுபடும். ஆகவே உடையக்கூடிய பொருள்களைக் குதிரைமீது ஏற்றலாகாது.

அல்மோராவினின்று கயிலை சென்று மீள எழு வார காலம் செல்லும். ஆகவே எட்டு வாரங்களுக்கு வேண்டும் அளவு உணவுப் பொருள்களைத் திட்டப்படுத்தி எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் வழியிடையில் எதிர்பாராத இடையூறு ஏதேனும் நேர்ந்து, அதனால் செலவு தடைப்படுமாயின் குறித்த காலத்திற்குள் மீளல் இயலாது. நமக்கு வேண்டும் உணவுப் பொருள் ஏதும் இடைவழியில் கிடைக்காது. வருந்தி வழி நடப்பதால் உட்கொள்ளும் உணவின் அளவும் மிகும். ஆகவே சத்துள்ள உணவுப் பொருள்களைச் சிறிது மிகுதியாகவே கொண்டு செல்லுதல் வேண்டும். போதுமான அளவு கம்பள விரிப்புகள், போர்வைகள், உடைகள் ஆகியவற்றை அல்மோராவிலேயே சேகரித்துக் கொள்ளவேண்டும். செருப்பு, பூட்சு ஆகியவைகளும் அங்கேயே கிடைக்கும். கூர்மையான இருப்புப் பூண் இட்ட ஊன்றுகோலை மறவாமல் வாங்கிக்கொள்ள வேண்டும். உடன் கொண்டு செல்லுதற்குரிய மருந்து வகைகளையும் அல்மோரா

விலேயே அறிந்து வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். கயிலாய யாத்திரை செல்வோர்க்கு உதவி செய்யும் சமிதி ஒன்று அல்மோராவில் உள்ளது. அதன் உதவிகொண்டு இவ்வேற்பாடுகளை எளிதில் செய்து கொள்ளலாம்.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கயிலேக்குச் செல்வோர் அனைவரும் அல்மோராவில் வந்து கூடுவர். அனைவரும் ஒருசேர ஒரு காலத்திலேயே சென்றால் மலைவழியில் உள்ள வீடுகளில் தங்குவதற்கு இடம் கிடைக்காது. ஆகவே யாத்திரிகர் முதலில் பதின்மருக்கு மேற்படாத சிறு குழுவினராகப் பிரிந்து நூறு மைலுக்குக் குறையாமல் முன் பின்னுகச் செல்லவேண்டும். பின்னர்க் கூடாரத்தில் தங்கவேண்டிய வீடு இல்லாத உறைபனிப் பிரதேசத்தை அடைந்ததும் அனைவரும் ஒன்றுகூடிச் சேர்ந்து செல்லுதல் நலம். பொருள்களை நிறை செய்து கூலியாட்களிடம் ஒப்படைத்து அவர்கள் அமளியை அடக்கிப் பயணத்தைத் தொடங்குவது கடினமான செயலாகும். வழியிடையிலும் அடிக்கடி அவர்களோடு போராடாமல் செல்ல முடியாது. இடையிடையே அவர்களுக்குள் எழும் போராட்டத்தை அடக்கவும் வேண்டும். கயிலாய யாத்திரையில் உள்ள தவிர்க்க முடியாத தொல்லை இது. இதற்காக மனம் சலிப்போர் கயிலாய யாத்திரைக்குத் தகுதியுடையவர் ஆகார்.

கயிலாய யாத்திரை, யாத்திரைகளில் ஒப்பற்றது. வாழ்க்கையில் பெறுதற்கரிய அனுபவங்களை இவ் யாத்திரையில் பெறலாம். காண்டற்கு அரிய காட்சிகளும், பொறுத்தற்கு அரிய துன்பங்களும், மீளுதற்கு அரிய ஆபத்துக்களும் நிறைந்த இதனைச் செய்தற்கு அரியதொரு தவமாகவே கூறலாம்.

ஏனைத் தவம் போல இதனையும் உறுதியான கடவுள் நம்பிக்கையோடு தொடங்க வேண்டும்; கடவுள் தியானத்தோடு செய்யவேண்டும். அங்ஙனம் இதனைத் தொடங்கிச் செய்வோரே இதன் பயனாகிய இன்பம் மிக்க அனுபவங்களை எய்துவர்.

3. மலை வழி

அல்மோராவோடு நவீனப் பிரயாண சாதனங்கள் நின்றுவிடும். அங்கிருந்தே கயிலாய யாத்திரையின் கால்நடைப் பிரயாணம் தொடங்குகிறது. அல்மோராவின் தெருக்களைக் கடந்ததும் வழி குறுகிவிடுகிறது. வண்டி முதலிய ஊர்திகள் அவ்வழியில் செல்லா. நடந்து செல்லும் மக்களும்,

பரிச்சீறு

மூட்டை சுமந்து செல்லும் குதிரைகளுமே அதில் செல்லக் கூடும். அல்மோராவிலிருந்து எட்டு மைல்கள்வரை வழி முழுவதும் சம நிலத்திலேயே செல்லுகிறது. வானளாவி வளர்ந்த பயின் மரக் காட்டினூடே வழி, வளைந்து வளைந்து போகிறது. இடையிடையே மலைச்சாரலைச் சமன் செய்து பண்படுத்திப் பயிர் செய்கின்றனர். எட்டு மைல்களுக்கு அப்பால் பரிச்சீறு என்னும் ஊர் உள்ளது. இமயமலைப் பிரதேசத்தில் இரு பள்ளத்தாக்குகட்கு இடையில் உள்ள மேட்டுப்பாங்கான இடம் சீறு எனப்படும். கயிலை யாத்திரை செல்வோர் தொடக்கத்தில் தொடர்ந்து நெடுந்தூரம் நடக்கலாகாது. முதற்கண் ஒவ்வொரு நாளும் குறைந்த தூரமே செல்லவேண்டும். இன்றேல் தொடக்கத்திலேயே தளர்ச்சி ஏற்பட்டுவிடும். அன்றியும் வழியிடையில் நாம் தங்கவேண்டிய இடத்தில் ஊர் கிடைக்காது. ஊர் உள்ள இடத்திலேயே தங்கி இரவைக்

கழிக்கவேண்டும். ஆகவே அல்மோராவினின்றும் புறப்பட்டவர்கள் முதல்நாள் இவ்வூரில் தங்கி இரவைக் கழிப்பர்.

பரிச்சீனுவிலிருந்து பதினோராவது மைலில் கனேரிச்சீனு இருக்கிறது. கனேரிச்சீனுவில் நெற்பயிர் செய்யப்படுகிறது. அவ்வூரினின்றும் ஐந்து மைல் சென்றதும் சாயு நதி குறுக்கிடுகிறது. அதனைக் கடக்க ஓர் அழகிய தூரிப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கடந்ததும் நான்கு மைல் தூரம் ஓர் ஏற்றம் இருக்கிறது. நெல்லி, கடுக்காய், பயின் ஆகிய மரங்கள் அடர்ந்த வனத்தினுள் வழி, வளைந்து மேல்நோக்கிச் செல்லுகிறது. பின்னர் இரண்டு மைல்கள் இறங்கியபிறகு வழி சமநிலத்திற் சென்று கனுயை அடைகிறது. கனுயில் தண்ணீர் கிடைப்பது அரிது. ஒரு குடம் நீருக்கு ஓர் அணுக் கூலி கொடுக்க வேண்டும். பேராறுகட்கெல்லாம் பிறப்பிடமாகிய பேரிமயமலையிலும் இவ்வாறு தண்ணீரை விலைக்கு வாங்கவேண்டும் இடங்கள் சில உள்ளன.

கனேரிச்சீனு-கனுய்

கனுயைக் கடந்ததும் இயற்கை அன்னை தன் முழுத் தோற்றத்தோடு காட்சி வழங்குகின்றாள். இயற்கையின் இன்ப அழகு சிறிது சிறிதாக மிகத் தொடங்குகிறது. தொடக்கத்தில் வழி ஏற்றமும் இறக்கமும் இன்றியே செல்லுகிறது. வழியிலுள்ள காடுகளில கறிவேப்பிலை மரங்கள் மிகுதியாக உள்ளன. ஓடைகளின் இருமருங்குகளிலும் பண்பட்ட பயிர் நிலங்கள் காணப்படுகின்றன. இங்கு மக்கள் நீரின் வேகத்தால் சுழற்றப்படும் எளிய இயற்கை எந்திரத்தின் உதவியால் கோதுமையை

பேரிநாகு

மாவாக அரைத்துக்கொள்ளுகின்றனர். விஞ்ஞான வாசனையே அறியாத மலைவாணர் இங்ஙனம் இயற்கையைப் பணிகொள்ளும் முறை இறும்பூது பயப்பதாகும். அல்மோராவினின்று கயிலை செல்லும் வழியில் ஒன்பது பெரிய ஏற்றங்கள் உள்ளன. மலைவாணர் ஏற்றத்தைச் சடாய் என்றும், இறக்கத்தை உத்தராய் என்றும் கூறுகின்றனர். அவ்வொன்பது ஏற்றங்களுள் முதலாவது பெரிய ஏற்றம் கனுய்க்கும் பெரிநாகுக்கும் இடையில் உள்ளது. பெரிநாகு கடல் மட்டத்துக்கு ஏழாயிரம் அடி உயரத்தில் உள்ளது. சுமார் மூன்று மைல் தூரம் மேலே வளைந்து வளைந்து ஏறவேண்டும். இவ்வழியில் ஏறிச் செல்லுகையில் நமக்கு முன்னுள்ள வழியை நிமிர்ந்து நோக்கலாகாது. நோக்கின், நாம் பாதாளத்தில் இருப்பதுபோலவும், நாம் சென்று சேருதற்குரிய இடம் ஆகாயத்தில் இருப்பதுபோலவும் தோன்றி நம்மைத் திகைப்புறுத்தும். ஆகவே நாம் போய்ச் சேர்தற்குரிய இடத்தையும் தூரத்தையும் மறந்து நம் கண்ணெதிரில் காணும் சிறிது தூரத்தையே சிந்தையிற்கொண்டு உற்சாகத்தோடு தொற்றித் தொடர்ந்து ஏறவேண்டும். வழி நெடுகிலும் வானுற வளர்ந்த பயின்மரங்கள் பந்தர் போலக் கிளைகளைப் பரப்பிக்கொண்டு வெப்பமும் வெளிச்சமும் அளவாக வடித்து வழங்கி நிற்கும். இடையிடையே மணம் பரப்பும் இளங்காற்றும், புள்ளினங்களின் மழலை ஒலியும் இளைப்பு அகற்றிக் களிப்புறுத்தும். இவ் வேற்றத்தைக் கடந்ததும் பெரிநாகு என்னும் ஊர் காணப்படும். இவ்வூர் கனுயினின்று பன்னிரண்டாவது மைலில் உள்ளது. இஃது மலை உச்சியின்மீது அமைந்துள்ளதோர் அழகிய ஊராகும். இங்கு அரசாங்கக் காட்டிலாகா

வுக்கு உரிய அழகிய வீடு ஒன்று உள்ளது. ஆங்கிலேயர் ஒருவருக்கு உரிய தேயிலைத் தோட்டம் ஒன்றும் இங்கு இருக்கிறது. இமயமலையின் பேரழகை விளக்கிக்காட்டும் இடம் இது.

பெரிநாகுவிலிருந்து ஏழு மைல் தூரம் வழி சாய்வாக இறங்கிச் செல்லுகிறது. வழிநெடுகிலும் மரம் செறிந்த பெருங்காடுகள் காணப்படுகின்றன. இவ்விடம் வருத்தம் இன்றி வழிநடத்தற்கு ஏற்ற இயற்கை அமைப்பினை உடையது.

தால்

தால் என்னும் ஊருக்கு அருகில் வழி சாய்வாக ஏறிச் செல்லுகிறது. இங்கு ராம் கங்கா என்னும் அழகிய ஆறு ஓடுகிறது. இமயமலையில் ஓடும் ஒவ்வோர் ஆறும் கங்கை எனப்படும். ராம் கங்கையின் ஓட்டத்தில் இயற்கையின் அற்புத விளையாட்டுக்களைக் கண்டு இன்புறலாம். இதனைத் தூரிப் பாலத்தின் வழியாகக் கடந்து சிறிது தூரம் சென்றதும் தால் என்னும் ஊர் காணப்படும். இவ்வூர்ப் பாடசாலையில் தங்குவதற்கு இடம் கிடைக்கும்.

தால் என்னும் ஊரைக் கடந்ததும் கயிலை வழியின் இரண்டாவது ஏற்றம் தொடங்குகின்றது. ஐந்து மைல் தூரம் நேராக நிமிர்ந்து நிற்கும் மலையின் மீது ஏறவேண்டும். எனவே இங்கு விடியற் காலத்திலேயே பிரயாணத்தைத் தொடங்குதல் நலம். கயிலை செல்வோர் இவ் வேற்றத்தில் புதுமையான அனுபவம் ஒன்றைக் காண்பர்.

டிடிஹாட்

செங்குத்தான மலைவழியில் மேல் நோக்கி ஏறிச் செல்லச் செல்ல மலையுச்சியும் உயர்ந்து கொண்டே போகும்; வழி முடிவின்றி வளர்ந்து கொண்டே செல்வது போன்று தோன்றும். சிறிது

தூரம் ஏறிச் சென்றதும் பேரிமயத்தின் பெருமுடிகளாகிய நந்தா தேவி, பஞ்ச சூலி, பிண்டரி என்பவற்றின் பெருமிதமான தோற்றம் காட்சியளிக்கும். இவ்வேற்றத்தில் செல்வோர் அவரவர் ஆற்றலுக்கு ஏற்பப் பின்தங்கியும் முன்னேறியும் தம்முள் பிரிந்து விடுவர். இதனைக் கடந்ததும் ஐந்து மைல் தூரம் வழி, அச்சம் தரும் அடவியினூடே செல்லுகின்றது. கரடி, புலி போன்ற கொடிய விலங்குகளின் ஆட்சிக்கு உரியதாகிய இவ்வடவியில் ஒடுங்கி வளைந்து செல்லும் வழியில் நடந்து செல்வோருக்கு ஒருகணம் ஒரு யுகமாகத் தோன்றும். பரிதியின் கதிர்களைக் கண்டறியாத இடங்கள் இவ்வடவியில் பல உண்டு. 'சல்' என்னும் சில் வண்டின் ஒலி, செல்வோர் உள்ளத்தில் அமைதியைக் குலைத்து அச்சத்தை எழுவிக்கும். செல்வோர் அச்சத்திற்கு இடம் தராது, இறைவன் திருநாமத்தை உருச் செய்துகொண்டே செல்ல வேண்டும். செல்லச் செல்ல அடவியின் செறிவு சிறிது சிறிதாகக் குறையும். அடவியைக் கடந்ததும் டிடிஹற் என்னும் ஊர் காண்கிறது. இஃது இயற்கை வனப்பு வாய்ந்த ஊராகும். யாத்திரை செல்வோர் இவ்வூர்ப் பாடசாலையில் தங்கலாம். ஆசிரியரும் மாணவர்களும் யாத்திரிகர்கட்கு வேண்டும் உதவிகளைச் செய்வர்.

டிடிஹற்டினின்றும் ஒன்பது மைல் தூரத்தில் ஆஸ்கோட் என்னும் ஊர் உள்ளது. இவ்வொன்பது மைல் தூரமும் வழி ஏற்றம் இறக்கம் இன்றிச் சம நிலத்திலேயே செல்கிறது. கோட் என்னும் சொல்லுக்குக் கோட்டை என்பது பொருள். அஷ்டகோட் என்பது ஆஸ்கோட் என்று திரிந்து வழங்குகின்றது. முன்னொரு காலத்தில் இங்கு எட்டுக்

கோட்டைகள் இருந்தனவாம். இன்றும் இவ்வூர் ஒரு கோட்டை போன்றே காணப்படுகின்றது. இவ்வூரில் விக்கிரம பகதூர் பால் என்னும் பெயருடைய அரசர் ஒருவர் உள்ளார். இவர் கயிலை யாத்திரை செல்வோருக்கு வேண்டும் உதவிகளை உவந்து புரிந்து வருகின்றார். இவர் உதவியின்றி இவ்வூரில் பால் கிடைக்கப் பெறுவது அரிது. இங்குப் பூட்டியர்களுடைய கடைகள் சில உள்ளன. யாத்திரை செல்வோர் தங்குவதற்குத் தருமசாலை ஒன்று உள்ளது. தபால் நிலையம் ஒன்றும் இவ்வூரில் உண்டு. இவ்வூர்க்குத் தந்தித் தொடர்பு இல்லை. கயிலை வழியில் பித்தரகர் என்னும் ஊரோடு தந்தித் தொடர்பு முடிந்து விடுகிறது.

ஆஸ்கோட்

ஆஸ்கோட்டைக் கடந்ததும் மூன்று மைல் தூரம் வழி கீழ்நோக்கி இறங்குகிறது. கயிலாயத்திற்குச் செல்லுகையில் உள்ள நான்கு இறக்கங்களுள் இது முதலாவதாகும். ஏற்றத்தினும் இறக்கமே மிக்க வருத்தம் தருவது. இறங்குகையில் கால் தவறின் பாதாளத்தில் உருண்டு வீழ்வர். கீழ் நோக்கி இறங்குகையில் உடல் தன்னைத்தானே முன்னுக்குத் தள்ளும். நிமிர்ந்து நின்று காலை ஊன்றி வைத்து உடலின் வேகத்தை அடக்கிக் கொண்டு மெல்ல நடக்கவேண்டும். இவ்வாறு நடந்து, மூன்று மைல் தூரம் கீழே இறங்கியதும் வழி கௌரி கங்கை என்னும் ஆற்றை அடைகிறது. முன்னர்க் கடந்த ஆறுகளிலும் கௌரி கங்கை பெரியது. இதனைக் கடப்பதற்கும் தூரிப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. வழி இவ்வாற்றின் கரையோரமே செல்லுகிறது. ஒரு மைலுக்கு அப்

ஜலஜீவி—பலவக்கோட்டை

பால் இவ் ஆறு காளி கங்கை என்னும் மற்றொரு பேராற்றோடு கூடுகிறது. இக் கூடுதுறை கண்டு இன்புறத் தக்க இடங்களில் ஒன்று. இங்கு ஜலஜீவி என்னும் பெயருடையதோர் ஊர் உள்ளது. இங்கு அழகிய சோலையின் நடுவிலே சிவன் கோயில் ஒன்றும், ஓர் ஆஸ்ரமும் இருக்கின்றன. யாத்திரை செல்வோர் அவ்வாஸ்ரமத்தில் தங்கலாம். ஜலஜீவி யிலிருந்து வழி காளி கங்கைக்கு எதிராகச் செல்லு கிறது. இவ்வழியில் இன்னல்களும் இடுக்கண்களும் மிகுதியாக உண்டு. ஜலஜீவியினின்றும் எட்டு மைல் கட்கு அப்பால் பலவக்கோட்டை என்னும் ஊர் உள்ளது. இது காளி கங்கை ஓரத்தில் உள்ளதொரு பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. வேனிற் காலத்தில் இவ்வூரில் எவரும் குடியிருப்பதில்லை. வீடு கள் யாவும் பூட்டப்பட்டிருக்கும். 'பூட்டிய' வியாபாரி கள் பனிக் காலத்தில் மட்டும் இங்கு வந்து வசித்து விட்டு, வேனிற் காலத்தில் வேறிடங்கட்குச் சென்று விடுவர். ஆகவே, ஊர் பாழடைந்து தோன்றும். வேனிற் காலத்தில் இங்கு வெப்பம் மிகுந்திருக்கும். இங்கு இராத் தங்குவதற்கு இடம் கிடைப்பது அரிது.

பலவக்கோட்டையினின்றும் வழி காளி கங்கையின் வலக்கரை ஓரமாகவே செல்லுகிறது. வழி மிக்க ஏற்றத் தாழ்வு இன்றிச் சமனாகவே உள் ளது. இடையிடையே காளி கங்கையில் சென்று கலக்கும் சிற்றோடைகள் பலவற்றைக் கடக்க வேண்டும். அவற்றின்மீது அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் அச்சம் இன்றிக் கடத்தற்கு ஏற்ற உறுதியுடையவை அல்ல. சிற்றோடைகள் எனினும் அவை மக்களையும் விலங்குகளையும் அடித்துக் கொண்டு செல்லக்கூடிய கடுவேகம் உடையவை.

வழியிடையில் ஆங்காங்குக் குடிபோன பல ஊர்கள் காணப்படும். அவை பூட்டியர் என்னும் திபேத்திய குடிகளுடையவை. அவர்கள் குளிர்காலத்தில் அவ்வூர்களில் வந்து வாழ்வர்; வேனிற் காலத்தில் வெபபத்திற்கு அஞ்சி குளிருள்ள வேறிடங்கட்குச் சென்று விடுவர். இவ் வழி சம நிலத்திற் செல்வதால் வருத்தந் தருவது அன்றெனினும் வழியோரத்தில் நெடிது நிமிர்ந்து நிற்கும் மலைகள் செல்வோர்க்கு அச்சம் தருவனவாகும். இவை மணலும் கூழாங்கற்களும் சேர்ந்து உறுதியின்றிச் சுவர் போல உயர்ந்து நிற்பனவாகலின் அடிக்கடி நழுவிச் சரிந்து வீழ்ந்து வழியிற் செல்வோர்க்கு இன்னல் விளைப்பதுண்டு.

பலவககோட்டையினின்றும் பதினோராவது மைலில் அழகியதொரு பெருவெளியில் டார்ச்சுலா என்னும் ஊர் அமைந்திருக்கிறது. இங்கு வேனிற் காலத்தில் வெப்பம் மிகுந்திருக்கும். அக்காலத்தில் தேள் முதலிய விஷப் பூச்சிகள் இங்கு மிகுதியாகக் காணப்படும். இவ்வூரின் நான்கு பக்கங்களிலும் உயர்ந்த மலைகள் சூழ்ந்து நிற்கின்றன. அம் மலைகள் முறையே காலைக்கோட்டை, மாள்வேளக் கோட்டை, டார்ச்சுலாக் கோட்டை என்று பெயர் கூறப் படுகின்றன. இங்கு நெல், கோதுமை போன்ற தானியங்கள் பயிரிடப்படுகின்றன. வாழை, மா, கிச்சிலி போன்ற பழத் தோட்டங்களும் மிகுதியாக உள்ளன. ஆற்றின் மறுகரையில் நேப்பாள அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரியின் காரியாலயம், நீதிமன்றம், சிறைச்சாலை முதலியன உள்ளன. இஃது ஒரு பெரிய வியாபாரத் தலமாகும். குளிர்காலத்தில் பூட்டியர்கள் பலர் இங்குத் தங்கி

டார்ச்சுலா

வாணிகம் செய்வர். இங்கு வழிச் செல்வோர் தங்குவதற்குக் கடைகளும், தருமசாலைகளும், பிரயாணிகள் விடுதியும் உள்ளன. ஆனால் இங்குள்ள தருமசாலைகளில் தங்குவதில் ஒரு தனியனுபவம் உண்டு. தருமசாலைகள் யாவும் மிகவும் தாழமாக அமைந்திருக்கும். அவற்றினுள் வெளிச்சம் என்பது மருந்துக்கும் கிடையாது. உள்ளிடம் முழுதும் அந்தகாரம் சூழ்ந்துகொண்டிருக்கும். அறைகள் யாவும் இருட்டறைகள். அவற்றினுட் புகுவோர் நின்று நிதானமாகக் கூனிக் குறுகிக் குனிந்து செல்ல வேண்டும். வணக்கம் இல்லாதோர் மண்டை உடைபடுவர். இருளில் ஒருவரோடு ஒருவர் முட்டிக் கொள்ளவும் நேரும். அல்மோராவினின்று வரும் கூலியாட்கள் இவ்வூரோடு நின்றுவிடுவர். இங்கு வேறு கூலியாட்களை அமர்த்திக்கொள்ள வேண்டும். கூலியாட்கள் உடனே கிடைப்பது அரிதாகலின் கயிலை செல்வோர் இரண்டு மூன்று நாட்கள் இவ்வூரில் தங்க நேரிடும்.

டார்ச்சுலாவினின்றும் செல்லும் வழி அபாயங்களும் ஆபத்துக்களும் நிறைந்தது. இவ்வழியில் குதிரைகள் மூட்டைகளைச் சுமந்துகொண்டு செல்லா. துணிவுடையோர் சிலரே இவ்வழியில் குதிரையை நடத்திச் செல்ல முன் வருவர். வழியின் ஒருபுறம் நெடிதுற நிமிர்ந்து நிற்கும் மலை; மறுபுறம் பாதாளத்தில் இரைந்துகொண்டு விரைந்தோடும் காளி கங்கை. மலைச் சரிவில் கற்கள் அடிக்கடி நழுவி உருண்டு விழும். மழை பெய்த உடனேயின் அவை மிகுதியாகச் சரிந்து விழும். ஆகவே மழை பெய்யும் போதும், பெய்து நின்ற உடனும் மக்கள் இவ்வழியில் செல்லார். மழை இல்லாத சமயங்களிலும் இவ் வழியிற் செல்வோர் விழிப்புடனேமே

நடத்தல் வேண்டும். முதலில் மூன்று மைல் தூரம் வழி சமனாகவே உள்ளது. எனினும் சுவர் போலச் செங்குத்தாக நெடிதுயர்ந்த மலையின் சரிவில் அது குறுகி வளைந்து செல்லுகிறது. சில இடங்களில் அது மூன்றடி அகலமே உள்ளது. மூன்று மைல் கட்கு அப்பால் மேடும் பள்ளமும் மணற்சரிவும் உடைய கரடுமுரடான கடுவழியிற் செல்ல வேண்டும். இவ்வழி மிக்க அபாயம் உடையது. இறுதியில் மூன்று மைல் தூரம் உள்ள மூன்றாவது பெரிய ஏற்றம் எதிர்ப்படுகிறது. வழி வளைந்து வளைந்து மேனோக்கி உயர்ந்து செல்லுகிறது. இத்தகைய ஏற்றத்தில் ஏறத் தொடங்குமுன் போதிய அளவு உணவு உட்கொள்ளவேண்டும். வழியிடையே வருத்தம் உள்ள இடங்களில் உண்டு களைதீரச் சிறிதளவு உணவு உடனெடுத்துச் செல்லவும் வேண்டும். வெப்பம் காக்கும் குப்பியில் காப்பி போன்ற பானமும் கொண்டு செல்லுதல் நலம். இல்லையேல் ஏற்றத்தின் இடையில் இடர்ப்பட நேரிடும்.

இவ்வேற்றத்தைக் கடந்ததும் கேலா என்னும் ஊர் காண்கிறது. இவ்வூரில் வீடுகள் அடர்ந்து நெருங்கி இல்லை. ஆங்காங்குத் தனித்தனியே சிதறிற்போன்று அமைந்துள்ளன.

கேலா

இவ்வூர்க் கடைக்காரர்கள் வழிச் செலவோர்க்குத் தங்குவதற்கு வீடு விடுவர். கயிலை செல்லும் வழியில் இவ்வூரிலேயே நல்ல நெய் கிடைக்கும். கயிலை செல்வோர் மீண்டும் இவ்வூர் வந்து சேரும் வரை தங்கட்கு வேண்டும் நெய்யை இங்கேயே வாங்கிக்கொள்ளுவர். இங்கு வாழைப்பழம் மிகுதியாகக் கிடைக்கிறது. இங்கிருந்து கர்பியாங் வரை செல்ல இங்குப் புதிய கூலி

யாட்களை அமர்த்திக் கொள்ள வேண்டும். இவற்றிற்கு இடைப்பட்ட ஐம்பது மைல் தூரமும் கயிலை வழியில் மிகவும் கடுமையான பகுதியாகும்.

4. காளிகங்கை

பலவக்கோட்டையினின்றும் கேலாவரை வழி தொடர்ந்து காளி கங்கையின் கரையோரமே வருவது முன்னர்க் கூறப்பட்டது. கேலாவைக் கடந்ததும் இது மறைந்து விடுகிறது. வழி இதன் கரையோரத்தினின்றும் விலகி வேறு புறமாகச் செல்லுகிறது. இரண்டு நாள் செலவுக்குப் பின்னர் ஜிப்தியை அடைந்ததும் மீண்டும் இது காட்சி அளிக்கின்றது. ஜிப்தியினின்றும் இதன் தோற்றுவாயாகிய லிப்புத்கடாகம் வரையில் வழி இதன் கரையோரமே செல்லுகிறது.

காளிகங்கை இமயமலையில் இந்தியாவின் எல்லைக்குள் உள்ள ஆறுகள் அனைத்திலும் மிகப் பெரியதும் மிக்க வேகமுடையதும் ஆகும். இதனை நேரிற் காண்போர் இதற்குக் காளிகங்கை எனப் பெயர் வழங்கிய பெருமக்களின் கற்பனைத் திறனை வியந்து பாராட்டவே செய்வர். உக்கிரத்தொடு உருண்டு புரண்டு கொதித்துக் குதித்து முடுகி முழங்கிக்கொண்டு பாதாளத்தில் பாய்ந்தோடும் இதன் பயங்கரமான போக்கு, வெகுண்டு வெறிகொண்டு அசுரர்மீது போருக்கெழுந்த வீரமாகாளியை நினைப்பூட்டுவதாகவே உள்ளது. இது லிப்புத்தடாகக் கணவாய் அருகில் உள்ள லிப்புத் தடாகத்தில் உற்பத்தியாகின்றது. அங்குச் சிற்றோடை போன்று ஊறிக் கீழே வடிந்து, இமயமலையில் காளிகங்கை என்னும் பெயரோடு சீறிச்

காளி கங்கை

சினந்து விரைந்து ஓடி, சமவெளியை நண்ணியதும் சரயு என்னும் பெயர் பூண்டு, ஆறி அடங்கி அமைதியாகப் பாய்கின்றது.

தோன்றும் இடத்தில் சிறு குழவி போன்று ஊர்ந்து தவழ்ந்து வரும் காளிகங்கை, சிறிது தூரம் சென்றதும் துள்ளிப் பாய்ந்து ஓடும் பிள்ளை போன்று தாண்டிக் குதித்துத் தாவி ஓடத் தலைப்பட்டு,பின்னர் வண்ணத்திலும் வேகத்திலும் வன்மையுற்று, அடங்காது கதங்கொண்டு ஒழுகும் காளை போலக் கொந்தளித்துக் குமுறிக்கொண்டு கடுகி ஓடுகின்றது. இனி எவ்விடத்தும் இதனைப் பாலம் இன்றிக் கடத்தல் இயலாது. குறுகிக் குழிந்தோடும் சில இடங்களில் மலைவாணர் இதன் குறுக்கே கயிறு ஒன்றைக் கட்டி அதனைப் பற்றிக்கொண்டு இதனைக் கடந்து வருகின்றனர். மலைவாணருள்ளும் மனவுறுதி உடையோர் சிலர்க்கே அன்றிப் பிறர்க்கு இத்துணிசெயல் இயல்வதன்று. இந்நதியின்கண் எவ்விடத்தும் எக்காலத்தும் அடக்கத்தையும் அமைதியையும் காண்டல் அரிது. உக்கிர வடிவெடுத்து உருண்டு வரும் இஃது இடைவிடாது உறுமிக்கொண்டே ஓடுகின்றது. மலைகளைப் போழ்ந்துகொண்டும், மண்ணை அகழ்ந்துகொண்டும் ஆரவாரித்துக்கொண்டு ஓடும் வேகத்தாலும் கொந்தளிப்பாலும் இதன்கண் எக்காலும் ஆவி புகைந்த வண்ணம் இருக்கும். இதில் உருண்டு விழும் கற்களின் ஒலியும், சரிந்து விழும் மண்திட்டின் ஓசையும் இடியோசை போனறு இடையீடின்றித் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும். சீறியெழுந்தும், பாறைகளில் மோதிமறிந்தும், திவலைகளை வாரி வழியில் இறைத்துக்கொண்டுச் செல்லும் இதன் கடுஞ்செலவு காண்போரை நடுங்கச்செய்யும்.

இடையில் கணக்கற்ற சிற்ருறுகளும் ஓடைகளும் இதில் வந்து கலக்கின்றன. வல்லரசன் ஒருவனுக்குத் திறை செலுத்தி அவன் அடிக்கீழ் ஒதுங்கும் பல சிற்றரசர் போல, அவை தாம் பெருக்கி வரும் வாரியை இதன்கண் செலுத்தி இதனுள் ஒடுங்கி விடுகின்றன. இஃது இந்தியாவுக்கும் நேப்பாளத்துக்கும் இடையே இயற்கை வரம்பாக அமைந்துள்ளது. நேப்பாளம் நெடுங்காலமாகப் பிறருடைய படையெடுப்புக்கு உட்படாமல் தனியுரிமைத் தன்னரசு நாடாக இருந்து வருதற்குரிய காரணங்களுள் இக் காளி கங்கையை எல்லையாக உடைமையும் ஒன்ருகும். இது கடத்தற்கரிய இயற்கை அகழியாக அமைந்து அதற்கு அரண் செய்து வருகின்றது. இதன் தோற்றமும், மலை வழியில் இஃது அடையும் வளர்ச்சியும், சமவெளியில் இதன்பால் காணும் முதிர்ச்சியும் மனித வாழ்வைப் பிரதிபலிப்பனவாய், காண்போர்க்குப் புத்துயிரும் புத்துணர்ச்சியும் ஊட்டுகின்றன.

கேலாவை அடுத்து இரண்டாவது பெரிய இறக்கம் உள்ளது. நேராக இறங்கும் நெடுஞ் சரிவில் ஒருமைல் தூரம் ஏணிப்படியில் இறங்குவது போன்று இறங்கவேண்டும். இறக்கத்தின் அடியில் நெருங்கிய இருமலைகளின் இடுக்கினின்றும் தவள கங்கை என்னும் ஆறு உக்கிரத்தோடு உறுமிக் கொண்டு பாய்ந்து ஓடிவருகிறது.

புங்கு - சிர்க்கா இதனைக் கடக்க ஒரு மரப்பாலம் உள்ளது. இதனை அடுத்து நான்காவது பெரிய ஏற்றம் எதிர்ப்படுகிறது. ஐந்து மைல் தூரம் வழி வளைந்து வளைந்து மேல் நோக்கி ஏறுகிறது. செல்வோர்க்கு மிக்க வருத்தம் தரும் ஏற்றங்களுள் இஃதும் ஒன்று. இதில் அடிமேல்

அடிவைத்து வருந்தி முயன்று ஏறவேண்டும். யாத்திரை செல்வோர் இடையில் உள்ள புங்கு என்னும் கிராமத்தில் தங்கி இளைப்பாறிச் செல்வர். இது கடல் மட்டத்திற்கு ஏழாயிரம் அடி உயரத்தில் உள்ளது. இது பூட்டியர்களுடைய ஊர். தவள கங்கையினின்றும் பூட்டியர்களுடைய நாடு தொடங்குகின்றது. இங்கு வழியில் காணும் மரங்கள்தோறும் கிளைகளில் பல நிறமுள்ள சிறிய ஆடைகள் கணக்கின்றிக் கட்டப்பட்டுள்ளன. இங்குநின்றும் திபேத்துவரை இக்காட்சியைக்காணலாம். இதனைப் பிரார்த்தனைக் கோடி என்று கூறுகின்றனர். இவ் வேற்றத்தைக் கடந்ததும் சிர்க்கா என்னும் சிற்றூர் உள்ளது. இது கடல் மட்டத்திற்கு ஒன்பதினாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. எனவே இங்கு இரவில் குளிர் மிகுந்திருக்கும். சிர்க்கா, செழிப்பும் சிறப்பும் வாய்ந்த ஊராகும். இங்குப் பலவகைத் தானியங்களும் பயிரிடப்படுகின்றன. இங்கு அக்ரூட் மரங்கள் மிகுதியாக உள்ளன. ஆப்பிள், பேரிக்காய் முதலியவை இங்கு மிகுதியாகக் கிடைக்கும். பெண்கள் பலவகையான வெள்ளி ஆபரணங்கள் அணிந்து, பல நிறமுள்ள ஆடைகள் உடுத்தியிருப்பர். ஆயினும், இவ்வூர் அசுத்தத்திற்கு இருப்பிடமானது. இங்கு வேனிற் காலத்தில் ஈக்கள் மிகுதியாக உள்ளன. அற்ப உயிராகிய ஈ, மனிதனுக்கு எத்தகைய தொல்லை விளைக்கக்கூடும் என்பதை இவ்வூரில் அனுபவித்து அறியலாம்! யாத்திரை செல்வோர்க்கு இங்கும் பாடசாலையில் தங்க இடம் அளிக்கப்படுகிறது.

சிர்க்காவினின்று இரண்டு மைல் வரை வழி வருத்தம் இன்றி நடப்பதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. பல்வகைப் பசும் பயிர்கள் வளர்ந்த

வயல்களுக்கு இடையே வழி வளைந்து வளைந்து செல்லுகிறது. வழியின் இரு மருங்கிலும் வெவ்வேறு நிலையில் வளர்ந்துள்ள விதம் விதமான பயிர்கள் பசுங்கடல் போன்று பரந்து தோன்றுகின்றன. காற்றில் இப்பயிர்கள் நெளிந்தும் வளைந்தும் சாய்ந்தும் நிமிர்ந்தும் அசைந்து ஆடும் களியாட்டம் வருந்தி வழிநடப்போர்க்கு விருந்தாகி இன்பம் செய்கின்றது. இடப்பக்கம் நிமிர்ந்து நிற்கும் நெடிய மலைகளில் தேனீக்களும் பறவைகளும் பகைவர் பயம் இன்றி இனிது வாழ்கின்றன. இவ்வின்ப விருந்தை நுகர்ந்தவாறே இரு மைல்கள் சென்றதும் மூன்று மைல் தூரமுள்ள ஐந்தாவது பெரிய ஏற்றம் எதிர்ப்படுகிறது. வாழ்க்கை வழியில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருதல் போல, இக்கயிலை வழியிலும் இவ்வாறு இன்பம் தரும் இடங்களும் மாறிமாறி வருதலைக் காணலாம்.

இவ்வேற்றத்தைத் தொடர்ந்து மூன்று மைல் தூரம் மூன்ருவது பெரிய இறக்கம் உள்ளது. இவ்ஆறு மைல்களும் இருள் செறிந்த பெருங்காடு சூழ்ந்து கொண்டுள்ளது. பரிதியின் கதிர்கள் இவ்வடவியினுள் என்றும் சென்றறியா. வழி நெடுகிலும் நீர் பெருகிக்கொண்டு சேறும் சருக்கலுமாக இருக்கும். உதிர்ந்து நனைந்த சருகும், ஊரும் அட்டைகளும், நெளியும் நிலப் புழுக்களும் நிறைந்து, அதில் அடியெடுத்து வைக்கவும் மனம் கூசச் செய்யும். இவ்வச்சத்திற்கும் அருவருப்புக்கும் இடையே அவ்வனம் இயற்கையின் எழில் நலங்களைக் காட்டி வழிச் செல்வோரை இன்புறுத்தும். வானளாவி உயர்ந்த பல்வகை மரங்களும், அம்மரங்களைச் சுற்றிச் சூழ்ந்து பின்னிப் படர்ந்திருக்கும் கொடி விசேடங்களும், அக்கொடிகளில்

மலர்ந்து மணம் கமழும் பன்னிற மலர்களும், அவற்றை ஒட்டி வளர்ந்துள்ள நீர் வேம்பு வகைகளும், நிலத்திற் பரவப் படிந்துள்ள பாசியும், இடையிடையே அதனைப் பொத்துக்கொண்டு பூத்துள்ள பலவேறு வண்ணமும் வடிவமும் கொண்ட காளான்களும் வழிச் செல்வோர் விழிக்கு விருந்தாகி உள்ளத்தை உவப்பிக்கும். மலர்களில் முரலும் வண்டுகளின் குரலும், மரங்களில் மறைந்து கொண்டு மகிழ்ந்து ஒலிசெய்யும் புள்ளினங்களின் மழலை யொலியும் செவிக்குத் தெவிட்டாத சுவையமுதமாக இடைவிடாது இசைத்துக் கொண்டிருக்கும்.

இடையில் பிரிங்பாங் என்னும் ஊர் உள்ளது. வழிச் செல்வோர் அங்குத் தங்கி உணவு கொண்டு இளைப்பாறிச் செல்வர். அதனை அடுத்துள்ள ஊர்

ஜிப்தி

ஜிப்தி என்பது. 'ஜிப்தி' என்னும் சொல்லுக்குச் சிக்கனம் என்பது பொருள். இதன் பெயருக்கு ஏற்பவே இங்கு இடம் மிகவும் சிக்கனமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது நிமிர்ந்து நிற்கும் நெடிய மலையின்மீது கடல் மட்டத்திற்குமேல் எண்ணுயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. மலையின் அடியில் காளி கங்கை மீண்டும் காட்சியளிக்கிறது. இங்கு வழி நான்கடி அகலமே உள்ளது. வழியோரத்தில் ஒரு கடைமட்டுமே உள்ளது. யாத்திரை செல்வோர் தங்குவதற்கு அக்கடையின் மேல் மாடியில் இடம் அளிக்கப்படும். ஜிப்தியில் இரவில் குளிர் மிகுந்திருக்கும். கம்பளி உடைகளின் உதவியின்றி இங்கு இரவைக் கழித்தல் இயலாது. டேலியா என்னும் ஒருவகைப் பெரிய மலர்கள் இங்கு மிகுதியாக உள்ளன.

ஜிப்தியினின்று ஒரு மைல் சென்றதும் வாயில் போன்று நிற்கும் இரு பெரும் பாறைகட் கிடையில் வழி நுழைந்து செல்லுகிறது.

பிந்துக்கோட்டை

இவ்விடம் பிந்துக்கோட்டை எனப் படுகிறது. இதனை எமலோக வாயில் எனலாம். இங்கிருந்து கர்பியாங் செல்லும் வரையி லுள்ள இருபத்தொரு மைல் தூரமும் வழி மிகவும் கடுமையானது. செங்குத்தான நெடிய ஏற்றங் களும், சரிவான பெரிய இறக்கங்களும் இவ்வழியில் உள்ளன. இடப்புறம் நிர்ப்பானி மலை வானளாவி நிமிர்ந்து நிற்கிறது. வலப்புறம் மூவாயிரம் அடி கட்குக் கீழே பாதாளத்தில் காளி கங்கை கொந்த ளித்துக் குமுறிக் குதித்து ஓடிக்கொண்டிருக்கிறது. மூன்று மைல்கள் வழி ஏணிப்படி போன்று நேராகக் கீழ்நோக்கி இறங்குகிறது. இது நான்கா வது பெரிய இறக்கமாகும். வழி மிகவும் குறுகியது. சில இடங்களில் ஓர் அடி அல்லது ஒன்றரை அடி அகலமே உள்ளது. இக்குறுகிய வழியும் பல இடங் களில் பாறைகளை வெட்டி யெடுத்தும், கூழாங் கற்களைக் கட்டி அடுக்கியும் அமைக்கப்பட்டுள்ளது. அவ்விடங்களில் வழி மிகவும் வழுக்குடையதாக இருக்கிறது. நிர்ப்பானி மலையினின்றும் கல்வீழ்ச்சி நிகழ்வது உண்டு. மழை பெய்து நின்றபின் அஃது அடிக்கடி நிகழும். கல் உருண்டு வருவது கண் ணுக்குத் தெரியின் ஒதுங்கி நின்று உயிர் தப்பலாம். மலை செங்குத்தாக உயர்ந்துள்ள இடங்களில் கல் உருண்டு வரும் ஓசை மட்டும் காதுக்குக் கேட்குமே அன்றிக் கல் கண்ணுக்குத் தெரியாது. அவ்வோசை கேட்கும்போது வழிச்செல்வோர் சுவர்போன்று நிமிர்ந்து நிற்கும் மலையோடு மலையாக ஒட்டி ஒடுங்கி அமர்ந்துகொள்ள வேண்டும்.

கயிலாய வழியில் மிக்க இன்னல் தரும் இடுக்கண் நிறைந்த இடங்களில் இஃது ஒன்று. மூவாயிரம் அடி முதல் ஐயாயிரம் அடிவரையில் உயரமுள்ள சுவர்போன்ற செங்குத்தான மலையின் சரிவில் நடந்து செல்லவேண்டும். இங்கு மற்ற விடங்களிற் போன்று ஒருகாலை ஊன்றி மற்றொரு காலை எடுத்து வைத்து நடத்தல் இயலாது. அல்மோராவிலின்றும் வாங்கிவரும் கூர்மையான இருப்புப் பூணிட்ட நெடுங்கழி இவ்வழியில் உயிர்த்துணை போன்று உதவுவதாகும். அக்கழியின் உதவியின்றி இவ்வழியைக் கடத்தல் இயலாது. இரு கால்கள், ஓர் ஊன்றுகோல் ஆகிய இம்மூன்றனுள் எவையேனும் இரண்டைத் தரையில் ஊன்றிக்கொண்டே மூன்றாவதாகிய ஒன்றை எடுத்து இடம் மாற்றி வைத்தல் கூடும். இம்மூன்றில் ஒன்று வழுக்கினும், வழியினின்றும் ஓர் அங்குலம் தவறினும், மீண்டு அவரைக் காண முடியாது. பாறைகளில் மோதி முறிந்து உருண்டு செல்லும் அவர் உடம்பைப் பாதலத்தில் முழங்கிக்கொண்டு செல்லும் காளி கங்கை விழுங்கிவிடும். இவ்வழியிற் சில இடங்களில் நிமிர்ந்து நின்று நடக்கவும் இயலாது; கூனிக் குனிந்தும், தாழ்ந்து தவழ்ந்தும் செல்லவேண்டும். துணிவில்லாதவர்கள் இவ்வழியிற் பெருந்துயர்ப் படுவர் இதனைக் கடப்போர்க்கு ஓர் அடி ஒரு காதமாக நீண்டு தோன்றும்.

நதி மட்டத்திற்கு இறங்கியதும் வழி சிறிது தூரம் அந்நதியோரமே செல்லுகின்றது. நதியின் இரு பக்கங்களிலும் மலைத் தொடர்கள் வானுற ஓங்கி உயர்ந்து நிற்கின்றன. அவற்றின் இடையே ஓடும் காளி கங்கையின் உக்கிரமும் உருமலும் உற்றுதியுடையோரையும் உளம் நடுங்கச் செய்யும்.

வழியிடையே சில இடங்களில் பாறை துண்டாக வெட்டுண்டு கிடக்கும். அவ்விடங்களில் அப்பாறையின் பக்கங்களில் மரக்கட்டைகளைத் திணித்துக் காளி கங்கைக்கு மேலாக நெற்றி மாடங்கள் போன்று கட்டிவைத்துள்ளனர். அவற்றின் மீது நடக்கையில் தலை கிறுகிறுக்கும். அவற்றைக் கடக்கையில் கட்டை முறியினும், கால் நழுவினும் காளி கங்கைக்கு இரையாக வேண்டுவதே. வழியில் ஆங்காங்கு மேலிருந்து நீர்த்துளிகள் சிந்திக் கொண்டிருக்கும். சில இடங்களில் நீர் வீழ்ச்சிகளும் உள்ளன. அவ்விடங்களில் குடையை விரித்துப் பிடித்தால் நீரின் வேகம் மனிதனைக் காளி கங்கையில் வீழ்த்திவிடும். ஆகவே, நனைந்துகொண்டே ஒரு கையில் குத்து கழியை ஊன்றிப் பற்றிக் கொண்டும், மற்றொரு கையால் பாறையைப் பிடித்துக்கொண்டும் மெல்ல நகர்ந்து செல்லவேண்டும். ஆற்றோரத்தில் சிறு ஏற்றங்களும் இறக்கங்களும் ஆங்காங்கு மாறிமாறி வந்துகொண்டிருக்கும். நேராக நிமிர்ந்திருக்கும் ஏற்றங்களில் தவழ்ந்து ஏறவும், சரிவாகத் தாழ்ந்திருக்கும் இறக்கங்களில் குந்தி இறங்கவும் வேண்டும். இவ்வழியில் ஆங்காங்குப் பாறைகள் குடைபோன்று கவிந்திருக்கும். மழை பெய்யும் சமயங்களில் அவற்றின்கீழ் ஒதுங்கி நிற்கலாம். மைசூர் அரசரின் நன்கொடையாலும் பெரு முயற்சியாலும் இவ்வழி இவ்வளவேனும் சீர்பட்டுள்ளது. அதற்கு முன் இது மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. இவ்வழியைக் கடக்குங்கால் 'நம் உயிரைக் காப்பது நம் முயற்சி அன்று; நம்மினும் மேலான ஒரு சக்தியே நம் உயிரை உடனிருந்து ஓம்பி வருகின்றது' என்னும் உணர்ச்சி எல்லோர் உள்ளத்திலும் இயல்பாகவே எழும்.

அவ்வுணர்ச்சியே இவ்வழிச் செலவின் அருமையை மறப்பித்து வழிச்செல்வோரை முன் நோக்கி ஈர்த்துச் செல்லும். தலை கிறுகிறுக்கும்படி ஆகாய மளாவி நெடிதுயர்ந்து நிற்கும் மலைப்பக்கங்கள், பாதலம்வரை ஆழ்ந்து தோன்றும் கரடுமுரடான மலைப் பிளவுகள், மலை யுச்சியினின்றும் வெள்ளிக் கம்பிபோல விழும் மலையருவிகள், அவை ஆரவாரித்துக்கொண்டு ஓடும் காளி கங்கையில் விழும் காட்சி இவை யாவும் அச்சத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கி ஆண்டவன் நினைவை எழுப்பும்.

இவ்வாறு பத்து மைல் தூரம் கடந்ததும் பெரும்பாறை ஒன்றின்மீது கட்டப்பட்டுள்ள ஒரு சிறிய குடிசை காணப்படுகிறது. இவ்விடம் மால்ப்பா எனப்படுகிறது. இஃது இடுக்கண்களிலிருந்து வழுக்கி வந்தவர்கள் அடைக்கலம் புகும் இடமாக அமைந்துள்ளது. மால்ப்பா என்னும் ஆறு அருகில் ஓடுவதால் இவ்விடம் அவ்வாற்றின் பெயரால் வழங்கப்படுகின்றது. மால்ப்பா என்பது ஓர் ஊர் அன்று. வழிச்செல்வோர் இரவில் தங்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள தருமசாலை எனப்படும் ஒரு சிறிய குடிசையும், அதன் பக்கத்தில் தபால்காரன் குடிசையும், வழிச் செப்பம் செய்வோர் தங்கும் குடிசையுமே உள்ளன. தரும சாலையில் இரண்டு அறைகளே உண்டு. பலகணிகட்கும் வாயிலுக்கும் கதவுகள் இல்லை. கற்பலகைகளை ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கிச் செய்த சுவர்களின் மேல் கற்பலகைகளே கூரையாகப் பரப்பப்பட்டுள்ளன. தரை கல்லும் மண்ணும் நிறைந்து கரடுமுரடாக இருக்கும். அதன்மீது காட்டுத் தழைகளையும் உலர்ந்த புல்லையும் பரப்பிக்கொண்டு படுக்க

மால்ப்பா

வேண்டும். எனினும், அது நெடுநேரம் கடுவழி நடந்து களைத்து வருவோர்க்குப் பேருதவியாக உள்ளது. அது ருமாதேவி என்னும் பூட்டிய அம்மையாரால் வழிச்செல்வோர் தங்குவதற்கென்றே கட்டுவிக்கப்பட்டது.

மால்ப்பாவைச் சுற்றிலும் மலைச் சிகரங்கள் கண்ணோக்கினைக் கடந்து விண்ணோக்கி உயர்ந்து நிற்கின்றன. மால்ப்பா அவற்றினிடையே பாதலத்தில் இருப்பது போன்று தோன்றுகிறது. மால்ப்பா நதியும் காளி கங்கையும் தம்முள் மாறுகொண்டு முழங்கும் பெரு முழக்கம் மலை ஒன்றோடு ஒன்று தாக்கித் தகர்ந்து புரண்டு உருண்டு வருதல் போன்று இருக்கும். நாற்புறங்களிலும் இயற்கையின் இன்ப வளம் சிறந்த எழில் வனம் சூழ்ந்து கொண்டுள்ளது. வானத்தைப் பொத்துக்கொண்டு உயர்ந்துள்ள மலைகளுக்கிடையே வற்றாத நீர்வளமும் வாடாத நிலவளமும் மிகுந்துள்ள இவ்விடத்தில் மரம் செடி கொடிகள் தெய்விக ஒளிபெற்று இணையற்ற இன்ப வடிவங்களாக மிளிர்கின்றன.

மால்ப்பாவினின்றும் கர்பியாங் பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது. பூதி என்னும் ஊர்வரை உள்ள ஏழு மைல்களும் ஜிப்திக்கும் மால்ப்பாவுக்கும் இடையில் உள்ளதே போன்று இன்னல்களும் இடுக்கண்களும் நிறைந்தது. முன்நாள் வழியிற்பட்ட அல்லல்கள் அனைத்தும் இங்கு மீண்டும் அடுக்கி வருகின்றன. இருநூறு அடி அகலமுள்ள ஒரு பெரிய மலைப் பிளவு; இரு பக்கங்களிலும் ஐயாயிரம் அடிவரை உயர்ந்து நேராக நிமிர்ந்து நிற்கும் நெடிய மலைகள்; ஒரு பக்கத்து மலையின் சரிவில் வழி குறுகிச் செல்லுகிறது. வழியின் மறுபக்கத்தில் பாதலத்தில் காளிகங்கை வீராவேசத்தோடு பேரார

வாரம் செய்துகொண்டு ஓடுகிறது. முந்தியநாளிற் போன்றே வழுக்குடைய ஒடுங்கிய வழியில் உயரத் தொற்றி ஏறவும், கீழே குந்தி இறங்கவும், குத்து கழியை ஊன்றித் தவழ்ந்து செல்லவும் வேண்டும். இவ்வழியில் காண்டற்கினிய இயற்கைக் காட்சிகள் மிகுதியாக உள்ளன. ஆயின் அவற்றைக் கண்டவாறே வழி நடத்தல் இயலாது. அவற்றைக் கண்டு களிக்க விரும்பின் இடுக்கண் குறைவாக உள்ள ஓர் இடத்தில் நின்றுகொண்டு காணவேண்டும்.

ஆட்டு மந்தைகள்

இவ்வழியில் ஆட்டுமந்தைகள் வேறு அடிக்கடி எதிர்ப்படும். இங்கு அவற்றைக் கடப்பது வழிப்போக்கர்களுக்குப் பெருந் தொல்லையாகும். திபேத்தில் குளிர்காலத்தில் புல் பூண்டுகளும் கிடையா. ஆகவே திபேத்திய இடையர்கள் அக்காலத்தில் தங்கள் ஆடுகளை இந்தியாவுக்கு ஓட்டி வந்து மேய்ப்பர். குளிர்காலம் கழிந்து கணவாய்கள் வழி திறந்ததும் மீண்டும் அவற்றைத் திபேத்துக்கு ஓட்டிச் செல்வர். அவர்கள் வேனிற்காலத்தில் சேகரிக்கப்பட்ட ஆட்டுரோமங்களை அவ்வாடுகளின்மீதே ஏற்றி வந்து இங்கு விற்பதும், மீண்டு செல்கையில் இங்கிருந்து கோதுமை மாவு, வெல்லம் முதலிய பொருள்களை வாங்கி அவற்றின்மீது ஏற்றிச் செல்வதும் வழக்கமாக நடந்து வருகின்றன. ஒவ்வோர் ஆட்டின் மீதும் பத்துப் பவுண்டு எடையுள்ள பொருள்கள் ஏற்றிச் செல்லப்படும். மந்தைகளைக் காக்க அவற்றோடு திபேத்திய நாய்கள் உடன் செல்லும். அவை கருநிறம் உடையனவாய்க் கரடிக் குட்டிகள் போன்று இருக்கும். அவற்றின் கழுத்தில் மணி கட்டப்பட்டிருக்கும். இவை இடையர்களுடைய கைகை சாடைகளைக் கூர்ந்து கவனித்து மந்தை

களை அடக்கிக் காத்துச் செல்லும் திறம், பகுத்தறிவுடைய மக்களை வியக்கச் செய்யும். இவ்வழியின் இடையில் இத்தகைய ஆட்டு மந்தைகளைச் சந்திக்க நேர்ந்தால் வழிச் செல்வோர் உயர்ந்துநிற்கும் மலைப் பக்கம் ஒதுங்கிப் பாறையோடு பாறையாக ஒண்டி நின்று கொண்டு அவற்றிற்கு வழி விடவேண்டும். இல்லையேல், ஆட்டு மந்தையால் மோதப்பட்டுச் சீறிக்கொண்டு செல்லும் காளிகங்கையில் விழுந்து மறைந்தொழிவர். இவ்வழியில் உள்ள உயிர்க்கிறுதி செய்யும் இன்னல்களுள் இஃதும் ஒன்றாகும்.

காளி கங்கையின் கரை இங்கு எப்பொழுதும் இடிந்து விழுந்து கொண்டிருக்கும். மழை பெய்தவுடன் மலைச்சரிவு அடிக்கடி நிகழும். ஒரு மலையே சரிந்து விழுந்து மக்களையும் ஆட்டு மந்தைகளையும் உயிரோடு புதைப்பதும் உண்டு. இவ்வழியில் செல்லுகையில் மலையுச்சியினின்றும் பெருங்கற்கள் உருண்டு வந்து காளிகங்கையில் விழும் சத்தம் கேட்டவாறே இருக்கும். ஆகவே வழிச் செல்வோர் இங்குச் செல்கையில் மிகவும் கவனத்தோடு செல்ல வேண்டும். மேலே கல் உருண்டு

பூதி

வரும் சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டவாறே விரைந்து நடக்கவேண்டும். சத்தம் கேட்டபின் மலை ஓரமாகப் பெரிய பாறைகளின் பக்கத்தில் பாறையோடு பாறையாக ஒண்டிக்கொள்ள வேண்டும். இல்லையேல், உருண்டோடி வரும் கல் நம்மையும் காளி கங்கையில் புரட்டித் தள்ளிவிடும். சில விடங்களில் மலையருவிகளின் தூவானம் சல்லிப் பானையிலிருந்து தண்ணீர் விழுவது போன்று வழியில் விழுந்துகொண்டிருக்கும். மால்ப்பாவினின்றும் ஐந்து மைல் தூரம் சென்றதும் இவ்வின்னல்கள் சிறிது சிறிதாகக்

குறைகின்றன. ஏழாவது மைலில் பூதி என்னும் கிராமம் உள்ளது. வழிச் செல்வோர் இங்குத் தங்கி உணவு கொண்டு இளைப்பாறிச் செல்வர். இவ்வூர் இயற்கையன்னை அரசுவீற்றிருக்கும் எழில் ஓலக்கம் போல அமைந்துள்ளது. ஒருபுறம் ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் மொட்டை மலைகள்; மற்றொரு புறம் பசுங்கடல் போன்று பரந்து தோன்றும் அடர்ந்த காடு; வேறொரு புறம் சூரிய ஒளியில் சுடர்விட்டுத் திகழும் பனிமுடி சூடிய சிகரங்களை உடைய மலை; இன்னொரு புறம் கண்ணுக்குக்கு எட்டும் அளவு விரிந்து தோன்றும் பள்ளத்தாக்கு. இவற்றின் இடையே பூதி என்னும் ஊர் கடுவழி நடந்து களைத்து வருவோரை இளைப்பாற்றிக் களிப்பூட்டும் இன்ப நிலையமாக உள்ளது.

பூதியினின்றும் இரண்டரை மைல் தூரம் வழி ஒரு பெரிய ஏற்றத்தில் ஏறிச் செல்லுகிறது. அதில் திணறிக்கொண்டும் நெட்டுயிர்ப்பு எறிந்துகொண்டும் வருந்தி முயன்று ஏறவேண்டும். ஏற்றத்தின் உச்சியை அடைந்ததும் பரந்த சமநிலப் பரப்பு காணப்படுகிறது. ஆங்காங்குத் தேவதாரு மரங்களும், வேறு பலவகை மரங்களும் காட்சியளிக்கின்றன. பச்சைப் பட்டைப் பரப்பினாற் போன்ற பசும்புல் தரை; அதன்மீது தரையோடு தரையாகக் கிடக்கும் குறுஞ் செடிகளிலே பூத்துப் பொலியும் பன்னிற மலர்கள்; அருகிலே ஒரு கோபுரம்; அதன் உச்சியிலே ஒரு மணி; பல தோரணங்கள் கட்டிய ஒரு மரம்; கீழே வெள்ளி நாகம் போலச் சீறிச் சினந்து வளைந்து நெளிந்து விரைந்து செல்லும் காளி கங்கை. இவ்வழகிய காட்சி வழிச் செல்வோருடைய விழிப்புலனுக்கு விருந்தாகிக் கழிபேரின்பம்

கர்பியாங்

பயக்கும். வழி, ஒரு மைல் தூரம் இச் சமவெளியிலேயே செல்லுகிறது. பின்னர் இரு மைல்கள் இலேசான இறக்கத்தில் இறங்கவேண்டும். சிறிது தூரம் உறைந்த பனிப் பாறைகளின் மீது நடந்து சென்று கர்பியாங் என்னும் ஊரை அடைய வேண்டும்.

கர்பியாங் கடல் மட்டத்திற்குமேல் 10,300 அடி உயரத்தில் உள்ளது. எனவே இங்கு குளிர் மிகுந்திருக்கிறது. எதிரில் காளி கங்கை ஓடுகிறது. நான்கு திசைகளிலும் பனியடை மூடிய நெடு மலைகள் நிமிர்ந்து நிற்கின்றன. அல்மோராவினின்றும் நூற்றைம்பது மைல்கள் கடக்கப்பட்டுவிடுகின்றன. கயிலை மலைக்கு இன்னும் நூறு மைல்கள் கடந்தாக வேண்டும். கர்பியாங்கே இவ்வழியில் இந்திய எல்லையைச் சார்ந்த இறுதிக் கிராமமாகும். இந்திய அரசாங்கத்திற்குட்பட்ட கடைசித் தபால் நிலையமும் இங்கேயே உள்ளது. எனவே இது முக்கியமான பெரிய வியாபாரத் தலமாகும். பூட்டிய வியாபாரிகளே இங்கு மிகுதியாக வசிக்கின்றனர். இது மிகப் பெரியதொரு கிராமமாகும். இதில் சற்றேறக் குறைய இருநூறு வீடுகள் உள்ளன. வீடுகள் அழகாகவும் உறுதியாகவும் கட்டப்பட்டுள்ளன. ஆயினும், வீடுகளும் வீதிகளும் சுத்தமாக வைக்கப்படவில்லை. மக்கள் வாழ்க்கையினும் தூய்மை காண முடியாது. அருகில் காளி கங்கை ஓடினும் ஊரில் நீர் கிடைப்பது அரிது. இங்குள்ள தருமசாலையிலும் இளைப்பாறும் விடுதியிலும் யாத்திரை செல்வோர் தங்குவதற்கு இடம் கிடைக்கும்.

கர்பியாங்கினின்றும் கயிலாய யாத்திரையின் புதிய நிலை தொடங்குகின்றது. இங்கிருந்து யாத்திரையின் போக்கே முற்றிலும் மாறிவிடுகின்றது.

ஆகவே, அப்புதிய கோலத்திற்கு வேண்டும் ஆயத்தங்களைச் செய்துகொள்ளுவதற்காக யாத்திரை செல்வோர் இவ்வூரில் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருக்க வேண்டும். இறுதித் தபால் நிலையம் இவ்வூரிலேயே உள்ளதால் யாத்திரிகர் அங்குச் சென்று தங்களுக்கு வந்துள்ள கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, பின்னர் வருவனவற்றை நிறுத்தி வைக்குமாறு தலைவர்க்கு அறிவிக்கவேண்டும். தக்க வழிகாட்டியின் துணையின்றித் திபேத்துக்குள் பிரயாணம் செய்தல் இயலாது. திபேத்தில் உள்ளவரை யாத்திரிகர் உயிரும் உடைமையும் வழிகாட்டியின் வசமே இருக்கும். எனவே, அப்பிரதேசத்தில் பயிற்சியுள்ள தேர்ந்த வழிகாட்டி ஒருவனை இங்கேயே நியமித்துக் கொள்ளவேண்டும். வழிகாட்டியை நியமித்துக்கொண்ட பின்னர், யாத்திரை பற்றிய முழுப் பொறுப்பையும் அவனே ஏற்றுக்கொள்வான். அவன் யாத்திரிகர்களிடம் உள்ள பொருள்களைப் பார்வையிட்டு, அவற்றுள் திபேத்துப் பிரயாணத்துக்கு வேண்டாதனவும், விலையுயர்ந்தனவுமாகிய பொருள்களைக் கர்பியாங்கிலேயே பாதுகாப்பான இடத்தில் வைக்கச் செய்வான்; பின்னர், திபேத்துப் பிரயாணத்திற்குப் புதியனவாக வேண்டும் பொருள்களைக் குறித்து, உடனிருந்து அவற்றை வாடகைக்கு வாங்கித் தருவான். கடல் அளவினின்றும் 10,500 அடிகளுக்கு மேல் உயர ஏறிச் செல்லவேண்டுதலின் இவ்வழியில் ஆட்கள் மூட்டை சுமந்து செல்லல் இயலாது. அதற்காகக் குதிரைகளை அமர்த்திக்கொள்ள வேண்டும். நடந்து செல்லுதற்கு வேண்டும் வலியும் உறுதியும் இல்லாதோர் ஏறிச் செல்வதற்கும் இங்கேயே குதிரைகளை அமர்த்திக் கொள்ள

4

வேண்டும். கர்பியாங்குக்கு அப்பால் வழியில் தங்குவதற்கு வீடு இல்லை. மீண்டும் கர்பியாங் வரும்வரை கூடாரங்களிலேயே தங்கவேண்டும். இங்குக் கூடாரங்கள் வாடகைக்குக் கிடைக்கும். கூடாரத்துக்குள் பனிக்கட்டி போன்ற தரையின் மீது விரிக்கத் திபேத்தில் செய்யப்படும் கோத்மா என்னும் கம்பள விரிப்புக்கள் சிலவற்றையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள வேண்டும். திபேத்தின் எல்லைப் புறத்தில் திருடர் பயம் மிகுதியாக உண்டு. கம்பளத்துக்காகவும் உணவுப் பொருள்கட்காகவும் அவர்கள் வழிச் செல்வோரைக் கொள்ளையடிப்பர்; கொலை செய்வதும குதிரைகளைத் திருடிக்கொண்டு போய்விடுவதும உண்டு. ஆகவே, திபேத்தில் பிரயாணம் செய்பவர்கள் துப்பாக்கியும் போதுமான அளவு குண்டுகளும் உடன்கொண்டு செல்லவேண்டும். அவை கர்பியாங்கில் வாடகைக்குக் கிடைக்கும். துப்பாக்கியைக் கையாளுதல் வழிகாட்டியின் தொழில். அதற்கு அரசாங்க அனுமதி வேண்டுவதில்லை. வழிகாட்டி சில வேட்டை நாய்களையும் உடன் கூட்டி வருவான்.

ஆயத்தங்கள் யாவும் செய்து முடிக்கப்பட்ட பின்னர், வழிகாட்டி சேனைத் தலைவன் போன்று வினையாற்றத் தொடங்குவான்; மூட்டைகளை நிறுத்தெடுத்துக் குதிரைகளின்மீது ஏற்றுவான்; நடந்து செல்ல இயலாதவர்களுக்குக் குதிரைகளைத் தேர்ந்து தருவான். அவன் ஆணையின்றி மனிதனோ குதிரையோ புறப்படலாகாது. எல்லாம் அவன் ஆணைப்படியே நடக்கவேண்டும். பிரயாணம் தொடங்குவதற்கு முன் ஆசிச் சடங்கு ஒன்று நடக்கும். வழிகாட்டியும் குதிரையாட்களும் அணியாகத் தலைவணங்கி நிற்பர். அவர்களுடைய தாய்

மாரும் உறவினரும் வந்து தலையில் வெற்றிக்கொடி சூட்டி வழியில் நேரும் இன்னல்களை யெல்லாம் வென்று கயிலை யாத்திரையை இனிது முடித்து நலமே மீள வேண்டும் என்று ஆசி கூறுவர். ஆசிச் சடங்கு முடிந்ததும் வழிகாட்டி புறப்படுமாறு ஆணையிடுவான். அனைவரும் 'ஜய' முழக்கத்தோடு புறப்படுவர். கட்டவிழ்த்ததும் சில குதிரைகள் நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோடப் பார்க்கும்; சில துடுக்கான குதிரைகள் துள்ளிக் குதித்துக்கொண்டு அங்கும் இங்கும் ஓடும். அவை கயிலைக்குச் சென்று கர்பியாங் மீள்கையில் எலும்பும் தோலுமாய் ஒட்டி உலர்ந்து குற்றுயிரோடு வந்து சேரும். பலமுறை அதனை அனுபவித்திருந்தும் அவை களிப்போடு கனைத்துக்கொண்டு புறப்படுகின்றன. ஆறறிவு படைத்த மக்களையே மயக்கும் கடவுள் மாயை, ஐயறிவே பெற்ற எளிய குதிரைகளை மயக்கி மகிழச் செய்வதில் வியப்பில்லை அன்றோ!

5. கயிலாய வாயில்

கர்பியாங் ஊரைக் கடந்ததும் வழி ஒருமைல் தூரம் கீழ்நோக்கி இறங்குகிறது. சிறிது தூரம் காளி கங்கையின் வலக்கரையோரமே நடந்து அதனைக் கடக்கவேண்டும். அதனைக் கடக்க ஒரு மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. காளிகங்கையின் இடக் கரையினின்றும் நேபாள நாட்டு எல்லை தொடங்குகிறது. வழி ஆற்றின் கரையோரமே செல்வதால் பெரிய ஏற்றம் இறக்கம் ஏதும் இல்லை. ஆயினும் மேடும் பள்ளமும் நிறைந்து கரடுமுரடாக உள்ளது. இருபக்கங்களிலும் விண்ணுற நிவந்து

நீர்விழ்ச்சிகள்

நிற்கும் வியன் பெரு மலைகள்; தேவதாரு மரம் செறிந்த செழுங்காடுகள்; விளைபுலங்கள்; பன்னிற மலர்களையுடைய காட்டு ரோஜாச் செடிகள்; காளிகங்கையோடு கலக்கும் கணக்கற்ற சிற்றாறுகள். கர்பியாங்கை அடுத்துக் காணப்படும் மலை வீழருவிகள் கணக்கில் அடங்கா. ஓர் இடத்தில் பெரு வெள்ளமாகப் பெருகி வீழ்ந்து ஓடும் ஒரு பேரருவி. உயரமான மலை முகட்டினின்றும் வீழ்ந்து ததளிக்கும் தண்ணீரினின்றும் சிதறும் திவலைகள் புகை போலச் சூழ்ந்துகொள்ளும். அத்துமிப் படலத்தின் மீது சூரியகிரணம் பட்டுப் பல வானவிற்களை ஒரு சேரத் தோற்றுவிக்கும். சுவர்போன்று நிற்கும் ஒரு மலையைத் துளைத்துப் பீறிட்டுக்கொண்டுவரும் மற்றோர் அருவி; தொலையில் உள்ளதொரு மலையின் சரிவில் தவழ்ந்து இறங்கும் வேறோர் அருவி மலையின் முடிமுதல் அடிவரை வெள்ளிப்பட்டம் பதித்தாற்போன்று காட்சி அளிக்கும். கருவரை ஒன்றின்மீது வளைந்து நெளிந்து கொடி கொடியாகப் பிரிந்து வழியும் மற்றொரு நீர்வீழ்ச்சி, கார் மேகத்திடையே தோன்றும் மின்னற்கொடி போன்று மிளிரும். இன்னோர் அருவி நாணிக் கோணி அடங்கி ஒடுங்கி ஒசிந்து அசைந்து நடந்து வரும் இளநங்கைபோன்று ஆலையில் பட்டும் படாதும் ஆரவாரம் இன்றி அமைதியாக இறங்கிவரும். நெடிய மலைமுடியினின்றும் புறப்படும் சில நீர் வீழ்ச்சிகளை, அவை அடியிடத்தை அடையுமுன்னரே காற்று நுண்ணிய அணுக்களாகச் சிதறடித்துவிடும். சிலவிடங்களில் நீர் தூவானமாகத் துளித்து வழிச்செல்வோரை மஞ்சனமாட்டும்; மற்றுஞ் சில விடங்களில் முத்து மழை பொழிவது போன்று நீர் சிதைந்து சிதறித் திரள் திரளாகச்

சிந்திக்கொண்டிருக்கும். இக் கவர்ச்சி மிக்க நீர்வீழ்ச்சிகள் வழிச்செல்வோர் உள்ளத்தில் எழுச்சியை உண்டாக்கி மகிழ்ச்சியூட்டும். இங்குக் காணும் நீரருவிகள் யாவும் உயிரொளி பெற்றுப் பெண்மை நலம் கனிந்து காட்சியளிக்கின்றன.

இங்ஙனம் இன்பமூட்டும் இயற்கைக் காட்சிகள் நிறைந்ததாயினும் இவ்வழி கடப்பதற்கரிய கடுமை வாய்ந்தது. வழிகாட்டி சமயம் அறிந்து சாமர்த்தியமாக முன்வந்து உதவி செய்வான்; இடுக்கண் உள்ள இடம் அறிந்து அடுத்து நின்று அழைத்துச் செல்வான்.

காலபானி

இவ்வழியில் பத்துமைல் தூரம் சென்றதும் காலபானி என்னும் இடம் உள்ளது. அதனை அடைவதற்குமுன் ஒரு மலையடியின் கீழே பெரிய கரும்பாறையினின்றும் ஒரு நீரூற்று பீரி எழுந்து பாய்ந்து ஓடுகிறது. அது சேறு படிந்து கறுப்பு நிறமுடையதாக இருப்பதால் காலபானி (கறுப்பு நீர்) எனப்படுகிறது. அதன் அருகில் உள்ள இடமும் அதன் பெயரால் வழங்கப்படுகின்றது. காலபானி என்பது ஊர் அன்று. அங்குத் தங்குவதற்கு வீடோ குடிசையோ ஏதும் இல்லை. காலபானியினின்றும் கூடாரவாசம் தொடங்குகின்றது. மீண்டும் கர்பியாங் வந்துசேரும்வரை யாத்திரை செய்வோர் கூடாரங்களிலேயே தங்க வேண்டும். கூடாரம் அடிப்பதற்கு ஏற்ற சமவெளி காலபானியில் உள்ளது. விறகடுப்பில் சமைக்கும் வேலையும் கர்பியாங்கோடு முடிவுறுகிறது. காலபானியினின்றும் உறைபனிப் பிரதேசம் தொடங்குவதால் அங்கு மரம் செடி கொடிகள் வளரமாட்டா. ஆகவே அங்கு விறகு கிடைக்காது. அங்குகின்றும் மண்ணெண்ணெய் அடுப்பையே பயன்

படுத்திக் கொள்ளவேண்டும். காலபானி கடல் அளவினின்றும் பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது. குளிரின் கடுமையும் இங்கேயே உணரப்படும். கர்பியாங்வரை பருத்தியுடையோடேயே பிரயாணம் செய்யலாம். குளிர் மிகுதியாக உள்ள சில இடங்களில் உடலுக்கு மட்டும் கம்பளிச் சட்டை அணிவது சாலும். ஆயின் காலபானியினின்றும் பருத்தியுடைகள் பயன்படா. தலைமுதல் கால்வரை கம்பள உடையே அணிய வேண்டும். காலுக்குக் கம்பளச் சட்டை; உடலுக்கு ஒன்றின் மேல் ஒன்றாக நான்கைந்து கம்பளச் சட்டைகள்; அவற்றின்மேல் நீண்ட கம்பள அங்கி; தலைக்குக் கம்பளத்தாலான குல்லாய்; கழுத்துக்குக் கம்பளப் பட்டை; கம்பளக் கையுறை காலுறைகள்; காலில் பாதத்தினின்றும் முழந்தாள்வரை சுற்றிக்கட்டும் கம்பளப்பட்டை; இவ்வளவும் அணிந்து கொள்ள வேண்டும். காலில் அல்மோராவினின்றும் வாங்கி வந்த ஆணிகள் தைத்த தோற்செருப்புக்களைப் பூட்டிக்கொள்ள வேண்டும்.

காலபானியைச் சூழ உள்ள மலைகளில் மரம் செடி கொடிகள் காணப்படா. அவை கரடு முரடான மொட்டை மலைகளாகவே தோன்றும். எனினும், அவை பல்வேறு நிறங்களோடு சித்திரத்தில் எழுதிவைத்திருப்பவை போன்று அழகாகத் தோன்றும். கர்பியாங்கினின்றும் பதினெட்டு மைல் தொலையில் உள்ள குட்டி என்னும் இடத்திற்கு அருகில் கல்லுருவாகச் சமைந்த கடற் சிப்பிகளும் மீன்களும் காணப்படுகின்றன. அவற்றைக் கொண்டு இமயமலையின் அப்பகுதி பழங் காலத்தில் கடலின் அடியில் மூழ்கியிருந்ததாக

ஆராய்ச்சியாளர் கருத்து

வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். நாம் கடவுள் உருவமாகக் கொண்டு வழிபாட்டுக்கு உபயோகித்துவரும் சாளக்கிராமங்களும் அங்ஙனம் கல்லுருவாகச் சமைந்த கடற்பிராணிகளேயாம். அத்தகைய சாளக்கிராமங்கள் நேபாளத்தில் உள்ள முத்திநாத் என்னும் இடத்திலும், உன்டாதுராக் கணவாயிலும், தர்மாக் கணவாயிலும் மிகுதியாகக் கிடைக்கின்றன.

காலபானியினின்றும் கம்பள உடைகளோடேயே பிரயாணம் செய்யவேண்டும். பெண்களும் தங்கள் ஆடைக்குமேல் கம்பள உடைகளை அணிந்து கொண்டே செல்லவேண்டும். பனியால் முகமும் உடலும் கருகி வெடித்துவிடும். உடலிலும் முகத்திலும் அடிக்கடி வாஸ்லின் எண்ணெய் பூசிக்கொள்ள வேண்டும். காலபானியிலிருந்தே பனிக்கட்டி மழை தொடங்கிவிடும். கணவாயின் அருகில் செல்லச் செல்ல அது மிகுதியாகப் பொழியும். அங்கு விழும் பனிக்கட்டியில் மனிதன் புதைந்து விடுவான். எனவே, வானநிலை தெளிந்து பனிமழை நிற்கும் வரை வழிகாட்டி கணவாயை நோக்கி முன்னேற விடான். கணவாய்க்குச் சில மைல்கள் இப்பாலேயே கூடாரம் அடித்துத் தங்கி, அதனைக் கடப்பதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருக்கவேண்டும். கணவாயைக் கடப்பதற்குக் காலை நேரமே ஏற்ற சமயமாகும். வெயில் எழுந்து பனிக்கட்டி உருகத் தொடங்குவதற்கு முன்னரே அதனைக் கடந்துவிட வேண்டும். வழிகாட்டி வானநிலையை நோக்கி அது தெளிவுற்றிருக்கும் செவ்வி அறிந்து புறப்படுமாறு கட்டளையிடுவான். புறப்படுவதற்கு முன் வயிறு நிரம்ப உணவு கொள்ளவேண்டும். லிப்புத்தடாகக் கணவாய் பதினாறாயிரம் அடி உள்ளது. அது கடப்

பதற்கு அரிய கடுமையான இடமாகும். இதன் உச்சியில் ஏறிச்செல்லுகையில் வயிறு நிறைந்திருக்க வேண்டும். உயரச் செல்லச் செல்லக் காற்றுக் குறைவாக இருக்குமாகையால் வெறும் வயிற்றோடு செல்லின் வாந்தியும் மயக்கமும் வரும். எனவே வயிறு நிறைய உணவுகொள்ள வேண்டுவதோடு, சிறிதளவு சிற்றுண்டியும், மாங்காய் வற்றல், இச்சிலிக்காய் ஊறுகாய், பேரீச்சம்பழம், மிளகு ஆகியவற்றையும் சட்டைப்பையில் எடுத்துச் செல்ல வேண்டும். அடிக்கடி, முகம், கைகால்களில் பூசிக் கொள்ள வாஸ்லைன் எண்ணெயும், மயக்கம் வரின் முகர்வதற்கு முகர் உப்பும் உடன்கொண்டு செல்ல வேண்டும்.

இப்பகுதியில் யாத்திரிகர் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ள முடியாது. அனைவரும் வழி காட்டியின் ஆணைக்கு அடங்கியே நடந்துகொள்ள வேண்டும். இடுக்கண் இன்றி அனைவரையும் கண வாயைக் கடப்பிப்பது வழிகாட்டியின் பொறுப்பு. ஆகையால், அவன் ஒவ்வொரு சிறு செயலையும் கூர்ந்து கவனிப்பான்; ஒவ்வொருவரையும் அணுகி யாவும் குறைவின்றி இருக்கின்றனவா என்று அன்போடு உசாவுவான். வேண்டுவன யாவும் மறவாமல் எடுத்துக்கொள்ளுமாறு ஒவ்வொரு வருக்கும் அடிக்கடி நினைவூட்டுவான். அனைவரும் ஆயத்தமானதும் வழிகாட்டி புறப்பட அனுமதி அளிப்பான். செல்வோர் தங்கள் உடலைக் கம்பளத் தால் மூடி மறைத்துசகொண்டு செல்லவேண்டும்.

லிப்புத்தடாகக் கணவாய் கடல் அளவினின் றும் பதினாறாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ளது. முதல் நான்கு மைல் தூரம் செங்குத் தான ஏற்றம். இவ்வழியில விரையாமல் மெல்ல

நடந்து ஏறவேண்டும். இன்றேல் தொடக்கத்தி லேயே உடல் தளர்ந்து உள்ளம் சோர்ந்துவிடும்.

கணவாயைக் கடத்தல்

உயரச் செல்லச் செல்ல வேண்டும் அளவு காற்று இன்மையால் உயிர்ப்புத் திணரும். மூக்கு, வாய் ஆகிய ஈருறுப்புக்களையும் சேரப் பயன்படுத் தினும் இதயம் துடிக்கும். வயிற்றில் உணவு குறைவாயிருப்பின் குமட்டலும் வாந்தியும் வரும். காற்றின் குறைவினல் தலை கிறுக்கி மயக்கம் உண் டாகும். இவற்றிற்குப் பரிகாரமாக அவ்வப்போது சிற்றுண்டி உட்கொள்ளவேண்டும். பின்னர் மாங் காய் வற்றல், கிச்சிலிக்காய் ஊறுகாய், பேரீச்சம் பழம், மிளகு இவற்றை மென்றுகொண்டும், முகர் உப்பை முகர்ந்து கொண்டும் செல்லவேண்டும். குதிரைமீது செல்வோர்க்கும் இவ்வின்னல்கள் உண்டு. பனிக்கட்டியின்மீது நடந்து செல்லுகையில் குருதியோட்டம் மிகவும் குறைந்துவிடும். உயிர்ப் புக்குப் போதிய காற்றின்மையால் களைப்பும் மயக்க மும் உண்டாகும். அந்நிலையில் யார்க்கும் அயர்ச்சி தீரச் சற்றுப் பனிக்கட்டியின்மீது அமரத் தோன் றும். ஆயின் அயர்ந்துள்ளோர் எவரும் பனிக்கட்டி யின்மீது அமரலாகாது. அமரின் உணர்ச்சி ஒடுங்கி உறக்கம் வரும். படுத்து உறங்குவார், பின்னர் விழித்து எழார்; பேருறக்கத்தில் ஆழ்ந்து பிணமா வர். எனவே, வழிகாட்டி யாரையும் உறைபனியின் மீது அமரவிடாமல் தடுத்துத் தொடர்ந்து நடக்கு மாறு தூண்டுவான்.

பனியடையின்மீது நடந்து செல்வது மிக்க துன்பம் தருவதொன்ருகும். காலையிற் செல்வதில் துன்பம் குறைவு என்று கூறலாமே அன்றித் துன்பமே இல்லை என்று கூறமுடியாது. கீழே பனி

யடை; மேலே பனிக்கட்டித் தூள் சிந்திய வண்ணம் இருக்கும். கம்பளத்தை விலகவிடாமல் இறுகப் போர்த்திக் கொண்டு செல்லவேண்டும். மேலே செல்லச் செல்லச் சில இடங்களில் வழி மிகவும் குறுகிவிடும். ஒருபுறம் ஆழம் காண முடியாத பள்ளம்; மறுபுறம் பனிக்கட்டியால் மூடப்பட்ட நெடிய மலை. மேலே உறைபனிப் பாறை உருகி நழுவிக்கொண்டிருக்கும். கீழுள்ள பனியடையும் மெல்ல உருகிக் கொண்டிருக்கும். பனி இளகியிருக்கும் இடங்களில் கால் இறுகிய சேற்றிற் போன்று புதையும். அவ்விடங்களில் ஊன்று கோலின் உதவி கொண்டு மெல்ல நடந்து செல்ல வேண்டும். பனியடையின் மீது நடந்து செல்கையில் கால் தளர்ந்து தடுமாறும்; தலை சுழலும்; கண் சிவந்து விடும். உயர நோக்கின் வானுலகேற வகுத்தது போன்று மேனோக்கிச் சென்று கொண்டிருக்கும் வழி மனத்தைத் திகைப்புறுத்தும். செல்வோர், முன்னுள்ள வழியை நிமிர்ந்து நோக்காமல் குனிந்து காலடியை நோக்கியவாறே உறுதியோடு செல்ல வேண்டும்.

லிப்புத் தடாகக் கணவாயின் உச்சி கடலளவுக்குமேல் பதினாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ளது. அதன் உச்சியை அணுக அணுக உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்துப் பெருகும். உச்சியை எய்தியதும் உள்ளத்தில் எழும் கிளர்ச்சி உரைக்கு அடங்காது. இங்கு இயற்கை யன்னை

லிப்புத் தடாகம்

ஒருகால் உயிருண்ணும் வீரமாகாளி போன்று தோன்றி அச்சுறுத்துவாள்; மற்றொருகால் அன்னை மலர்மகள் போன்று நன்னயங் காட்டி இன்புறுத்துவாள். உறைபனிப் படலமாகவுள்ள

கணவாய் சோதிமயமாக இருக்கும். அதனை வெறுங்கண்ணால் நோக்கின் விரைவில் கண்ணொளி மழுங்கிவிடும். எனவே இங்குக் கறுப்பு அல்லது பச்சை நிறக் கண்ணாடி அணிந்து கொள்ளுதல் வேண்டும். கீழே சிறிது தூரத்தில் வெள்ளி மயமாக விளங்கும் மலையின் இடையில் பச்சை நிறமாகத் தோன்றும் நீரையுடைய லிப்புத் தடாகம் காணப்படும். அத்தடாகத்தினின்றும் தோன்றிச் சிற்றோடை போன்று கீழ்நோக்கித் தவழ்ந்து செல்லும் காளி நதியின் குழந்தைப் பருவத்தை இங்குக் காணலாம்.

லிப்புத் தடாகக் கணவாய் இந்தியா, நேபாளம், திபேத்து ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகளும் கூடும் இடமாகும். கணவாயின் இருபக்கங்களிலும் பனியடை போர்த்த வெள்ளி மால்வரைகள் விண்ணுற நிவந்து நிற்கின்றன. அவற்றின் இடையில் உள்ள கணவாயின் இடைவெளி இருபது அடி அகலம் இருக்கும். அது கயிலைக் கோயிலுக்கு அமைந்த வாயில்போன்று உள்ளது. இங்குப் பன்னிற ஆடைகள் தோரணம் போன்று கட்டப்பட்டுள்ளன. அவை வழிச்செல்வோரால் கட்டப்படுவன. காற்றுப் போதாமையால் களைத்து வருவோர்க்குக் கணவாயில் வீசும் மென்காற்று உயிர்ப்பளித்து இன்புறச் செய்யும். இவ்விடத்தை அடைந்ததும் உலகத்திலேயே மிகப் பெரிய மலையின்மீது நிற்கிறோம் என்னும் பெருமித உணர்ச்சியால் உள்ளமும் உடலும் பொங்கிப் பூரிக்கும்; ஆரவாரமும் குழப்பமும் நிறைந்த உலகத்தைக் கடந்து அமைதியும் தெளிவும் நிறைந்த உம்பர் நாட்டை எய்தியது போன்றதோர் உணர்ச்சி

கணவாய்

தோன்றி உள்ளத்தை உவகை வெள்ளத்துள் திளைக்கச் செய்யும்.

கணவாயில் நின்று தென்றிசையாக இந்தியாவின் பக்கம் திரும்பி நோக்கின், கட்புலனுக்கு எட்டுமளவும் மலைத் தொடர்கள் அடுக்கடுக்காக ஆகாயத்தைக் தொட்டுக்கொண்டு நிற்கின்றன. அவற்றின் வடிவங்களையும் நிறங்களையும் வருணித்துக் கூறுவது கவிஞர்கட்கும் எளிதின் இயல்வதன்று. அவற்றின் மீது செழித்துச் செறிந்து வளர்ந்திருக்கும் காடுகள் பசுங் கடல் போன்று பரந்து தோன்றும். வடதிசைப் பக்கம் நோக்கின், மலைகளும் மரங்களும் இல்லாத திபேத்துப் பீடபூமி விரிந்து காணப்படும். அவ் வெல்லை காணாத வெட்ட வெளியைக் காணக் காண உள்ளத்தில் உவகை வெள்ளம் ஊன்றிப் பெருகும்.

கணவாயைக் கடந்ததும் பேரிமயத்தின் வடசாரலில் திபேத்துப் பக்கம் இறங்கவேண்டும். ஒரு மைல் தூரம் பனியடை மூடிய மலைச்சரிவில் வழி கீழ்நோக்கி இறங்குகிறது. நேராக இறங்கும் இக் குறுகிய பனிக்கட்டி வழியில் துணையாட்களின் கையைப் பற்றிக்கொண்டும், கூர்மையான இருப்புப் பூண் இட்ட தடியை ஊன்றிக்கொண்டும் வழுக்கி விழாமல் மெல்ல இறங்கவேண்டும். இவ் விறக்கத்தில் நடந்து செல்லும் மக்களினும் மூட்டை சுமந்து செல்லும் குதிரைகள் பெருந்துயர்ப்படும். இவ்விடர்ப்பாடுகளைக் கடந்து கீழே இறங்கியதும் எல்லை கடந்த இமயப் பரப்புத் தொடங்குகின்றது. சில நாட்களாகக் காற்றிலும் குளிரிலும் உழந்து வருவோர் பள்ளத்தாக்கை அடைந்ததும் வெப்பத்தை உணர்ந்தும் வெயிலைக் கண்டும் உணர்ச்சியும் மகிழ்ச்சியும் எய்துவர்.

பள்ளத்தாக்கில் இறங்கியதும் வழி பனிக் கட்டியினின்றும் ஊறிவரும் சிற்றோடைகட்கு அருகிலேயே செல்லுகின்றது. இனி உயர்ந்தோங்கிய நெடுமலைகளைக் காணமுடியாது. சிறு சிறு குன்றுகளே யாண்டும் காணப்படும். அவற்றிலும் மரம் செடி கொடிகள் காணப்படா. இதுகாறும் மரம் செடி கொடிகள் மலைகட்கு அழகு செய்து நிற்பதைக் கண்டு வந்தோர்க்கு அவை இன்றியும் மலைகள் அழகு படைத்திருத்தல் கூடும் என்பதை அக் குன்றுகள் விளக்கி நிற்கின்றன. கணவாயினின்றும் ஏழு மைல்கள் சென்றதும், பாலா என்னும் ஊர் எதிர்ப்படுகிறது. அதனைக் கடந்ததும் பட்டாணியும், வால் கோதுமையும் பயிரிடப்படும் நிலங்களுக்கு இடையே வழி செல்லுகிறது. பாலாவினின்றும் மூன்றாவது மைலில் மாக்ரம் என்னும் ஊர் உள்ளது. அவ்வூரில் நாய்கள் மிகுதியாக உள்ளன. திபேத்து நாய்கள் கொடுங்குணம் வாய்ந்தவை. அவை தோற்றத்தில் கரடிபோன்று இருக்கும். இவ்வூரினின்றும் இரண்டுமைல் தூரத்தில் தக்களக் கோட்டை உள்ளது. கணவாயின் இறக்கத்தினின்று திபேத்து நாடு தொடங்கி விடுவதால் யாத்திரையின் போக்குப் புதுமுறையில் மாறுகின்றது. முற்றிலும் மாறுபட்ட காட்சிகளும் வேறுபட்ட நுகர்ச்சிகளும் நிறைந்த திபேத்து நாட்டுச் செலவு கயிலைச் செலவிலேயே ஒரு முக்கியமான பகுதியாகும்.

6. திபேத்தும் திபேத்தியரும்

திபேத்து நாடு முழுவதும் உயரமான பீடபூமியாகும். இஃது உலகில் உள்ள ஏனைப் பீடபூமிகள் அனைத்தினும் உயரமானது. இது கடல் நிலையி

னின்றும் பதினையாயிரம் அடி உயரத்தில் உள்ளது.

திபேத்துப் பீடபூமி

கண்ணுக்கு எட்டு அளவும் எல்லையற்ற பெருவெளி கடல் போலப் பரந்து தோன்றுகிறது. மரம் செடி கொடிகள் அற்ற வெறும் மலைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. உயரமான மலைகளின்மீது உருகாத பனியடைகள் மூடிக்கொண்டுள்ளன. இங்குப் பயிர் நிலங்களைக் காண்டல் அரிது. இந்நாடு உயரமான பீடபூமியாகையால் இங்கு மழைபெய்வதில்லை; மழைக்கு மாறாகப் பனிக்கட்டியே பெய்யும். இது பெரும்பாலும் வறட்சியும் குளிர்ச்சியும் மிக்க நாடு. வேனிற் காலத்தில் மூற்பகல் வெப்பமாக இருக்கும்; பிற்பகலில் குளிர் காற்று வீசும். திபேத்தின் குளிர் தாங்குதற்கரிய கடுமையதாக உள்ளது. அஃது உடலுக்குள் ஊடுருவிச் சென்று எலும்பையும் ஒடுக்கி உள்ளத்தையும் நடுக்குறுத்தும். காற்றுப்படும் உறுப்புகள் தீயினல் சுட்டாற் போன்று தீய்ந்து கருகிவிடும். வேனிற் காலத்தில் ஆங்காங்குப் புல் பூண்டுகள் காணப்படும். நாடு முழுதும் சுற்றினும் மரங்களைக் காணமுடியாது. சில விடங்களில் ஒன்று அல்லது இரண்டு அடி உயரமுள்ள டாமா என்னும் ஒருவகைக் காரைச் செடிகள் குத்துக் குத்தாக வளர்ந்திருக்கும். அவை பசுமையாக இருக்கையிலேயே தீப் பற்றி எரியும் அற்புதத் தன்மை வாய்ந்தவை! கெண்டைக்கால் அளவே உள்ள இக்காரைச் செடிகள் வளர்ந்துள்ள இடத்தைத் திபேத்தியர் காடு என்று கூறுகின்றனர். மரத்தையே கண்டறியாத அவர்கட்கு அக்குறுஞ் செடிகளின் செறிவே காடாகக் காட்சியளிக்கிறது!

திபேத்தில் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் மிகுதியாக உள்ளன. இங்கு யாக் என்னும் ஒரு வகைச் சடைமாடுகள் வளர்க்கப்படுகின்றன. அவை கவரி என்றும், சமரி என்றும் வழங்கப் பெறும். அவை திபேத்தியருக்கு வாகனமாகவும் பொதி மாடுகளாகவும் பயன்படுகின்றன. அவற்றின் வாலில் மயிர் அடர்ந்திருக்கும். அவற்றின் வெண்ணிற மயிர் ஆலயங்களில் கடவுள் திருவுருவங்கட்கும், அரண்மனைகளில் அரசர்கட்கும் வீசப்படும் சாமரைகளாக உபயோகப்படுகின்றன; கருநிற மயிரால் மகளிர் கூந்தலோடு சேர்த்து முடித்துக்கொள்ளும் சவரி செய்யப்படுகிறது. திபேத்தியர் அவற்றின் மயிரைக்கொண்டு கூடார அமைப்புக்கு வேண்டும் கம்பளங்களைச் செய்துகொள்ளுகின்றனர். சடைமாட்டின் பாலைத் திபேத்தியர் பானமாகப் பருகுகின்றனர். அதன் மணமும் சுவையும் நம்மனோர்க்கு ஒவ்வா. சடைமாட்டின் பால் மிக்க தடிப்புள்ளதாகையால் அது நம் உடலுக்கு ஊறு பயக்கும். திபேத்தியர் அப்பாலைக் கடைந்தெடுத்து வெண்ணெயைத் தோற்பைகளில் இட்டு விற்கின்றனர். அதன் முடை நாற்றம் நம் குடரைப் புரட்டும். திபேத்தியர் உப்பிட்ட தேனீர்ப் பானத்தையும் அவ்வெண்ணெயையும் மூங்கிற் குழாயில் பெய்து கடைந்து பருகுகின்றனர். அவர்கள் அதனை விளக்கெரிக்கவும் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். சடைமாடுகளே அன்றிக் கழுதை, கோவேறு கழுதை முதலியனவும் திபேத்தியரால் வளர்க்கப்படுகின்றன. இங்கு ஜுப்பு என்னும் ஒருவகை மாடுகளும் உள்ளன. அவை சமரிக் காளைக்கும் இந்தியப் பசுவிற்கும் பிறந்த கலப்புச் சாதிப் பிராணி

பிராணிகள்

யாகும். இவை யாவும் திபேத்தியருக்குப் பொதி சுமந்து உதவுகின்றன.

திபேத்தில் பிராணிகள் அன்றி வேறு வண்டி போன்ற ஊர்திகள் கிடையா. ஆதலின் அவை செல்லுதற்குரிய நிலையான அகன்ற வழிகள் இல்லை; பிராணிகளும் மக்களும் நடந்து செல்வதால் தேய்ந்து தோன்றும் குறுகிய நடைவழிகளே உள்ளன. திபேத்தில் தக்களக் கோட்டை ஒன்றே பெரிய ஊராகும். வேறு எங்கும் அது போன்ற ஊர்களே கிடையா. ஒரு கூடாரம் அல்லது இரு கூடாரங்கள் உள்ள இடங்கள் கிராமங்கள் எனப் படுகின்றன. திபேத்திய மக்களுள் பெரும்பாலோர்

ஊரும் வீடும்

சடைமாட்டின் மயிரால் அமைத்த கூடாரங்களிலேயே வசிக்கின்றனர். சிலர் மலைச் சரிவுகளில் குகைபோன்று குழி வெட்டி அதனுள் வாழ்கின்றனர். ஒரோவழி அருமையாகக் காணப்படும் ஒரு சில வீடுகளும் கல்லாலும் மண்ணாலுமே கட்டப்பட்டுள்ளன. திபேத்தியர் வீடுகள் அழுக்கும் அசுத்தமும் நிறைந்து காணப்படும். வீடுகளைச் சுற்றிலும் ஆட்டுக் கொம்புகளும் எலும்புகளும் சிதறுண்டு கிடக்கும். அவ்வீடுகளின் அருகில் செல்லவும் நம் உள்ளம் கூசும்.

திபேத்தியருள் பெரும்பாலோர் ஆடு மாடு மேய்க்கும் ஆயர் வாழ்க்கையர்; வீடு வாயில் இன்றிக் கூடாரங்களிலும் குகைகளிலும் வசிப்பவர்; நிலையாக ஓரிடத்தில் இருந்து வாழாது அலைந்து

திபேத்திய மக்கள்

திரிபவர். அவர்களில் வாணிகம் செய்து வாழ்வோரும் சிலர் உள்ளனர். அவர்கள் கம்பளம், உப்பு, வெங்காரம் போன்ற பொருள்களை ஓரிடத்தி

னின்றும் வேறிடங்கட்குக் கொண்டு சென்று விற்கின்றனர். அவர்கள் தூய்மை இன்றி நாகரிகம் அற்ற நிலையில் உள்ளனர். பல் துலக்குவதும், நீராடுவதும், ஆடை துவைப்பதும் அவர்கள் அறியாத செயல்களாகும். அவர்கள் உடலினின்றும் ஒருவகைத் துர்நாற்றம் வீசும்; உடையில் வெண்ணெய் ஊறிக் கிடக்கும். திபேத்தியர் உடல் வன்மை வாய்ந்தவர்கள்; ஆயின் அழகுடையவர்கள் அல்லர். வெறுக்கத்தக்க விகாரத்தோற்றம் உடையவர்கள். குளிர் காற்றினுல் அவர்கள் முகமும் கையும் கரிந்து கருத்திருக்கும். அவர்கள் குளிர் காற்றின் கொடுமையினின்றும் காத்துக்கொள்ளுதற் பொருட்டு உடல் முழுதும் சடைமாட்டின் வெண்ணெயைப் பூசிக் கொள்ளுவர்; தாளளவு நீண்ட கம்பள உடைகளையும், காலுறைகளையும் அணிவர். குளிர் காலத்தில் அவர்கள் ஆட்டுத் தோலினுலான உடையை உடுப்பர். திபேத்தில் ஆடவர் முகத்திலும் மயிர் வளர்வதில்லை. ஆடவரும் பெண்டிரும் ஒத்த உடையே உடுக்கின்றனர். இருபாலரும் தலை மயிரைப் பின்னிக்கொள்ளுகின்றனர். இங்கு இருபாலார்க்கும் வேற்றுமை காண்பது அரிது.

திபேத்திய ஆடவர்கள் இடக் காதில் பெரிய வளையல்களை அணிகின்றனர். மகளிர் தலைமயிரைப் பல சடைகளாகப் பின்னி, நுனியில் சோழிகளையும் மணிகளையும் கோத்த கோவைகளைத் தொங்க விட்டுக் கொள்ளுகின்றனர். அவர்கள் அணியும் ஆபரணங்கள் பெரும்பாலும் வெள்ளியும் பவளமும் கலந்தவை. கஸ்தூரி மான்களின் கொம்புகளையும் அவர்கள் கழுத்தணியாக அணிவர். அவர்கள் முத்தும் பவளமும் கோக்கப் பெற்ற தலைப்பாகைகளை அணிவதும் உண்டு. பேய் பிசாசுகள் தீண்டா

திருத்தற் பொருட்டு மந்திரம் பொறித்த கவசங்களை யும் செபமாலைகளையும் கழுத்தில் அணிந்துகொள்ளு கின்றனர். அந்நாட்டு மகளிர் முகத்தில் உண் டாகும் பனிப் புண்ணை மறைக்கக் கருப்பட்டி பூசிக் கொள்ளுவர். இது பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாயிருக்கும்.

ஆடவரும் பெண்டிரும் தக்ளியால் நூல் நூற் பர்; எலும்பினாற் செய்த ஊசி கொண்டு கையுறை காலுறைகள் பின்னுவர். பெண்டிர் சாணம் சேர்க்கும் கூடை ஒன்றை முதுகில் கட்டிக்கொண் டிருப்பர். திபேத்தில் விறகு கிடையாதாகலின் ஆடு, குதிரை, சடைமாடு ஆகிய பிராணிகளின் உலர்ந்த சாணத்தைக் கொண்டே அடுப்பு எரிக்க வேண்டும். திபேத்தியர் தங்கள் ஆடு மாடுகட்கு எங்கெங்குப் புல் கிடைக்குமோ அங்கெல்லாம் சென்று கூடாரம் அமைத்துக்கொண்டு வாழ்கின்ற னர். அவர்கள் புகையிலை, கத்திகள், எலும்புக் கரண்டிகள், உணவுகள் இவற்றைச் சட்டைப் பையில் உடன்கொண்டு செல்லுகின்றனர். அவர் கள் வளர்க்கும் ஆயிரக் கணக்கான ஆடுமாடுகள் கல்வளைகளில் அரிதாகக் காணப்படும் அற்பப் புல் பூண்டுகளை மேய்ந்து உயிர் வாழ்வது வியக்கத்தக்க தாகும்.

திபேத்தியர் புலால் உண்பவர்கள். வறுத்த கோதுமை மாவு, பச்சை இறைச்சி இவையே திபேத்தியரின் சிறப்புணவுகள். சடைமாட்டின் பாலையும் வெண்ணெயையும் அவர்கள் விரும்பி உட்கொள்ளுகின்றனர்; பிராணிகளின் உலர்ந்த சாணத்தைக் கொண்டு துருத்தியின் உதவியால் தீ மூட்டித் தேயிலைப் பானம் செய்து பருகுகின்ற

னர். திபேத்தியர் ஒருவகை மதுபானமும் செய்கின்றனர். அவர்கள் எங்குச் செல்லினும் அப்பானம் நிரம்பிய மரப்புட்டிலை உடன்கொண்டு செல்வர்; நண்பர்களைக் கண்டு அளவளாவுகையில் அதனை மரக்கிண்ணங்களிற் பெய்து வைத்துக் கொண்டு பேச்சுக்கு இடையிடையே பருகி மகிழ்வர்.

திபேத்தில் ஒரு பெண்ணைச் சகோதரர் பலர் சேர்ந்து மணம் செய்து கொள்வது வழக்கமாக நிகழ்ந்து வருகிறது. இவ்வழக்கம் பாண்டவர் ஐவர் பாஞ்சாலி ஒருத்தியை மணந்ததாகக் கூறும் பாரதச் செய்தியை நினைவூட்டுகின்றது. கைம்பெண் மணமும் இங்குப் பெருவழக்காக உள்ளது. இதற்குக் காரணம் இந்நாட்டில் பெண்டிர் தொகை ஆடவர் தொகையினும் மிகவும் குறைவாக இருத்தலே ஆகும். இந்நிலை கருதியே இங்கு ஒவ்வொரு குடும்பத்திலும் ஆடவர் பலர் துறவிகளாகின்றனர் போலும்! ஆடவர்களிலும் பெண்டிர் குறைந்தவர்களாக உள்ள சமூகங்களில் இங்ஙனம் ஒரு பெண் பல ஆடவரை மணக்கும் வழக்கம் காணப்படும். மலைகளில் வாழும் மக்களிடையே இவ்வழக்கம் மிகுதியாகக் காணப்படுகின்றது. நம் நாட்டிலும் நீலகிரியில் உள்ள தோதவர்களிடையே இவ்வழக்கம் உண்டு.

திபேத்தியர் வழங்கும் மொழி திபேத்து - பர்மாத் தொகுதியைச் சேர்ந்தது. இது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தொம்மிசம்போதனல் தோற்றுவிக்கப்பட்டது என்பர். பௌத்தத் துறவிகளாகிய லாமாக்கள் இதனைப் போற்றி வளர்த்து வருகின்றனர். எனினும், திபேத்தியருள் கல்வி கற்றவர்கள் மிகவும் அரியராவர்.

திபேத்தியர் அனைவரும் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுள் துறவு பூண்டவர்கள் லாமாக்கள் எனப்படுவர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இருவர் லாமாவாக விடப்படுவர். மகளிர் துறவு பூண்டு லாமாக்களாவதும் உண்டு. லாமாக்கள் கோம்பா என்னும் மடங்களில் தங்கி வசிப்பர். அவர்கள், மடங்களில் புத்தர் பெருமானின் திருவுருவச் சிலைகளை வைத்து வழிபடுகின்றனர். நம் நாட்டில் வேதியர்கள் காயத்திரி மந்திரம் ஓதுவது போன்று திபேத்தியர்கள் 'ஓம் மணி பத்மேஹூம்' என்னும் மந்திரத்தை ஓயாது ஓதுகின்றனர். ஆடவர், பெண்டிர், முதியோர், இளைஞர் அனைவரும் அம்மந்திரத்தை அனவரதமும் உச்சரிக்கின்றனர். நம் நாட்டினர் ஜபம் செய்கையில் மணிமாலையை உருட்டுவது போன்று அவர்கள் தரும சக்கரம் என்னும் ஒன்றைக் கையிற் கொண்டு சுழற்றுகின்றனர். அது தாமிரத்தால் நாழி போன்று கைப்பிடி உள்ளதாகச் செய்யப்பட்டுள்ளது. அம்மந்திரத்தை ஒரு தாளில் பலமுறை எழுதி அதனை அந்நாழியுள் இட்டுக் கைப்பிடியைப் பற்றிக்கொண்டு சுற்றிய வண்ணமிருக்கின்றனர். அம்மந்திரத்தைக் கல்லிற் பொறித்து ஊர் தோறும் தலைவாயிற் சுவரில் பதித்துள்ளனர். வழிகளிலும் மலைகளிலும் அம்மந்திரக் கற்களைக் காணலாம். எலும்புகளிலும் கொம்புகளிலும் குகைகளிலும் அம் மந்திரம் எழுதப்பட்டிருக்கும். அவர்கள் ஆங்காங்குக் கற்களைக் குவித்து, அக் குவியலின் இடையே ஓர் உயரமான கல்லைத் தூண்போல நிறுத்தி, அதில் செம்மண் பூசிப் பன்னிறச் சிலைகளைக் கட்டி வழிபடுகிறார்கள். மாலையில் திபேத்தியர் மைதானங்

களிற் கூடி முழந்தாள் படியிட்டு மந்திரம் ஓதி மனம் உருகி வந்தனை செய்வர். இளவேனிற் காலத்தில் அவர்கள் ஒரு விழாக் கொண்டாடுகின்றனர். அவ் விழாவில் லாமாக்கள் அலங்காரமான பட்டாடை களை அணிந்து தலைவேடம் புனைந்து மந்திரம் ஓதி வழிபாடு செய்வது வழக்கம். திபேத்தியர்கள் நாக ரிகம் அற்ற நிலையில் இருப்பினும் அவர்களுடைய மூடபக்தி வியத்தற்குரியதாகும். அஃது அவர்க ளுடைய அழுக்கிலும் அசுத்தத்திலும் ஊறியிருப்பி னும் தூய்மை குன்றாது சுடர்விட்டுத் திகழ்கின் றது. மடங்களில் உள்ள லாமாக்கள் தூயராகவே காணப்படுகின்றனர். அவர்களது உடையும் உடலும் தூய்மையாகவே உள்ளன. அவர்கள் தலையை மொட்டை யடித்துக்கொண்டு ஊதா நிற மான ஆடையை உடுத்திருக்கின்றனர். மடங்களிற் சிறுவர் சிறுமியருக்குக் கல்வி கற்பிக்கும் பணியும் நடைபெறுகிறது. சிறுவர்கள் அங்கேயே தங்கிக் கல்வி பயில்கின்றனர்.

திபேத்து நாட்டின் ஆட்சி முறை புதுமை யானது. அந்நாட்டில் கோனாட்சியும் இல்லை; குடி யாட்சியும் இல்லை. அந்நாட்டின் அதிகாரம் முழுவ தும் துறவிகளாகிய லாமாக்களிடமே உள்ளது. மடாதிபதியாகிய லாமா ஒருவரே சர்வாதிகாரியாக அந்நாட்டை ஆண்டு வருகிறார்.

ஆட்சி முறை

அரசியல் கருமங்களை நடத்த வேறு அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் மடத்தில் உள்ள லாமாக் களின் ஆணைக்கு அடங்கியே அலுவல்களை ஆற்று வர். மக்களும் லாமாக்களின் உதவியைக் கொண்டே வாழ்க்கை நடத்துகின்றனர். மக்களைத் தீய வழியில் செல்லவிடாது கட்டுப் படுத்துவதும்,

நல்ல வழியில் செல்லுமாறு தூண்டுவதும் மடங்களில் உள்ள லாமாக்களின் கடமைகளாகும். மக்கள் அனைவரும் லாமாக்களிடம் மிக்க பக்தியும் பயமும் கொண்டு அவர்கள் ஆணைக்கு அடங்கி ஒழுகுகின்றனர். நாட்டின் முன்னேற்றத்திற்குரிய பொது நல வேலைகள் மடங்களில் வாழும் லாமாக்களாலேயே கவனிக்கப்படுகின்றன. லாமாக்களிடம் உறுதியான கற்பொழுக்கம் காணப்படவில்லை. அவர்கள் அதனை ஒரு குற்றமாகக் கருதவில்லை.

வாணிகம்-நாணயம்

திபேத்தின் வாணிகம் முழுவதும் பூட்டியர்களிடமே உள்ளது. மேற்குத் திபேத்தில் பூட்டியர்களுடைய மண்டிகள் பல உள்ளன. அவர்கள் அம்மண்டிகளில் திபேத்தியப் பொருள்கட்கு இந்தியப் பொருள்களைப் பண்டமாற்றுச் செய்கின்றனர். அவர்கள் திபேத்தில் கிடைக்கும் கம்பளம், வெங்காரம், சவரி மயிர் முதலிய பொருள்களைக் கொண்டு வந்து இந்தியாவில் விற்று, இந்தியாவினின்றும் ஆடை, வெல்லம், கோதுமை, அரிசி முதலிய பொருள்களைக் கொண்டு சென்று திபேத்தில் வாணிகம் செய்கின்றனர். திபேத்தில் நாணய வழக்கம் மிகவும் குறைவாக உள்ளது. அங்கு டாங்கா என்னும் ஒருவகை நாணயம் அரிதாக வழங்குகிறது. அது வெள்ளியால் ஆகியது. அங்கு வேறு சில்லறை நாணயங்கள் கிடையா. குறை நாணயம் வேண்டுமாயின் முழு நாணயத்தை முறித்துக் கொடுக்கின்றனர். அவ்வாறு முறிக்கப்படும் துண்டுகளின் சிறுமை பெருமைகளை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அந்நாணயத்தைப் போன்று போலி நாணயம் செய்வது மிகவும் எளிது. ஆயினும், அங்கு எவரும் அவ்வாறு செய்வதில்லை.

இந்தியாவில் வழங்கும் நோட்டு அங்குச் செலாவணி யாகாது. இந்திய ரூபாயாயின் அதனை டாங்காக் களாக மாற்றிக் கொள்ளலாம்.

இந்தியாவினிடத்தும் இந்திய மக்கள்பாலும் திபேத்தியர் மிக்க அன்பு பாராட்டுகின்றனர். இந்தியாவினின்றும் செல்வோரை அவர்கள் அன் போடு வரவேற்று உபசரிக்கின்றனர். இங்கு நின்று செல்லும் துறவிகளை அவர்கள் காசி லாமாக்கள் என்று அழைத்துச் சிறப்புச் செய்கின்றனர். வேறு நாட்டினர் திபேத்துக்குள் செல்ல வேண்டு மாயின், முன் அனுமதி பெறவேண்டும். ஆயின் இந்தியர் அனுமதியின்றியே திபேத்துக்குள் எங்கும் தடையின்றிச் செல்லலாம். இங்ஙனம் திபேத்தியர் இந்தியாவினிடத்தும் இந்தியர்களிடத்தும் பேரன் புடையராய் இருத்தற்குக் காரணம் இந்தியாவில் தோன்றிய பௌத்த மதத்தை அவர்கள் பின் பற்றி ஒழுகுவதேயாகும். திபேத்திய அரசாங்கம் கயிலைக்குச் செல்லும் இந்தியர்கட்கு வேண்டும் பாதுகாப்புக்கள் அனைத்தும் அளித்து உதவி வரு கிறது. இந்தியாவுக்கும் திபேத்துக்கும் உள்ள உறவு எதிர்காலத்தில் மேலும் உறுதி பெறுதல் கூடும்.

திபேத்தும் இந்தியாவும்

7. திபேத்தில் பிரயாணம்

திபேத் எல்லையில் லிப்புத் தடாகக் கணவாயி னின்றும் பன்னிரண்டு மைல் தொலையில் உள்ளது தக்களக் கோட்டை என்னும் ஊர். இது கடல் அளவி னின்றும் பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ள புராங் என்னும் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றது. திபேத்தில் உள்ள ஊர்

தக்களக் கோட்டை

களில் இஃது ஒன்றே மிகப் பெரிய ஊராகும். இது பெரிய வியாபாரத் தலமாகவும் உள்ளது. இங்கும் பூட்டியர்களுடைய மண்டிகள் பல உள்ளன. வேனிற்காலத்தில் இங்குச் சந்தைகள் கூடும். பூட்டியர்கள் உயரமாக எழுப்பப்பட்ட சுவர்களின்மேல் கூடாரங்கள் அமைத்துக்கொண்டு தங்கி வாணிகம் செய்வர். குளிர்காலத்தில் கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு வேற்றிடங்கட்குச் சென்றுவிடுவர். இங்குள்ள மண்டிகளில் வறுத்த கோதுமை மாவு, வால்கோதுமை, அரிசி, சர்க்கரை, திராட்சைப் பழம், மண்ணெண்ணெய், கூடாரம், கம்பளம், துப்பாக்கி முதலியன விற்கப்படும். திபேத்தில் தக்களக் கோட்டையினின்றும் நீங்கிய பின்னர் எங்கும் எப்பொருளும் கிடையாவாகையால் கயிலாயம் செல்வோர் வேண்டும் பொருள்களை இங்கேயே வாங்கிக் கொள்ளுதல் வேண்டும். இங்கு ஜூங்பன் என்னும் திபேத்திய அரசியல் அதிகாரி இருக்கிறார். அவர் நம் நாட்டில் உள்ள கலெக்டருக்கு ஒப்பாவார்.

தக்களக் கோட்டை கர்னலி என்னும் நதிக் கரையில் உள்ளது. இது பிரமபுத்திரா நதியின் உபநதிகளுள் ஒன்றாகும். இதன் அருகில் தக்களக் கோட் என்னும் சிற்றாறும் ஓடுகிறது. இவ்வாறுகளின் நீர் வாய்க்கால்களின் வழியாகப் பாய்ச்சப்பட்டு, கோதுமை. பட்டாணிக் கடலை முதலியன பயிர் செய்யப்படுகின்றன. திபேத்தில் இவ்வூரில் அன்றி வேறெங்கும் பயிர்த்தொழில் நடைபெறுவதில்லை.

கயிலாயம் செல்வோர் தக்களக் கோட்டையில் கூடாரம் அமைத்துக்கொண்டு தங்கவேண்டும். நம் கிராம மக்கள் வேற்று நாட்டு மக்களைக் காணின்

திபேத்தியர் வியப்பு

அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் செயல்களை வியப்போடு பார்த்து மகிழ்வது போலவே, திபேத்தியர்கள் இந்தியாவினின்று செல்லும் யாத்திரிகர்களைச் சூழ்ந்து கொள்ளுகின்றனர். அயலார் உணவு சமைக்கும் இடத்தை அணுகலாகா தென்பதை அவர்கள் அறியார். அவர்கள் யாத்திரிகர்களின் கூடாரத்தைச் சுற்றி வட்டமாக அமர்ந்து, கூடாரத் துணியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, உள்ளே யாத்திரிகர் உணவு சமைப்பதை வியப்போடு உற்று நோக்குவர். அடுப்பில் உணவு சமைப்பதை அறியாத திபேத்தியர் யாத்திரிகர்களின் மண்ணெண்ணெய் அடுப்புச் சத்தமிட்டுக் கொண்டு எரிவதையும், அதில் அவர்கள் வெவ்வேறு உணவுகளைச் சமைப்பதையும், தையல் இலையில் உணவை இட்டுக்கொண்டு உண்பதையும் கண்டு வியப்பர்; வெளியே எறியும் எச்சில் இலையைப் பலரும் போட்டியிட்டுக்கொண்டு பற்றிப் பிய்த்துக் கொண்டு ஓடுவர். யாத்திரிகர்கள் பல் துலக்குவது, கைகால் கழுவுவது, குளிப்பது, ஆடை துவைப்பது ஆகியவை அனைத்தும் அவர்கட்கு வியப்புத் தரும் புதுமைச் செயல்களாகத் தோன்றும். யாத்திரிகர்கள் அவர்களைப் பொருட்படுத்தாமல் தங்கள் காரியங்களைக் கவனிக்கவேண்டும். திபேத்தியர் பிறர் தங்களை அவமானப்படுத்துவதைப் பொறுக்க மாட்டார்கள். ஆகவே அவர்களை வெருட்டி விலக்க முயன்றால் அது பின்னர்ப் பூசலாக முடியும்.

தக்களக் கோட்டையில் ஒரு குன்றின் உச்சியில் ஸிமிலிங் கோம்பா என்னும் பௌத்த மடாலயம் உள்ளது. அக்குன்று மிகக உயரமுள்ளது அன்று எனினும் செங்குத்தாக இருக்கிறது. ஏற ஏற அஃது

உயர்ந்துகொண்டே போவது போன்று தோன்றும். நடந்து ஏற மாட்டாதார் குதிரைமீது ஏறிச் செல்வர்.

பௌத்த மடாலயம்

மடாலயத்தின் கருமங்களைக் கவனிக்கும் லாமாக்கள் யாத்திரிகர்களை அன்போடு வரவேற்று அழைத்துச் சென்று மடாலயம் முழுவதையும் சுற்றிக் காட்டுவர். மடாலயக் கட்டடம் மிகவும் பெரியது. மரமே வளராத நாட்டில் மிகப் பெரிய மரங்களைக்கொண்டு அத்துணைப் பெரிய கட்டடத்தைக் கட்டியிருப்பது வியக்கத்தக்கதாகும். அம்மடாலயத்தில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தங்கிக் கல்வி கற்று வருகின்றனர். மடாலயம் முழுவதும் சடைமாட்டு வெண்ணெயின் வாடை வீசுகிறது. மடாலயத்தின் நடுக் கூடத்தில் உயரமான பீடத்தின்மீது பொன்போன்று மின்னும் ஆறடி உயரமுள்ள புத்தர் பெருமானின் திருவுருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதனைச் சூழத் தியான நிலையில் உள்ள புத்தரின் சிறு சிலைகள் பல உள்ளன. கூடம் முழுதும் வெண்ணெய் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். புத்தர் திருவுருவத்தின்முன் லாமாக்கள் அணியணியாக அமர்ந்து 'ஓம் மணி பத்மேஹூம்' என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டிருப்பர். வழிபாட்டின்போது மேளம், தாளம், நாதசுரம் முதலிய இன்னியங்கள் முழங்கும். அம்முழக்கங்கள் பின்னணியாக அமைய லாமாக்கள் அனைவரும் சேர்ந்து உண்மை அன்போடு உருக்கமாகப் பிரார்த்தனை செய்வர். பிரார்த்தனை முடிந்த பின்னர் அவர்கள் ஒவ்வொருவராகப் புத்தர் திருவுருவத்தின்முன் வணங்குவர். அவர்கள் புத்தரை வழிபடும் காட்சி காண்போர் மனத்தைக் கவரும்; அவர்களுடைய வாழ்த்தும் வணக்க

மும் கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும். அவர்கள் வழிபாடு முடிந்ததும், யாத்திரிகர், சிலையின் அருகிற் சென்று வணங்கலாம். பின்னர் லாமாக்கள் யாத்திரிகர்களை மடாதிபதியிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துவர். அவர் அன்போடு வரவேற்று அவர்களுடைய கயிலைச் செலவு இனிது முடியவேண்டும் என்று வாழ்த்துவார்; அவர்களுடைய நலத்திற்காக மந்திரம் ஓதிப் பிரார்த்தனை செய்வார்; பிரசாதம் வழங்கி ஆசி கூறுவார். யாத்திரிகர்களிடம் அவர் காட்டும் பரிவு பாராட்டுதற்குரியது.

தரும சக்கரம்

அம்மடாலயத்தில் மிகப் பெரிய வடிவுடைய தரும சக்கரம் ஒன்று உள்ளது. அஃது இடைவிடாமல் சுற்றியவண்ணம் இருக்கிறது. ஒரு சுற்றுக்கு ஒருமுறை மணி ஒலிக்கிறது. அவ்வொலியோடு 'ஓம் மணி பத்மேஹூம்' என்னும் மந்திரமும் முழக்கப்படுகிறது. அச் சக்கரத்தினுள் ஆள் புகுந்துகொண்டு அதனை ஓயாமல் சுற்றிக்கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். அதுவன்றியும் அம் மந்திரத்தைக் காகிதத்தில் பல்லாயிரம் முறை எழுதி, அதனைப் பீப்பாய் போன்ற பெரிய உருளைகளில் இட்டு, உருட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நூல் நிலையம்

மடாலயத்தில் மிகப் பெரிய நூல் நிலையம் உள்ளது. சுவர்களில் புத்தர் வாழ்க்கை வரலாறு, யோக சாதன வகைகள், சுவர்க்கம், நரகம் ஆகிய அனைத்தும் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அதில் திபேத்திய மொழியில் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. பாலிகிரந்தத்தில வரையப்பட்டுள்ள

பௌத்த சமய நூல்கள் பல அங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. வைத்தியம், தத்துவம், வான நூல், ஜோதிடம் ஆகிய கலைகள் பற்றிய பழைய வடமொழி நூல்கள் பலவற்றின் மொழிபெயர்ப்புக் களும் அங்கு இருப்பதாகக் கூறுகின்றனர். அங் குள்ள நூல்களை ஆராய்ந்தறிய வேண்டின் பல் லாண்டுகள் அங்குத் தங்கியிருத்தல் வேண்டும்.

மடாலயத்தைச் சார்ந்து ஜாங்பன் என்னும் அரசியல் அதிகாரியின் வீடு உள்ளது. மடாலயத் தின் வெளிமாடத்தின் மேலிருந்து சுற்றுப்புறக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். தக்களக் கோட்டை ஆறும் கர்னலி நதியும் கூடும் அழகிய கூடுதுறையை அங்கிருந்தவாறே காணலாம். வால் கோதுமையும் பட்டாணியும் பயிர் செய்யப்படும் நிலங்கள் பச்சைப் பசேலெனப் பரந்து தோன்றும். அத்தகைய காட்சியைக் கயிலை சென்று மீளும் வரை வேறு எங்கும் காணமுடியாது. பனியடை போர்த்துப் பெருமிதமாக நிற்கும் மாந்தாதா மலை யின் தோற்றம் மகிழ்ச்சியூட்டா நிற்கும்.

தக்களக் கோட்டையினின்றும் கயிலைக்கு இரு வழிகள் செல்லுகின்றன. ஒன்று ஞானி மண்டி, தீர்த்தபுரி, தர்ச்சன் வழியாகக் கயிலைக்குச் செல்லு கிறது. மற்றொன்று மாந்தாதா மலைப்பக்கமாகச் சென்று, குர்லாங் கணவாயைக் கடந்து, இராட்சஸ தடாகம், மானசசரோவரம் ஆகியவற்றைத் தாண்டிக் கயிலையை அடைகிறது.

தக்களக் கோட்டைவரை வழியில் இடை யிடையே ஊர்கள் உண்டு. ஓர் ஊரினின்றும் மற் றோர் ஊருக்குள்ள தூரம் இவ்வளவு என்று கூற முடியும். ஆனால் தக்களக் கோட்டையைக் கடந்து

திபேத்தின் உள் நாடு

திபேத்தின் உள்நாட்டில் செல்லுவது கரைகாணாத பெருங்கடலில் செல்லுவது போன்றதாகும். வழியிடையில் ஊர்களைக் காண்பது அரிது. ஓர் இடத்தினின்றும் மற்றோர் இடத்திற்குள்ள தூரத்தை அளவிட்டு அறிந்து கூறல் இயலாது. 'இத்தனை நாள் செலவு' என்னும் அவ்வளவே கூற முடியும். வழியில் ஏற்றம் இறக்கங்கள் இல்லாமை யால் ஒரு நாளில் பதினைந்து மைல் தூரம் நடத்தல் கூடும். தக்களக் கோட்டையினின்றும் தீர்த்தபுரியை ஐந்து நாட்களிலும், அங்கு நின்றும் கயிலை மலை அடியை மூன்று நாட்களிலும் அடையலாம். குர்லாக் கணவாய் வழி கிட்டியதாகையால் அவ்வழியாகச் செல்லின் ஐந்தே நாட்களில் கயிலையைச் சேரலாம்.

உள்நாட்டில் பலவிடங்கள், கண்ணுக்கு எட்டும் அளவும் கடல்போலப் பரந்து தோன்றும் வெட்ட வெளியாக இருக்கும். வேனிற் காலத்தில் ஆங் காங்குச் சிறிது புல் பூண்டுகளும், குறுஞ் செடி களும் வளர்ந்திருக்கும். குறுமுயல்களுமே காட்டுக் குதிரைகளும் மிகுதியாகக் காணப்படும். திபேத் தில் எங்குமே அமைக்கப்பட்ட அகன்ற வழிகள் இல்லை. மாவும் மக்களும் நடந்து செல்லுவதனால் தேய்ந்து காணப்படும் கொடிவழிகளே உண்டு. மந்திரம் பொறித்த கற்குவியல்களும் சோர்ட்டன் என்னும் புனிதக் கட்டடங்களுமே வழி செல்லும் இடங்களை அறிவிக்கும் குறிகளாகும். கடலிற் செல்லும் மரக்கலங்கட்குக் கலங்கரை விளக்கம் போன்று அவை அவ்வெட்ட வெளியிற் செல்வோர்க்கு வழிகாட்டி உதவுகின்றன. வழியின் இயல்புகளை நன்கு அறிந்த வழிகாட்டியின் துணை யின்றி இவ்விடங்களிற் செல்லுதல் இயலாது.

சிலவிடங்களில் வழி குண்டாங் கற்களும் கூழாங்கற்களும் நிறைந்து நடந்து செல்லு வோர்க்கு இடர்மிகத் தருவதாக இருக்கும். பல் வேறு நிறமுள்ள மணலும், பரலும், கூழாங்கற் களும் விரவிப் பரவிக் கிடக்கும். காடுகள், நெடுஞ் சுவர் போன்று நிமிர்ந்து நிற்கும் குன்றுகள், அவற்றின் மீது உறைந்து படிந்திருக்கும் பனியடை இவை விழிகட்கு விருந்தாகும் அழகிய காட்சி களாகத் தோன்றும். சிலவிடங்களில் செந்நிறக் கற்களும், பச்சைநிறப் பாறைகளும் குவியல் குவிய லாகக் குவிந்திருக்கும்; சில இடங்களில் அவை வாரி இறைக்கப்பட்டாற் போன்று சிதறிக் கிடக்கும். குன்றுகள் யாவும் புல் பூண்டுகள் இன்றி இருப் பினும் விதம் விதமான நிறங்களுடன் விளங்கு கின்றன. இங்ஙனம் குன்றுகளும், பாறைகளும், கற்களும் வெவ்வேறு நிறமுடையவையாக அமைந் திருப்பது இந்நாட்டிற்கே உரிய தனியியல்பாகும். இஃது அப்பிரதேசத்திற்கு ஒரு தனி அழகையும் கவர்ச்சியையும் தருகிறது. அவை தொலைவில் நின்று நோக்கும்போது பல நிறங்கள் கொண்டு தீட்டப்பெற்ற வண்ண ஓவியங்கள் போன்று தோன்றுகின்றன.

தாழ்நிலங்களில் வாழ்ந்து பழகியவர்கட்கு உயரமான திபேத்தின் வெட்ட வெளியிற் செல்லு கையில் திகைப்பும் மயக்கமும் உண்டாகும். அச் சமயங்களில் மாங்காய் வற்றல், ஊறுகாய் இவற்றை வாயிலிட்டு மென்று கொண்டே செல்லவேண்டும். திபேத்தின் உட்பகுதியுள் செல்லச்செல்ல நாளுக்கு நாள் பசி குறைந்துகொண்டே வரும். குளிர்ச்சி மிகுதியால் சீரணக் கருவிகள் வலியிழந்து தளர்ந்து விடுகின்றன. கயிலாயம் யோகத்திற்குரிய இடமாக

லின் அங்குப் போகத்திற்குரிய உணவின் மீது இயல்பாகவே வெறுப்பு உண்டாகின்றது போதும்! மேலும், திபேத்தில் எவ்வகைப் பருப்பும் வேவ தில்லை. அரிசியும் அடுப்பில் உள்ளவரை சோருகக் காணப்படுமே அன்றிக் கீழே இறக்கி வைத்ததும் ஊறிய அரிசி போன்று உருமாறிவிடும். எனவே, திபேத்தில் உள்ளவரையில் கோதுமை உணவே கொள்ளவேண்டும்.

திபேத்து, பனிமிக்க குளிர்நாடு. சில வேளை களில் அங்குப் பனிக்கட்டி மழைபோலப் பொழியும். மாலைக்காலத்தில் கடுமையான குளிர் காற்று வீசத் தொடங்கும். அக்குளிரின் கடுமையை நம்மனோர் தாங்குதல் அரிது. காற்றுப்படும் அவயவங்கள் கருகித் தீய்ந்துவிடும். அடிக்கடி எண்ணெய் பூசிவரி னும் முகத்தில் தோல் உரிந்துவிடும். இரவில் குளிர் மிகவும் கடுமையாக இருக்கும். உள்ள கம்பள உடைகளையெல்லாம் ஒன்றன் மேல் ஒன்ருக அணிந்து, அவற்றின் மீது போர்வையை விரித்துப் போர்த்துக்கொண்டு மூட்டைபோல முடங்கிக் கிடந்து உறங்கவேண்டும்.

திபேத்தில் ஆறுகளைக் கடத்தல் அருஞ்செய லாகும். வழிநெடுக ஓடைகளும் சிற்ருறுகளும் பல குறுக்கிடுகின்றன. அவை உறைபனியினின்றும் ஊறிவருவன ஆகையால் குளிர்ச்சியில் பனிக் கட்டிக்குக் குறைந்தவை அல்ல. அன்றியும் அவற் றின் கடுவிசையைக் காணின் தலை சுழலும். அவற்றைக் கடப்பது நம்மனோர்க்கு எளிதன்று. அவை குறுக்கிடும் இடங்களில் வழிகாட்டி யாத்திரி கர்களை ஒவ்வொருவராகத் தூக்கிச் சென்று அக் கரை சேர்ப்பான். பேராறுகளை எவராலும் நடந்து கடத்தல் இயலாது. திபேத்தில் பேராறு

கட்குப் பாலங்கள் கிடையா. அவை கடுவிசையோடு கற்களையும் பாறைகளையும் புரட்டி உருட்டிக் கொண்டுசெல்லும். குதிரையின் உதவி கொண்டே அவற்றைக் கடத்தல் வேண்டும். வழிகாட்டி யாத்திரிகர்களைக் குதிரைகளின்மீது ஏறியிருக்கச் செய்து, அவற்றை அடித்து விரட்டி ஆற்றில் செலுத்துவான். ஆற்றில் அவை படும்பாடு கூற லாவதன்று. அடிக்கும் அலைப்புக்கும் அஞ்சி அவை அரும்பாடு பட்டு அக்கரையை அடையும். இடையில் குதிரையினின்றும் மனிதன் தவறி விழுந் தால் அவனை மீண்டும் காணமுடியாது. குதிரையே வழுக்கி வீழ்ந்தால் ஈருயிரும் ஒருசேர நமனுலகம் சென்று சேரும். இறைவனிடம் நம்பிக்கை இல்லாதவர்கள் இவ்விடுக்கண்களைக் கடத்தல் அரிது. சிலவிடங்களில் வழி உறைபனியின்மீது ஒடுங்கிச் செல்லும். அவ்வழியில் நடந்து செல்லு கையில் இடையில் இடுக்கண் நேர்தல் கூடும். வழிகாட்டி முதலில் தான் ஒருமுறை அதன்மீது சென்று அதன் நிலையைச் சோதித்த பின்னரே மற்றவர்களைச் செல்ல அனுமதிப்பான். அதன் மீது நடந்துசெல்ல அஞ்சுவோரை அவன் தூக்கி எடுத்துச் சென்று அப்பால் சேர்ப்பான்.

திபேத்தில் உள்ள மற்றொரு பேரிடுக்கண் திருடர்களின் தொல்லையாகும். திபேத்தின் உட் பகுதி முழுதும் பரந்த வெட்டவெளி. அங்கு மக்கள் தங்கி வாழும் ஊர் ஏதும் இல்லை. மக்கள் வழக்க மும் மிகவும் அரிது. எனவே அங்குக் கள்ளர் கூட்டம் மிகுதியாக உள்ளது. திருடர்கள் பெரும் பாலும் நாடோடிகளான இடையர்கள். அவர்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து கொண்டிருப்பர்; பகலில் பிச்சைக்காரர்கள் போன்று வந்து உளவு

அறிந்து செல்வர்; இரவில் துப்பாக்கி, ஈட்டி, கட்டாரி முதலிய ஆயுதங்களோடு கூட்டமாக வந்து யாத்திரிகர்களை அச்சுறுத்தியும், துன்புறுத்தியும், கொலை செய்தும் பொருள்களையும் குதிரைகளையும் கொள்ளைகொண்டு போய்விடுவர். திபேத்திய அரசாங்கத்தார் அவர்களைப் பிடித்துக் கடுமையாகத் தண்டித்து வருகின்றனர். ஆயினும், அவர்களை முற்றிலும் அடக்க முடியவில்லை. கள்வர்கள் மிகுதியாக உள்ள இடங்களையும், பிச்சைக்காரர்கள் போன்று வருபவர்களுள் கள்ளர்கள் இன்னர் என்பதையும் வழிகாட்டி நன்கு அறிவான். அவன் அத்தகைய இடங்களில், இரவெல்லாம் உறங்காது அடிக்கடி துப்பாக்கியினின்றும் வெடி எழுப்பிக்கொண்டு கூடாரத்தைக் காத்து நிற்பான். திபேத்தில் நாய்களாலும் வழிச்செல்வோர்க்கு இன்னல் நேரும். திபேத்தில் நாய்கள் கரடி போன்று இருக்கும். குணத்திலும் அவை கரடி போன்றவை. அவை ஆயுதம் இன்றித் தனியாகச் செல்வோரைத் துரத்தித் தாக்கித் தீங்குறுத்தும்.

திருடர் தொல்லை

வழியில் சவரிக் கம்பளத்தால் அமைத்த கருங் கூடாரங்கள் ஆங்காங்கு ஒன்றிரண்டு காணப்படும். அவை ஆடு மாடு மேய்க்கும் இடையர்களுடையவை. வேனிற் காலத்தில் வழியில் ஆடுகளும் மாடுகளும் மந்தை மந்தையாக மேய்ந்துகொண்டிருக்கும். ஆடு மாடுகளின் சாணம் குவியல் குவியலாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். கடுவிசையோடு முடுகியோடும் சிந்துநதியைக் கடந்து தீர்த்தபுரியை அடையவேண்டும். சிந்து நதி மானசசரோவரத்தில் உற்பத்தியாகிக் கற்களையும் பாறைகளை

தீர்த்தபுரி

6

யும் புரட்டி உருட்டிக்கொண்டு விரைந்து ஓடுகிறது. அதன் கரையில் உள்ள தீர்த்தபுரி, திபேத்தில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்றாகும். தீர்த்த புரியில் ஒரு பௌத்த மடத்தைத் தவிர வேறு வீடுகள் கிடையா. அங்கு வெந்நீர் ஊற்று ஒன்று உள்ளது. பூமியினின்றும் கொதிக்கும் வெந்நீர் பொங்கி மேலே வருகின்றது. ஊறிவரும் இடத்தில் நீர் மிக்க வெப்பம் உடையதாக இருக்கிறது. அவ் விடத்தில் அந்நீரைத் தொட்டால் தொட்ட இடம் வெந்துவிடும். அங்கு ஊறியெழும் நீர் ஓடையாகப் பெருகிச் சிந்து நதியிற் கலக்கிறது. ஓடையில் இடையிடையே குழி தோண்டி நீரைத் தேங்கச் செய்துள்ளனர். ஓடையில் வெப்பம் அளவாக உள்ள இடத்தில் நீராடலாம். நடுக்கும் கடுங்குளிரில் அவ்வெந்நீரில் குளிப்பது இன்பமாக இருக்கும்.

வெந்நீர் ஊற்றுக்கு அண்மையில் ஓமகுண்டம் ஒன்று உள்ளது. அது பஸ்மாசுரன் தவம் செய்து வரம் பெற்று அழிந்த இடமாகும். முன்னொரு காலத்தில் பஸ்மாசுரன் என்னும் கொடிய அசுரன் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். சிவபெருமான் அவன் முன் தோன்றினார். அவன் 'தான் எவர் தலையிற் கைவைப்பினும் அவர் பஸ்ம மாக வேண்டும்' என்று அவரை வரம் வேண்டினான்.

பஸ்மாசுரன் அழிவு

வேண்டுவார் வேண்டுவதே ஈயு மவராகிய சிவபெருமான் அவன் வேண்டிய வரத்தை வழங்கினார். கொடியவனாகிய அசுரன் அவ்வரத்தின் உண்மை யைச் சோதித்தறிய விரும்பி அதனை வழங்கிய சிவ பெருமான் தலையின்மீதே கைவைக்கத் தொடங் கினான். அதனை எதிர்பாராத சிவபெருமான் அஞ்சி ஓடலுற்றார். அசுரன் அவரை விடாது தொடர்ந்து

துரத்தலானான். இந்நிலையைத் திருமால் உணர்ந்து மோகினி உருவம் கொண்டு அசுரன் முன் தோன்றினார். அசுரன் மோகினியின் அழகில் மயங்கி, சிவபெருமானைத் துரத்துவதை விட்டு, தன்னை மணம் செய்துகொள்ளுமாறு மோகினியை வேண்டி நின்றான். அம் மாய மங்கை, நீராடி வரின் தான் அவனை மணப்பதாகக் கூறினாள். எங்கும் தேடி நீர் காணப்பெறாத அசுரன் அந் நிலையை மோகினியிடம் கூறி முறையிட்டான். அவன் அருகில் சிறிதளவு நீரைத் தோற்றுவித்து, அதனை அவனுக்குக் காட்டி, அதனையாவது தொட்டுத் தலையை நனைத்து வருமாறு அவனை ஏவினாள். ஆசையால் அறிவிழந்த அசுரன், அந்நீரைக் கையில் எடுத்துத் தலையில் வைத்தான். தலையில் கைப்பட்ட அக்கணமே அவன் பஸ்மமாய் அழிந்தொழிந்தான். இப்புராணச் செய்தி நிகழ்ந்த இடமாக அதனைக் கூறுகின்றனர். அசுரன் அழிந்த அவ்விடத்தில் முனிவர் பலர் யாகம் செய்தனர். அங்கு ஓமகுண்டமும், சாம்பற் குவியலும் உள்ளன. யாத்திரை செல்வோர் அச் சாம்பரைப் புனிதப் பிரசாதமாக எடுத்துச் செல்லுவர்.

8. கயிலை மால்வரை

தீர்த்தபுரிக்குக் கிழக்கில் ஐம்பது மைல் தொலைவில் உள்ளது கயிலை என்னும் கடவுள் மாமலை. வழி மிக்க கடுமையான தன்றாயினும் உறுதியும் முயற்சியும் உடையோரே அதனைக் கடத்தல் கூடும். குதிரையேறிச் செல்வோரும் இன்னல்கட்கு விலக்கானவர் அல்லர். பனியடை

கயிலைக் காட்சி

போர்த்த மலைகளையும், நீர் கசிந்து சேறாகி அடி

சறுக்கும் சதுப்பு நிலங்களையும், கற்களை உருட்டிக் கொண்டு கடுகியோடும் மலையருவிகளையும், கற்கள் செறிந்த காடுகளையும் கடந்து செல்லவேண்டும். பழகியோர்க்கு அன்றி ஏனையோர்க்கு வழியறிந்து செல்லுதல் இயலாது. அங்கு வழிகாட்டியின் துணையும் உதவியும் மிகவும் இன்றியமையாதனவாகும்.

தீர்த்தபுரியினின்றும் சிறிது தூரம் சென்றதும் ஒரு மலை எதிர்ப்படுகிறது. வழி அதன் சரிவில் சாய்வாக ஏறிச் செல்லுகிறது. தாழ்வரையினின்றும் நோக்க அதன் உச்சி அண்மையில் உள்ளது போன்று தோன்றுகிறது. மேல்நோக்கி ஏறிச் செல்லச் செல்ல அஃது உயர்ந்துகொண்டே போகிறது. திபேத்தின் நூதன அனுபவங்களுள் இஃதும் ஒன்று. அதன் உச்சியினின்றும் கீழ்த் திசைப் பக்கம் நோக்கின் கயிலைமால்வரை காட்சி வழங்கும். ஏனை மலைகட்கெல்லாம் மேலாகப் பனி மூடி சூடிய கயிலை மலையின் கொடுமுடி தன்னைத் தானே அறிவித்துக்கொண்டு ஓங்கி நின்று ஒளிர்கிறது. நிமிர்ந்து நிற்கும் அதன் நெடுமுடியைக் கண்டதும், மக்களைத் துறந்து, நலங்களை மறந்து, பலநாட்களாக மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, இன்னல்களையும் இடுக்கண்களையும் பொருட்படுத்தாது உயிரையே பணயம் வைத்து உறுதியோடு நாடிவரும் கயிலை மாமலை அதுவே என்னும் உணர்வு அனைவர் உள்ளத்திலும் தானே இயல்பாக எழுகிறது. அதன் கம்பீரமான கடவுள் தோற்றம் காண்போரை விழுந்து வணங்குமாறு தூண்டுகிறது. பல நாட்களாகக் கடுவழி நடந்து வந்த களைப்பும் இளைப்பும் கணப்பொழுதில் மாயமாய் மறைந்து விடுகின்றன. உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கிறது; உடலில் மயிர்ச் சிலிர்ப்பு

உண்டாகிறது; புத்துணர்ச்சி பொங்குகிறது. யாத்திரிகர் அதனைக் கண்டதும் தம்மை மறந்து 'கயிலாய பதீ!' என்று வாய்விட்டுக் கதறியவாறே திசைநோக்கித் தெண்டனிடுவர். அவர்கள் அதன் கடவுள் காட்சியில் தம் ஐம்புலன்களும் ஒன்ற அதனை நோக்கிய வண்ணம் செயலற்று நிற்பர். வழிகாட்டி 'கயிலாயபதிக்கு ஜே!' என்று கூவி அவர்களைத் தெளிவித்து மேலும் தொடர்ந்து நடக்குமாறு தூண்டுவான். அண்மையில் உள்ளது போன்று தோன்றிய அதன் அடிநிலையை அடைய மூன்று நாட்கள் தொடர்ந்து செல்லுதல் வேண்டும். திபேத்தில் அண்மையில் இருப்பது போலத் தோன்றும் ஓர் இடம் உண்மையில் நெடுந்தொலையி லேயே இருக்கும்.

அடி நிலையை அடைந்ததும் அடிமுதல் முடி வரை அதன் முழுத் தோற்றத்தையும் காணலாம். அது காண்டற்கரிய கடவுட் காட்சியே ஆகும். என் றும் உருகாத உறைபனிப் போர்வை போர்த்து வெள்ளி மால்வரையாக விளங்கும் அவ் வியன் பெருமலை தென்முகமாக இந்தியாவை நோக்கிய வாறு பெருமிதமாக நிமிர்ந்து நிற்கிறது. வானம் தெளிந்து சூரியன் விளங்கித் தோன்றின் அதன் இறையொளி தவழும் இன்பக் காட்சியைக் காண நம் ஊனக் கண்கள் இரண்டு போதா. கயிலையில் பரமசிவன் பார்வதியோடு வீற்றிருப்பதாக இந்துக் கள் நம்புகின்றனர். இந்துக்களின் இதிகாசங் களும் புராணங்களும் இவ்வாறே கூறுகின்றன. கயிலை முதற்கண் குபேரன் இருக்கையாக இருந்து பின்னர்ச் சிவபெருமான் உறைவிடமாயிற்று என்று பாரதம் என்னும் பழம் பெருநூல் பகர் கின்றது.

கயிலை என்பது இமயமலைத் தொடரின் வடசரிவில் உள்ளதொரு கொடுமுடியாகும். அங்கு மக்களால் எடுக்கப்பட்ட செயற்கைக் கோயிலோ, கடவுள் திருவுருவச் சிலையோ ஏதும் இல்லை. அம்மலையே இயற்கையாகக் கோயில்போன்று அமைந்துள்ளது. கோயிலுக்கு உரிய அமைப்புக்களும் உறுப்புக்களும் அதன் கண் இயற்கையாகவே இயைந்திருக்கின்றன.

கயிலையின் அமைப்பு

அது கோபுரங்களும், மண்டபங்களும், பிராகாரங்களும், கர்ப்பக்கிருகங்களும் உடைய தென்னாட்டுத் திருக்கோயில்கட்கு முன் மாதிரியாக அமைந்திருக்கின்றது. வச்சிரபாணி, அவலோகிதேசுவரம் என்னும் இருபெருங் குன்றுகள் துவாரபாலர் போன்று முன்னுற இருபாலும் எழுந்து நிற்கின்றன. அவற்றின் இடையே கயிலையங்கிரி பெரியதொரு பீடத்தின்மேல் பொருந்திய வெள்ளி விமானம் போன்று விண்ணுற உயர்ந்து தெள்ளொளி பரப்பித் திகழ்கின்றது. அதன் அடிவரை இருபத்தெட்டு மைல் சுற்றளவு உள்ள சம சதுரமாய் அமைந்துள்ளது. அதனைச் சுற்றிலும் மதில் போன்ற மலைச்சுவர் உயர்ந்தோங்கி நிற்கிறது. சில இடங்களில் அச்சுவர் சித்திரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டது போன்று காணப்படுகிறது. ஆங்காங்கு மூடப்பட்டுள்ள வாயில்கள் போன்று தோன்றும் அமைப்புக்களையும் அதன்கண் காணலாம். அம்மலைச் சுவர்மீது ஆயிரம் அடி உயரத்தில் மேடை போன்றதொரு பெரிய சமதலப் பரப்பு காணப்படுகிறது. அதன்மிசை இவர்ந்து செல்ல வசதியான வழியின்மையின் அதனை எய்திக் காண்டல் எளிதன்று. அதன்மீது செய்தமைத்த கோபுரங்கள் போன்று சிறியனவும் பெரியனவுமான

எண்ணற்ற சிறுமலைகள் காணப்படுகின்றன. அவை பலவேறு வடிவமும் நிறமும் உடையவை. கீழிருந்து நோக்கின் அவை வெவ்வேறு நிறம் கொண்டு அமைத்த வண்ணச் சித்திரங்கள் போன்றும், வெவ்வேறு வடிவினில் எடுத்த எழில் கோபுரங்கள் போன்றும் தோன்றுகின்றன. அவற்றுள் பல சித்திரம் செறிந்தவை போன்று தோன்றும்; பல சிற்பம் சிறந்தவை போன்று காணப்படும்; சில முழுதும் ஒரு நிறம் உடையனவாகவே ஒளிரும்; சிலவற்றில் பல நிறங்களும் விரவி மிளிரும். கயிலையங்கிரி தென்னாட்டுக் கோயில்கட்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது; அதன் நெடுமுடி பௌத்த ஸ்தூபங்கட்கு இலட்சிய வடிவமாக நிற்கின்றது; அதனைச் சூழ உள்ள குன்றுகள் மலையாள நாட்டுக் கோயில் மண்டபங்களை ஒத்து விளங்குகின்றன. இந்தியாவில் குமரி முதல் இமயம்வரை உள்ள கோயில்கள், கோபுரங்கள், விமானங்கள் அனைத்திற்கும் மாதிரிகளைக் கயிலையில் காணலாம். இனிப் புதிய மாதிரியில் கோபுரம், கோயில் அமைக்க வேண்டின் அவற்றிற்கும் அங்கு இலட்சிய வடிவங்கள் இல்லாமலில்லை.

தென்னாட்டுக் கோயில்களில் கருப்பக்கிருகம் உள்ளுற ஒதுங்கி ஒளி மணி விமானம் உடையதாய் ஏனைக் கோபுரங்களினும் தனித்தோங்கி நிற்பதைக் காணலாம். அதுபோலவே கயிலாய சிகரமும் பீடத்தின் வடபால் உட்புறமாக ஒதுங்கி உயர்ந்தோங்கி நிற்கிறது. அது, கடல் நிலையினின்றும் இருபத்து மூவாயிரம் அடி உயரத்தில், சுற்றிலும் உள்ள மற்ற மலைகளினும் மேலாகத் தன் தனிமை தோன்ற வானுற நிவந்து வளம்பெற நிற்கிறது. அதில் என்றும் உருகாத பனியடை உறைந்து

மூடிக்கொண்டிருக்கும். அச்சிகரம் விசுவலிங்கம் எனப்படுகிறது. உயரமான பெரிய பீடமும், அதனிடையே ஆகாயமளாவி நிற்கும் சிகரமும் தென்னாட்டுச் சிவாலயங்களில் உள்ள சிவலிங்கம் போன்றே காட்சியளிக்கின்றன. அம்மலையின் அடிவரையைச் சுற்றி வலம் வருவதை அன்றி அதன் சிகரத்தை அருகில் சென்று காண்டல் யார்க்கும் இயலாது. அதன் அடிவாரத்தில் சில பௌத்த மடங்களும், சோர்ட்டன் என்னும் புனிதக் கட்டடங்களும், குளமும் உள்ளன என்று கூறுகின்றனர். ஆயின் அங்குச் சென்று அவற்றைக் கண்டோர் அரியர். கயிலையங்கிரியின் கீழ்த்திசையில் கௌரி குன்றமும், கௌரி குளமும் உள்ளன. இறைவன் தன் இடப்பாகத்தில் தேவியைக் கொண்டிருப்பதாக வழங்கும் ஐதிகம் அங்கு இவ்வாறு இயல்பாகவே அமைந்திருப்பது இறும்பூது பயப்பதாகும்.

கயிலாயமலை, புறத்து நின்று நோக்குவார்க்கு வெறும் மலைபோன்று தோன்றவில்லை. அஃது இறைவனுக்கு இயற்கையில் அமைந்த எழில் நகரம் போன்று காட்சி யளிக்கின்றது. இறை நகருக்கு இன்றியமையாத உறுப்புக்களாகிய அகழியும், மதிலும், கோட்டையும், கோபுரமும், மாடமும், கூடமும், மண்டபமும் போன்ற அமைப்புகளை அதன் கண் காணலாம். அதனைச் சூழ உள்ள குன்றுகள் அவ்விறைவனுடைய ஏவற் கணங்கள் மேவி உறைதற் பொருட்டு வகுக்கப்பட்ட வளமனைகள் போன்று தோன்றுகின்றன. அவையனைத்தும் உயிரொளி பெற்று மிளிர்வது வியத்தற்குரியதாகும்.

கயிலை மலையின் அடிவரையில் நின்று தென்புறம் நோக்கின் கண்ணுக்கெட்டும் அளவும் கடல்

போலப் பரந்த சமவெளி எல்லை யின்றி விரிந்து தோன்றுகின்றது. அதன் தென் கோடியில், கயிலையினின்றும் நாற்பது மைல் தொலையில் மானச சரோவரம் என்னும் மாண்புறு தடாகமும், அதற்குச் சிறிது மேற்பால் இராட்சஸ தடாகம் என்னும் எழில் மிக்க ஏரியும் உள்ளன. அவற்றிற்குத் தென்பால் கயிலை நாயகன் தன் வடிவழகு காண நிறுத்திய நிலையாடி போன்று வெண்பனி போர்த்த மாந்தாதா மலை விண் பொர நிமிர்ந்து நிற்கிறது.

கயிலையின் சூழ்நிலை

கயிலாய பூமி தவத்திற்கு உரியது. கயிலைமலை தவ நிலையை உரையாது உணர்த்தி நிற்கின்றது. தேவர், அசுரர் ஆகிய இருதிறத்தினரும் கயிலாய பூமியில் இருந்து இறைவனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து வரம்பல பெற்ற செய்திகளைப் புராணங் களிலே காண்கிறோம். அவர்கள் தவம் செய்த இடங்கள் அங்கு இன்றும் காட்டப்படுகின்றன. உலக நலமே வாழ்க்கைக் குறியாகக் கொண்டு ஒழுகிய நம் முன்னோர் உலக நடைக்கு இன்றி யமையாத உண்மைகளை விளக்கும் செய்திகளைப் புராணங்களில் எழுதி வைத்ததோடு அன்றி, இமயப் பெருமலைப் பரப்பிலும், கயிலையங்கிரியின் சூழலிலும் உள்ள கல்லும் மண்ணும் நீரும் ஆகிய இயற்கைப் பொருள்களினுள் புதைத்துப் பொதிந் தும் வைத்துள்ளனர். எனவே இமயமும் கயிலை யும் உள்ளவரை அச் செய்திகளும் மக்கள் மனத் தில் மறையாது நின்று உலகை ஓம்பி வருதல் வேண்டும் என்பது அவர்தம் பெருவேட்கை போலும்.

தேவரும் முனிவரும் மானச சரோவரக் கரை யிலும், அசுரரும் இராக்கதரும் இராட்சஸ தடாகக்

கரையிலும் இருந்து தவம் புரிந்தனர் என்று திபேத்தியர் கூறுகின்றனர். அங்குத் தவஞ்செய்த இராக்கதருள் சிறப்பாகக் கூறப்படுபவன் இராவணன். இராவணனைப் பற்றிய பல செய்திகள் திபேத்தில் வழங்குகின்றன. அவை பெரிதும் நம் நாட்டுப் புராணச் செய்திகளோடு பொருந்துவன வாகவே உள்ளன. இராவணன் இராட்சஸ தடாகக் கரையில் இருந்து நெடுங்காலம் கடுந்தவம் செய்தான். தவத்தின் பயனாகப் பெருவலி பெற்ற அவன் பின்னர்க் கயிலையைப் பெயர்த்துத் தன் நாட்டிற்கு எடுத்துச் செல்ல முயன்றான். அவன் கயிலையைப் பெயர்க்கையில் அதன் அசைவு கண்டு கௌரி அஞ்சி நடுங்கினாள். இறைவன் அவட்கு அபயம் கூறி, அவனைத் தன் காலின் பெருவிரலால் அழுத்த, அவன் பாதலத்தில் அழுந்தி நசுங்கி அழுது சாம வேதம் பாடித் துதித்தான். இறைவன் அவன் இன்னிசை கேட்டு மகிழ்ந்து அவனை விடுவித்தார். அவன் உயிர் பிழைத்துத் தன் நாடு நோக்கி ஓடினான். இச்செய்தி திபேத்தியரிடையே பெரு வழக்காக உள்ளது. கயிலைப் பீடத்தின்மீது தூண் போன்றதொரு நெடுங்கல் நிற்கிறது. அஃது இராவணன் கயிலையைப் பெயர்க்கையில் நாட்டிய கைக் கழி எனப்படுகிறது. கயிலைச் சிகரத்தின் அடியில் இராவணன் அதனைச் சுற்றிக்கட்டிய கயிற்றின் வடு காணப்படுகிறது என்று கூறுகின்றனர்.

கயிலையும் இராவணனும்

கயிலைச் சூழலில் முனிவர் பலர் தவஞ்செய்த இடங்களும் ஆங்காங்கு உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது **மாந்தாதா மலை**. மாந்தாதா என்னும் பேரரசன் முதுமைப் பருவத்தில்

மாந்தாதா மலை

அரசு துறந்து முனிவனாகி இமயமலையை எய்தித் தவம் செய்தான். அவன் இருந்து தவம் செய்த காரணத்தால் அம்மலை அவன் பெயராலேயே வழங்கப்படுகின்றது. அவன் மானச சரோவரத்தின் கரையிலும் அவன் பெயரால் வழங்கும் மலையிலும் இருந்து நெடுங்காலம் தவம் செய்து பேறு பெற்றான். மாந்தாதா மலை இருபத்தையாயிரம் அடி உயர்ந்து, எதிரில் உள்ள கயிலை மலையை நோக்கி நிமிர்ந்து நிற்கிறது. அதன் உடல் உருகாத பனியடையால் மூடப்பட்டு உள்ளது. அதன் உச்சியில் பெரிய குகை ஒன்று உண்டு. கயிலை நாயகரின் குமாரர்களாகிய கணேசரும் முருகப் பெருமானும் அக்குகையிலேயே பிறந்தனர் என்று கூறுகின்றனர். இம்மலையில் இன்றும் நூற்றுக் கணக்கான கடவுள் முனிவர்கள் தவம் செய்து கொண்டிருப்பதாகத் திபேத்தியர்கள் நம்புகின்றனர்.

இந்துக்களைப் போன்றே புத்தமதத்தைச் சேர்ந்த திபேத்திய மக்களும் கயிலாயத்தை வழிபடுகின்றனர். அவர்கள் கயிலையின் கொடுமுடியை காங் ரின் போஷி என்று அழைக்கின்றனர். கயிலாயம் உலகின் உயிர்நிலை என்பது அவர்கள் கொள்கை. டெம் சோக் என்னும் கடவுள் புலித் தோல் ஆடை உடுத்து, கபால மாலை புனைந்து, கைகளில் துடியும் திரிசூலமும் ஏந்தி, கண்டோ என்னும் பெண் தெய்வத்தோடு கயிலை மலையில் வீற்றிருப்பதாகவும், அவர்களோடு பன்னூறு போதி சத்துவர்கள் சூழப் புத்த பெருமானும் அதன் சிகரத்தில் வாழ்ந்து வருவதாகவும், அதன் அடிவரையில் அநுமான் உறைவதாகவும், அதன் சூழலில்

கயிலையும் பௌத்தரும்

எப்பொழுதும் தேவர்கள் உலாவி வருவதாகவும், அதனுச்சியில் இன்னியங்கள் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருப்பதாகவும், கடவுள்பால் உண்மையன்பு உடையவர்கட்கன்றி மற்றவர்க்கு அவ்வொலி உணரப்படாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். கயிலையங்கிரியைச் சுற்றிலும்நான்கு பௌத்த மடங்களும், மானசசரோவரத்தைச் சூழ ஏழு மடங்களும் உள்ளன. அவற்றில் உள்ள லாமாக்கள் அல்லும் பகலும் மணிமந்திரம் ஓதிக்கொண்டும், புத்தர் பெருமானின் அருட்குணங்களைப் பாடிக்கொண்டும் உள்ளனர். அவர்கள் காலந்தோறும் கயிலையங்கிரியை வந்தித்து வழிபாடு செய்து வருகின்றனர். திபேத்திய அரசாங்கமும் கயிலை வழிபாட்டில் மிகவும் கருத்துக்கொண்டு கண்காணித்து வருகின்றது.

வேனிற்காலம் புகுந்து பனியடை உருகி வழி திறக்கப்பட்டதும், திபேத்தியர்கள் கயிலையங்கிரியை வலம்வரத் தொடங்குகின்றனர். இருபத்தெட்டு மைல் சுற்றளவுள்ள அம்மலையை ஒருமுறை வலம் வர நம்மனோர்க்கு மூன்று நாட்கள் செல்லும். திபேத்தியருள் சிலர் அதனை ஒருநாளிற் செய்து முடிப்பர். அவர்களிற் பலர் ஒரு முறைக்கு மேலும் வலம் வருவர். சிலர் இருபத்தொரு முறை வலம் வருவதும் உண்டு. ஒரு சிலர் இத்துணைத் தூரமும் அங்கப் பிரதட்சிணம் செய்கின்றனர். கயிலையை வலம் வரும் வழி கல்லும், கரடும், பனிப்பாறையும், ஓடைகளும், உடைப்புக்களும் நிறைந்தது. அவ்வழியில் அவர்கள் அங்கப் பிரதட்சிணம் செய்யும் முறை வியக்கத்தக்கதாகும். அவர்கள் காலையில் சூரியன் உதித்ததும் அதனைத் தொடங்குகின்றனர்; கயிலையை நோக்கி நின்று கைகளிரண்டையும் தலைமிசை குவித்துத் தொழுகின்றனர்; தொழுத

வாறே அவர்கள் மொழியில் பிரார்த்தனை செய்கின்றனர்; பிரார்த்தனை முடிந்ததும் நெடுக வீழ்ந்து வணங்குகின்றனர்; கைவிரலால் தரையில் ஒரு கோடு கீறி எழுந்து நிற்கின்றனர்; மீண்டும் தொழுகை, பிரார்த்தனை; கீறிய கோடுவரை மெல்ல நடக்கின்றனர்; கோட்டில் நின்று தொழுது பிரார்த்திக்கின்றனர்; பின்னர் முன்போலவே வீழ்ந்து வணங்குகின்றனர்; இவ்வாறே சூரியன் மறையும்வரை செய்கின்றனர். அவர்கள் இரவு முழுதும் பனியையும் குளிரையும் கருதாது, கூழாங்கற்களும் பனிப்பாறைகளும் நிறைந்த அவ்விடத்திலேயே கிடக்கின்றனர். மறுநாள் சூரியன் உதித்ததும் மீண்டும் அவ்வாறே பிரதட்சிணம் தொடங்குகின்றது. யாரேனும் வலிய உணவு கொண்டு கொடுப்பின் ஒருவேளை உட்கொள்ளுகின்றனர். இன்றேல் அஃது இல்லை. இவ்வாறு அவர்கள் இருபத்தேழு நாட்கள் தொடர்ந்து செய்து பிரதட்சிணத்தை முடிக்கின்றனர். அவர்தம் ஊன்றிய பக்தியும், தளராத உறுதியும், உள்ளக் கசிவும் காண்போர் உள்ளத்தைக் கவர்வனவாகும். அவர்கள் ஆற்றும் அவ்வரிய தவம் நம்மனோரைத் திகைக்கச் செய்கிறது. கயிலாய யாத்திரை செய்வோர் இவ்வற்புத நிகழ்ச்சியை அங்கு இன்றும் காணலாம்.

கயிலையை வலம் வருதல்

கயிலையங்கிரியை வலம் வருவதே யாத்திரிகர் அதற்குச் செய்யும் வழிபாடாகும். கயிலையைச் சூழ அகன்ற வழி சுற்றிச் செல்லுகிறது. கயிலை மலை ஒரு கோநகரம் போன்றும், அதனை வலம் வருவது அதன் பெருந்தெரு வழியே ஊர்வலம் வருவது போன்றும் தோன்றுகின்றன. அதன் சூழிலில் காணப்படும் ஒவ்வொரு பொருளும்

உயிரொளி பெற்றுத் திகழ்கின்றது. யாவும் இறைவன் திருவுருவங்களாகக் காட்சியளிக்கின்றன. இறைவன் இயற்கைப் பொருள்களின் ஊடே இன்ப அழகாக இயைந்திருக்கும் உண்மை, இங்குத் தெளிவாக விளங்கி நிற்கிறது. அவ்விடத்தை எய்தியதும் இறைவன் திருமுன் சார்ந்தாற்போன்றதோர் உணர்ச்சி உள்ளத்தில் எழுந்து அமைதி அளிக்கின்றது. உள்ளொளி பெருகி உவகை சுரக்கின்றது. சூழவுள்ள குன்றுகள் கோநகரின் மாட வீதிபோன்று தோன்ற, அவற்றின் இடையே கயிலையங்கிரி கோமனைபோன்று காட்சியளிக்கிறது.

கயிலையை வலம் வருகையில் அதன் சிகரமாகிய விசுவலிங்கம் குறிப்பிட்ட சிலவிடங்களிலேயே காட்சி வழங்கும். வலம் வருவோர் அது காணப்படும் இடங்களில் நின்று வந்தனை வழிபாடுகள் செய்வர். அவ்வியன் சிகரம் விண்ணும் மண்ணும் தானேயாய் நிற்கும் இறைவன் பெருநிலையை விளக்கி நிற்கிறது. அஃது என்றும் உருகாத உறை பனியால் மூடப்பட்டுப் பேரொளிப் பிழம்பாகத் தோன்றுகிறது. ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு விதமாகக் காட்சி வழங்கும் இறைவன் திருவுருவம் போன்று, அது வேளைக்கொரு நிறமாக மாறிமாறித் தோன்றுகிறது. காலைக் கதிரொளியில் உருக்கிய தங்கம் போன்றும், சுடர்விட்டுத் திகழும் செந்திக் கொழுந்து போன்றும் ஒளிர்கிறது. பரிதி மேலே எழ எழ அது வெள்ளி வெற்பாக மாறுகிறது. அது மலையில் பவளக் குன்றெென மிளிர்கிறது. அவ்வற்புதக் காட்சியைக் காணக் கண் குளிர்கிறது; உள்ளம் பூரிக்கிறது; உவகை ஊறிப் பெருகுகிறது; அறிவு அதன் வண்ணமாகி அதன்கண்

தோய்ந்து திளைக்கிறது. புராணங்களில் சிவபெருமானுக்குக் கூறும் உருவங்களும் நிறங்களும் கயிலையங்கிரியையும் அதன் சிகரத்தையும் ஒவ்வொரு வேளையில் ஒவ்வொரு திசையில் நின்று நோக்கிய நம் மூதாதையரின் உள்ளத்திற் படிந்த உணர்ச்சிப் படிவங்களின் வடிவங்களேயாதல் அதனை வலம் வருவார்க்குத் தெள்ளிதிற் புலனாகின்றது. கயிலையை வெள்ளிமலை யென்னும் புராணக் கூற்றின் உண்மைப் பொருள் அதனை நேரிற் காண்போர்க்கு அன்றிப் பிறர்க்கு விளங்குதல் அரிது.

தார்ச்சன் என்னும் இடத்தினின்றே கயிலாய மலையின் அடிவரை தொடங்குகின்றது. அவ்விடம் கடல் நிலையினின்றும் பதினையாயிரம் அடி உயரத்தில் உள்ளது. கயிலையைச் சுற்றிச் செல்லும் வழி முழுதும் பல்வேறு நிறமுள்ள மலர்களை யுடைய குறும்பூண்டுகள் தரையோடு தரையாகப் படர்ந்துள்ளன. அத்தோற்றம் அடியார் அடிநோகாது நடந்துசெல்ல இயற்கையன்னை பரப்பிவைத்துள்ள சித்திரப் பைம்படாம் போன்று உள்ளது. ஷெர்ஷாங் என்னும் இடத்தில் திபேத்தியர் ஆண்டுதோறும் வைகாசித் திங்கள் பௌர்ணமியன்று திருவிழா நடத்துகின்றனர். அது புத்தர் ஞானோதயம் பெற்ற நன்னாளாகையால் அவர்கள் அன்று கொடியேற்றி விழாக் கொண்டாடி மகிழ்கின்றனர். லாசூ என்னும் ஆற்றின் கரையில் முதல் பௌத்த மடம் உள்ளது. அது நியந்தி மடம் எனப்படுகிறது. வழி கருங்கற்களும் பெரும்பாறைகளும் நிறைந்தது; நடந்து செல்லும் மக்கட்கே அன்றிக் குதிரைகட்கும் வருத்தம் தருவதாக உள்ளது. இன்ப அருவிகளும் இனிய ஓடைகளும் இடையிடையே குறுக்கிடுகின்றன. இருபாலும் நிமிர்ந்து நிற்கும் நெடிய

மலைத்தொடர்களுக்கு இடையே குறுகிய பள்ளத் தாக்கில் செல்லுகையில் நம் நாட்டுப் பெருங்கோவி லின் பிரகாரத்தில் நடந்து செல்லுவது போன்ற தோர் உணர்ச்சி உண்டாகிறது. சிறிது தூரம் சென்றதும் டிருபுக் எனப்படும் இரண்டாவது பௌத்த மடம் காணப்படுகிறது. அவ்விடம் யாத் திரிகர் கூடாரம் அமைத்துத் தங்குவதற்கு ஏற்ற தாகும். கயிலைச் சூழலில் கண்ட இடங்களிலும் கூடாரம் அமைத்தல் கூடாது. சிலவிடங்களில் கடுங்காற்று வீசும். அவ்விடங்களில் கூடாரம் அமைத்தால், காற்று கூடாரத்தைப் பிய்த் தெரிந்துவிடும். கயிலையை வலம்வரும் யாத்திரிகர் முதல் நாள் இரவை இவ்விடத்திலேயே தங்கிக் கழிப்பர். இரவில் எங்கும் சூழ்ந்து கொண்டிருக்கும் காரிருளின் இடையே கயிலையங்கிரி வெள்ளை வெளேரென்று வெள்ளியங்கிரியாக விளங்கிக் கொண்டிருக்கும்.

காலையில் கயிலையின் காட்சி கண்கொள்ளாக் கடவுட் காட்சியாகும். இளஞ்சூரியனின் எழிற் கதிர்கள் அதன்மீது படிந்து தோயும்பொழுது அதன் தோற்றத்தைக் கண்டு அனுபவிக்க ஆயிரம் கண்கள் வேண்டும். அங்குக் கயிலையின் அடிவரை யில் ஒருவகை வெண்ணிற மண் உள்ளது. அது கயிலை விபூதி எனப்படுகிறது. யாத்திரிகர் அதனைக் கயிலைப் பிரசாதமாக எடுத்துக் கொள்ளுவர். டிருபுக்கினின்றும் டோல்மாக் கணவாய் வரை நான்கு மைல் தூரம் உயரத்தில் ஏறிச் செல்ல வேண்டும். எங்கும் உறைபனி மயமாக உள்ளது. காலைக் கதிரொளியில் அது உருக்கிய வெள்ளி போன்று ஒளிர்கிறது. அதனைக் காண்போர் கண் ஒளிமழுங்கி வலிக்கத் தொடங்கும். எனவே

அங்குச் செல்லுகையில் பச்சை அல்லது கறுப்புக் கண்ணாடி அணிந்துகொள்ள வேண்டும். பனி யடைப் பரப்பில் செல்லுவது பழக்கம் இல்லாதவர் கட்குத் துயர்மிகத் தருவதாகும். தலைக்கிறுக்கும் மயக்கமும் உண்டாகும் சமயங்களில் முகர் உப்பும், வற்றல் ஊறுகாய்களும் மிகவும் பயன்படுவன வாகும். டோல்மாக் கணவாய் பதினெட்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அங்குப் பாறைகளின் மீது கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டுள் ளன. கணவாயின் மேற்புறத்தில் ஒரு சிகரம் காணப்படுகிறது. அதனைக் குபேரன் வாழுமிடம் என்று கூறுகின்றனர். கணவாயைக் கடந்ததும் கௌரி குளமும், கௌரி குன்றமும் உள்ளன. கௌரி குளத்தினின்றும் வழி கீழ்நோக்கி இறங்கு கிறது. வழி செங்குத்தாயும் குறுகலாயும் உள்ளது. அஃது இன்னல் நிறைந்த இடமாகும். அவ்வழியில் வெறும் வயிற்றோடு செல்லின் மயக்கம் உண்டாகும். சாந்தல்புக் என்னும் இடம் இராத் தங்குவதற்கு ஏற்றது. ஆயின் அது கள்ளர்கள் மலிந்த இட மாகும். அவ்விடம் கயிலை மலையின் கீழ்த் திசையில் உள்ளது. அங்கும் ஒரு பௌத்த மடம் உள்ளது. அங்குக் கயிலையின் தாழ்வரையில் ஒருவகைத் தவ னம் மிகுதியாக வளர்கிறது. அது கைலாச தூபம் எனப்படுகிறது. சாந்தல்புக்கினின்றும் கயிலாய மாளிகையின் கீழ்ப்புறத் தோற்றத்தைக் கண்டு களிக்கலாம்.

சாந்தல்புக்குக்கு எதிரே எல்லையற்ற பெரு வெளிப் பரப்பும், இராட்சஸ தடாகமும், மானச சரோவரமும், அவற்றிற்கு அப்பால் மாந்தாதா மலைகளும் அழகாகக் காட்சியளிக்கின்றன. சாந் தல்புக்கினின்றும் பார்க்காவுக்குச் செல்லும் வழி

யில் சதுப்பு நிலங்களையும் நீரோடைகளையும் கடக்க வேண்டும். சதுப்பு நிலங்கள் மிக்க இன்னல் விளைப்பனவாகும். நடந்து செல்வோர், சேறும் சறுக்கலுமுள்ள அவ்வழியில் மிகவும் துயரப்படுவர். குதிரைகளும் சேற்றில் சிக்குண்டு வருந்தும். ஓடைகளும் கடுஞ்செலவுடையன ஆதலின் அவற்றை நடந்து கடத்தல் எளிதன்று. குதிரைகளின்மீது அமர்ந்தே கடத்தல் வேண்டும்.

கயிலை மலைச் சூழல் பனியும் குளிரும் மிக்க இடமாகும். அங்கு அடிக்கடி மழைபெய்யத் தொடங்கிவிடும். நீர்மழை சிறிது நேரத்தில் பனிக் கட்டி மழையாக மாறும். சிறுசிறு பனிக்கட்டிகள் சிதறி விழும். பஞ்சுத்துய் போன்ற பனிச் செதில் எங்கும் பரந்து மூடிக்கொள்ளும். குளிரின் கடுமை உள்ளத்தையும் உயிரையும் நடுங்கச் செய்யும். இரவில் அதன் வேகம் தாங்கற்கு அரிது. உதிரம் உறைந்து ஓட்டமின்றாக, உடலுறுப்புகள் உணர்ச்சியற்று வெறுங்கட்டைபோன்று ஆகிவிடும். உணவு சமைத்து உண்ணவும் இயலாது. உண்டாலும் உணவு செரிக்காது. வயிற்றுவலி, பனிக்குருடு, பனி வெடிப்பு, முகவீக்கம் முதலியன உண்டாகும். கண்கள் பொங்கிச் சிவந்துவிடும்; மூக்கினின்றும் உதிரம் வடியும்; உயிர்ப்புத் திணறும். இத்துன்பங்களினின்றும் தப்புவதற்குரிய வழி முறைகளை அறிந்து கருத்தாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

9. முப்பெருந் தடாகங்கள்

கயிலைச் சூழலில் மூன்று பெரிய தடாகங்கள் உள்ளன. அவை கௌரி குளம், இராட்சஸ தடாகம், மானச சரோவரம் என்பன. அவற்றுள் கௌரிகுளமும், மானச சரோவரமும் புண்ணியம் மிக்க புனித

தீர்த்தங்களாகக் கருதப்படுகின்றன. கயிலை மலையை வலம் வருவதும், அப்புனித தடாகங்களில் நீராடுவதும் கயிலாய யாத்திரையின் குறிக்கோள்களாகும்.

கௌரி குளம்

அத்தடாகங்களில் நீராடுவதோடு கயிலை யாத்திரை முற்றுப்பெறுகிறது. அவற்றுள் கௌரி குளம் கயிலைமலையின் கீழ்ப்புறத்தில் அதனை வலம்வரும் வழியில் உள்ளது. டோல்மாக் கணவாயைக் கடந்து கௌரி குளத்தை அடையவேண்டும். அக்கணவாய் கடல்நிலையினின்றும் பதினெட்டாயிரத்து அறுநூறு அடி உயரத்திற்குமேல் உள்ளது. அதனைக் கடக்க நான்கு மைல் தூரமுள்ள நொடியதொரு மலையின்மேல் ஏறிச் செல்லவேண்டும். கயிலாய யாத்திரையில் இவ்விடம் மிகவும் உயரமானது. இது நடத்தற்கரிய கடுமை வாய்ந்ததும் ஆகும். இறுகிய பனிக்கட்டியின்மீது குறுகிய வழியில் குளிரால் நடுங்கிக்கொண்டே நடக்கவேண்டும். சுற்றிலும் பனிக்கட்டிமயமாக இருக்கும். கதிரொளியில் அதன் தகதகப்பைக் காணக் கண் கூசும். அடிக்கடி வானிலிருந்து வேறு பனிக்கட்டி மழை பொழியும். பனிக்கட்டியின்மீது நடப்பது மிக்க இன்னல் தருவதாகும். வழியில் உறைந்துள்ள பனிப்பாறை வழுவழுப்பாக இருக்கும். அதன் குளிர்ச்சியால் கால்கள் உணர்ச்சியற்றுத் தளர்ச்சி அடையும். இந்நிலையில் ஒரு சிறிது தவறின் வழுக்கிச்சென்று கௌரி குளத்தில் விழுவர். கூர்மையான இருப்புப் பூண் இட்ட தடியை ஊன்றிக்கொண்டும், துணையாட்களைப் பற்றிக்கொண்டும் மெல்ல நடக்க வேண்டும். இவ்வழியில் குதிரைகள் அடிக்கடி வழுக்கி விழுந்துவிடும். உயிர்ப்புக்குப் போதிய காற்று இன்மையால் உயிர் ஊசலாடும். இங்குச்

செல்லுகையில் உடலே பெருஞ்சுமையாகத் தோன்றும். உள்ளத் திகைப்பும் உணர்வு மயங்கலும் இவ்வழியிற் செல்லுவோருக்கு இயல்பாக உண்டாகும். உள்ளத்தை இறைவன்பால் வைத்து உறுதியோடு செல்லவேண்டும்.

கணவாயினின்றும் கௌரி குளத்திற்குப் பனிக்கட்டியின்மீது இறங்கிச் செல்லவேண்டும். பதினெட்டாயிரம் அடி உயரத்தில் அச் சிறு தடாகம் அழகாக அமைந்துள்ளது. கௌரி இறைவனின் இடப்பங்கில் அமைந்திருப்பதாக வழங்கும் ஐதிகத்திற்கு ஏற்ப, இந்தியாவை நோக்கி நிற்கும் கயிலை மலையின் இடப்பக்கத்தில் அத்தடாகம் அமைந்திருக்கிறது. அது மலைகளின் அந்தப் புறத்தில் அவள் தன் ஆயத்தோடு போந்து நீராடு தற்பொருட்டு வாயிலும் துறையும் அமைய விசுவ கர்மாவினால் வகுக்கப்பட்ட தெய்விகத் திருக்குளம் போன்று காணப்படுகிறது. அதன் நீர்ப்பரப்பை உருகாத உறைபனிப் பலகைகள் மூடிக்கொண்டுள்ளன. அதனைச் சுற்றிலும் பனியடை போர்த்த நெடுங்குன்றுகள் சூழ்ந்து நிற்கின்றன. பக்கத்தில் உள்ள 'பார்வதி' என்னும் குன்றின் சரிவினின்றும் பனிப்பாறைகள் பெயர்ந்து சரிந்து வந்து அதில் வீழ்கின்றன. குபேரன் அக்குளத்திற்றான் தன் நாட்கடன்களைக் கழித்து வருவதாகக் கூறுகின்றனர்.

கௌரி குளத்தில் நீராடுவது ஒரு புதிய அனுபவமாகும். அதைக் கௌரியின் திருவருள் அனுபவத்தோடு ஒப்பிடலாம். வானம் தெளிந்து வெயில் காயும் சமயமே கௌரி குளத்தில் நீராடுவதற்கு ஏற்றது. குளத்தின் கரையை அடைந்ததும் வழிகாட்டி உடையைக் களைந்து உடல் முழுதும் எண்

ணெய் பூசிக்கொள்ளுமாறு கூறுவான். உடலை நடுக்கி உயிரையும் ஒடுக்கும் கடுங்குளிரில் உடையைக் கழற்ற உறுதி யுடையோரும் தயங்குவர். அனைவரும் ஆயத்தமானதும் அவன் தன் பருத்த கைத் தடியால் குளத்தில் மூடிக்கொண்டிருக்கும் பனிப் பலகையை ஓங்கி அடித்து உடைத்து ஒதுக்கி இடம் செய்வான். பின்னர் அவனும் மற்றொருவனுமாகக் கரையோரம் நின்றுகொண்டு யாத்திரிகர்களை ஒவ்வொருவராக நீருக்குள் நான்கைந்து முறை தோய்த்து மூழ்குவித்து எடுத்துக் கரையில் கிடத்துவர். அதற்குள் உடல் உணர்ச்சியற்றுக் கட்டை போன்று விறைத்துவிடும். கரையில் இருக்கும் துணையாட்கள் அவர்கள் உடலை உடனே துணியாலும் கம்பளத்தாலும் தேய்த்துச் சூடுண்டாக்குவர். அவர்கள் உணர்ச்சி பெற்று எழுவதற்குச் சிறிது நேரம் ஆகும். அவர்கள் அம்பிகையின் அருட்கடலில் திளைத்து எழுந்தவர் போன்று புத்துயிரும் புத்துணர்ச்சியும் பெற்று எழுவர். அவ்வாறு அனைவரும் நீராடி முடிந்த பின்னர் அங்குக் கௌரிக்கும் கயிலை நாயகனுக்கும் முறைப்படி வந்தனை வழிபாடுகள் நடத்தப்படும். அதுவே யாத்திரையின் முடிவான சடங்கு. ஆகையால் அனைவரும் உணர்ச்சியோடும் உவகையோடும் அதனைச் செய்து முடிப்பர். யாத்திரிகர் கயிலைப் பிரசாதமாக அக்குளத்தின் நீரைக் குப்பிகளில் நிறைத்து மூடி முத்திரையிட்டுக் கொண்டு வருவர்.

கயிலை மலைக்குத் தெற்கில், அதன் அடிவரையினின்றும் நாற்பதுமைல் தொலையில் மானச சரோவரம் என்னும் மாண்புமிக்க தெய்வத் தடாகம் உள்ளது. இடைப்பட்ட நாற்பது மைல் தூரமும் கடல் போன்ற பெருவெளி பரந்து தோன்றுகின்றது.

இடையில் ஆங்காங்குச் சதுப்பு நிலங்களும் சிற்றாறுகளும் உள்ளன. அங்கு வேனிற்காலத்தில் ஆடுகளும் சடைமாடுகளும் மந்தை மந்தையாக மேய்ந்துகொண்டிருக்கும். ஆங்காங்கு இடையர் தங்கும் கூடாரம் ஒவ்வொன்று காணப்படும். அவை சடைமாட்டின் கம்பளத்தால் அமைந்தவை. வழி முழுவதும் ஆடுமாடுகளின் சாணம் குவியல் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும். இவ்வழியில் ஆறலை கள்வர் மறைந்திருந்து வழிச்செல்வோருக்கு ஊறு விளைப்பர். இடையிடையே காரைச்செடி செறிந்த இடங்களில் காட்டுக் குதிரைகள் நிரை நிரையாகத் திரிவதைக் காணலாம். மானச சரோவரத்தினின்றும் தோன்றி, இராட்சஸ தடாகத்திற் கலக்கும் கங்கசூ என்னும் ஓடையில் வெந்நீர் ஊற்று ஒன்று உள்ளது. அது தீர்த்தபுரியில் உள்ள ஊற்றளவு பெரியது அன்று. அதில் வெப்பம் மிக்க கொதிநீர் குமிழியிட்டுக்கொண்டு மேலெழுகின்றது. யாத்திரிகர் அதிலும் நீராடுவது உண்டு.

மானச சரோவரம்

வெண்பனி போர்த்து வயிரமணி வரைகள் போன்று வானுற வளர்ந்து நிற்கும் கயிலைமால்வரைக்கும், மாந்தாதா மலைக்கும் இடையே பச்சை மரகத மணி போன்று காணப்படுகின்றது மானச சரோவரம் என்னும் மாண்புறு தடாகம். அது கடல் நிலையினின்றும் பதினையாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அஃது ஐம்பது மைல் சுற்றளவும், இருநூறு சதுரமைல் பரப்பும் உள்ளதாகப் பசுங்கடல் போன்று பரந்துள்ளது. இருநூற்றைம்பது அடி வரை அஃது ஆழ்ந்துள்ளது. கடலின் நீர் நீல நிறமாயிருத்தல் போன்று மானச சரோவரத்தின் நீர்

பசுமை நிறமாயுள்ளது. அதன் நாற்புறங்களும் சமசதுரமாக உள்ளன. உலகங்களைப் படைக்கத் தொடங்கிய படைப்புக் கடவுள் முதற்கண் அத்தடாகத்தையே படைத்ததாகவும், அஃது அவனுல் மனக் கற்பனையின் வடிவாக நினைப்பளவினுல் தோற்றுவிக்கப்பட்டதாகலின் மானச சரோவரம் என்னும் பெயர் பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன. மானச சரோவரத்தை நேரிற் சென்று காண்போர்க்கு இக் கூற்றுக்களின் உண்மை புலனுகும். அது கடவுள் தன்மை வாய்ந்த கலைஞர்களின் கருத்தில் எழுந்த கற்பனையே ஒரு தடாகமாகக் காணப்படுவது போன்று உள்ளது. கயிலையைப் போன்றே மானச சரோவரத்தின் பெருமையையும் படத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ள இயலாது ; உரைவழியாகவும் அதனை உணர்தல் அரிது. மானச சரோவரம் உயிரொளி திகழும் அழகோவியமாகும். அதன் பெருமையும், அழகும், அதன்கண் திகழும் உயிரொளியிலேயே உள்ளன. எனவே அதனை நேரிற் சென்று காண்போரே அதன் பெருமையை உள்ளவாறு உணர்தல் கூடும்.

மானச சரோவரத்தைத் திபேத்தியர் ட்ஸோமஃபான் என்றும், ட்ஸோமவாங் என்றும் அழைக்கின்றனர். முன்னதற்கு வெல்லலாகாத ஏரி என்பதும், பின்னதற்கு அடிமைப்படாத ஏரி என்பதும் பொருள்களாகும். அதனுள் மக்களின் புறக்கண்ணுக்குப் புலனுகாத தெய்விக நாவல் மரம் (ஜம்பு) ஒன்று உள்ளதென்றும், அதன் கனி உண்போரின் உள்ளத் துயரங்களையும் உடல் நோய்களையும் தீர்க்க வல்ல தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும், அதனைப் பெரும் வேட்கையால் தேவரும் முனிவரும் அங்குச் சுற்றிச்

சூழ்ந்து கொண்டுள்ளனர் என்றும், அந்நாவல் மரம் காரணமாகவே அச் சூழல் ஜம்புலிங் என்றும், அதன் தென்பால் உள்ள நம் பாரத நாடு ஜம்பூத் வீபம் என்றும் பெயர் வழங்கலாயின என்றும், அத்தடாகத்தில் மலரும் தெய்விகத் தாமரை மலர் களில் புத்தர் பெருமானும் போதிசத்துவர்களும் வந்து தங்குகின்றனர் என்றும், அஃது உலகி லுள்ள ஏனைப் புனித தீர்த்தங்கள் அனைத்திலும் விழுமியது என்றும், அதனில் ஒருமுறை நீராடின் கழிந்த நூறு பிறப்புக்களிற் செய்த தீவினைகளும் தீர்ந்துவிடும் என்றும் திபேத்திய புராணங்கள் கூறுகின்றன. மானச சரோவரத்தைச் சூழ ஏழு திபேத்திய பௌத்த மடாலயங்கள் உள்ளன. அவற்றில் உள்ள லாமாக்கள் அவர்கள் முறைக் கேற்பக் காலந்தோறும் கயிலைக்கும், மானச சரோவரத்துக்கும் வந்தனை வழிபாடுகள் செய்து வருகின்றனர். அவர்கள் மனம் வாக்குகட்கு எட் டாத பேரின்பப் பெருநிலையாகிய 'நிர்வாண' நிலை யைக் குறித்துச் செய்யும் தியானத் தவத்தில் ஈடு பட்டுள்ளனர்.

மானச சரோவரத்தை முதன்முதலிற் கண்ட வன் மாந்தாதா என்பர். அவன் அதில் நீராடி அதன் கரையில் அமர்ந்து அது வழங்கும் இறை யழகின் இன்பத் தோற்றத்தில் உள்ளத்தை ஊன்றி நெடுங்காலம் தவம் செய்தான். மற்றும் பல முனிவர்களும் தேவர்களும் அதன் கரையில் இருந்து இறைவன் திருவருட்பேறு வேண்டி அருந் தவம் புரிந்து வந்தனர். ஆன்மத் தூய்மையும் உலக நலமுமே வேண்டித் தவம் புரிந்த முனிவர் களும் தேவர்களும் மானச சரோவரத்தின் கரை யைத் தெரிந்தெடுத்தனர் என்பதில் ஓரளவு

உண்மை இல்லாமலில்லை. அத்தடாகம் தெய்வத் தன்மை அனைத்திற்கும் இருப்பிடமாயுள்ளது. அமரர்களுடையவும், அமரநிலை எய்திய முனிவர்களுடையவும் உள்ளத்தியல்புகளை அது தெள்ளிதின் எடுத்துக்காட்டி நிற்கிறது. அவர்களுடைய உள்ளம் போன்று அஃது ஒழுங்கும் நேர்மையும் உடைய அமைப்பும், தோற்றமும் கொண்டு விளங்குகிறது. பசுங்கடல் போன்று பரந்துள்ளது எனினும் அலைப்பும், அசைவும் இன்றித் தீட்டிய ஓவியம் போன்று அமைதியாக உள்ளது. அதன் நிலை காண்போர் உள்ளத்திற்குச் சாந்தியளித்து உவகையூட்டுகிறது. இங்ஙனம் ஆன்மாநுபவத்தில் ஆழ்ந்திருக்கும் யோகியர் போன்று அமைந்திருக்கு·ம் அத்தடாகத்தை, அவர்கள் யோகத்தைக் கலைக்க வரும் அசுரர் சக்திபோன்று மாலையில் கடுங்காற்று வீசி அலைக்கும். அவ்வலைப்புச் சிறிது பொழுதே நீடிக்கும். பதினையாயிரம் அடி உயரத்தில் இருப்பினும் அதன் நீர் மிக்க தட்பம் உடையதன்று. அதன்கண் பல வெந்நீர் ஊற்றுக்கள் இருத்தலே அதற்குக் காரணம் என்று கருதுகின்றனர். ஆயின் அஃது ஏனைய வெந்நீர் ஊற்றுக்கள் போன்று மிக்க வெப்பம் உடையதும் அன்று. நம் முன்னோர்கள் அதன் இவ்வியல்பினை நன்கு கண்டுணர்ந்தே வெப்பமும் அசைவும் இல்லாதது என்று பொருள்படுவதாகிய அநவதப்த என்னும் பெயரை அதற்கு வழங்கினர் போலும்! இருநூற்றைம்பது அடிகட்கு மேலும் ஆழமுள்ளதாக இருப்பினும் அதன் நீர் தூய்மையும் தெளிவும் உடையதாக இருக்கிறது. ஐம்பது அடிகட்குக் கீழுள்ள கற்களும் பிற பொருள்களும் அருகில் உள்ளனபோலத் தெளிவாகத் தெரிகின்றன. அதனால் கரையில்

நின்று நோக்குகையில் அஃது ஆழம் இல்லாதது போலத் தோன்றுகின்றது. ஆயின் இறங்கும் துறையிலேயே ஆழம் நிலைகொள்ளாது. பனி யடைப் பரப்பைக் கண்டு ஒளி மங்கி நலிந்த கண் கள் அதன் பசுநீர்ப் பரப்பைக் கண்டதும் ஒளி பெற்றுக் களிக்கின்றன. அதன் கரையில் கால் வைத்ததும் தளர்ச்சி நீங்கிக் கிளர்ச்சி யெழுகின் றது; மெய் சிலிர்த்து உள்ளம் தளிர்க்கின்றது. குளிர் மிகுதியால் அதுவரை தண்ணீரைக் காணவும் கூசிய உள்ளம், அதிற் படிந்து குடைந்தாடுமாறு தூண்டுகின்றது. அதில் நீராடியதும் உள்ளம் புத் தொளி பெறுகின்றது. உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த பெரும்பொறை அகற்றப்பட்டது போன்றதோர் உணர்ச்சி உண்டாகி உவகையூட்டு கின்றது. அழுக்கு நீங்கி அலைவொழிந்து அமைதி யுற்ற உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் அலையலை யாக எழுகின்றன; இறையுணர்வெழுந்து இன்பம் சுரக்கின்றன; வன்பும் மருளும் அகன்று அன்பும் அருளும் பெருகுகின்றன. இவ்வகையால் அது, தன்னில் மூழ்குவோரைத் தவத்திற்குரிய தகுதி யுடையோராகச் செய்கின்றது.

ஒருவகைப் பசுங்கோரையும் தாமரை போன்ற அதன் தேமரு மலரும் அத்தடாகத்திற்கு அழகு செய்கின்றன. அவற்றையே திபேத்தியப் புராணங் கள் 'அற்புதத் தாமரை' என்று வருணிக்கின்றன போலும்! அவற்றில் புத்தர் பெருமான் வந்து தங்குவதாகக் கூறுவது மிகவும் பொருத்தமுடை யதே. அப் பெருமானின் அன்பழகையும் அறி வொளியையும் அவற்றில் காணலாம். தெள்ளத் தெளிந்த அதன் நீரிலே வெள்ளைச் சிறகையுடைய அரச அன்னங்கள் ஆனந்தமாக நீந்திக்கொண்

டிருக்கின்றன. பலவகை நீர்ப்பறவைகளும், குஞ்சும் குழுவும் சூழ மனித பயம் இன்றி அதில் இனிது வாழ்கின்றன. அரச அன்னங்களைத் திபேத்தியர் ஙங்பா என்று அழைக்கின்றனர். ஏனைப் பறவை போன்று அவை மீன், நத்தை முதலிய உயிர்ப் பிராணிகளை உண்ணுவதில்லை; நீர்ச் செடிகளையும் பாசியையுமே உண்டு வாழ்கின்றன. அன்னம் போன்ற வேறு சில பறவைகளும் அதில் உள்ளன. அவை அரச அன்னங்கள் போலத் தூய வெண்ணிறம் உடையன அல்ல. சில தவிட்டு நிறமுடையனவாகவும், சில தலையும் முதுகும் கருநிறமும் ஏனை உடற்பாகம் வெண்ணிறமும் உடையனவாகவும் காணப்படுகின்றன. அவை உயிர்ப்பிராணிகளை உண்ணுகின்றன. திபேத்தியர் அரச அன்னங்களைத் தெய்வப்பறவை என்று கருதுகின்றனர். அவ்வரச அன்னங்கள் அடிக்கடி அடங்கிய குரலில் இன்னொலி எழுப்புகின்றன. அவ்வொலி செவிக்கு இனிமையையும், உள்ளத்திற்கு உவகையையும் ஊட்டுகின்றது. அது, 'மானச சரோவரத்தில் அரச அன்னங்கள் தேவ கீதங்களைப் பாடிக்கொண்டிருக்கின்றன' என்னும் திபேத்திய புராணக் கூற்றை நினைப்பூட்டுகின்றது. தமிழ்ப் புலவர்கள் அன்னத்தின் குரலுக்கு மகளிர் காலில் அணியும் சிலம்பின் ஒலியை ஒப்புமை கூறியுள்ளாராயினும் அது மானச சரோவரத்து அன்னங்கட்கு ஒவ்வாது.

மானச சரோவரம் கடல்போன்ற பரப்புள்ளதெனினும் நாற்புறக் கரைகளும் நன்கு தோன்றுமாறு சிறிய தடாகம் போன்று அமைந்துள்ளது. அதன் கரையோரத்தில் ஆங்காங்கு நெடுஞ்சுவர் போன்ற கரடுகள் பல உள்ளன. அவற்றின் முடிகள் வெண்ணிறமான பனியடையால் மூடப்பட்

டிருக்கின்றன. அவற்றின் அடிவரையில் பலவேறு நிறமுள்ள பாறைகளும் கற்களும் அடுக்கடுக்காக மாறிமாறி அமைந்திருக்கின்றன. தடாகத்தின் நாற்புறங்களிலும் உள்ள மணற் பரப்பு, பல்லாயிரம் வானவிற்களைப் பரப்பிவைத்தாற் போல நிரைநிரையாக அமைந்த பலப்பல நிறங்களோடு காணப்படுகிறது. அதன் இடையிடையே குவிந்து நிற்கும் மணல் மேடுகள் வெவ்வேறு நிறமுள்ள இரத்தினக் குவியல்களை ஒத்துத் தோன்றுகின்றன. நிறங்கள் ஒழுங்கின்றிக் குழம்பிக் கிடவாமல் முறைப்படி அமைந்திருப்பது வியத்தற்குரியதாகும். நிறங்களின் இயல்புகளை நுனித்துணர்ந்த கலைஞன் அவற்றின் அடைவு முறையை ஆராய்ந்து தெரிந்து அமைவுற இயற்றி வைத்தாற் போல அவை இயல்பாகவே இயைவுற அமைந்துள்ளன. இறைவன் திருமுன்னர் இயற்கையன்னை வண்ணச் சுண்ணம் கொண்டு தன் மலர்க்கரத்தால் வகைபெற இழைத்து வைத்துள்ள அவ்வெழிற் கோலங்களைச் சொல்லால் வருணித்தல் ஒல்லுவதன்று. மானச சரோவரத்தையும், அதனைச் சூழ உள்ள பரப்பையும், கயிலை நாயகன் கண்டு களித்தற் பொருட்டு மலரவன் தன் மனமெனும் தூரியத்தால் மாண்புறத் தீட்டி வைத்துள்ள வண்ண ஓவியக் கூடம் என்றே கூறலாம். இருபாலும் கயிலையங்கிரியும் மாந்தாதா மலையுமாகிய இரு வெள்ளி மால் வரைகளும், அவற்றின் இடையே மனக் கற்பனைக்கும் எட்டாத வனப்பு வாய்ந்த மானச சரோவரமும், அதனைச் சூழ வண்ண ஓவிய வைப்பெனத் தோன்றும் பரப்பும் வழங்கும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்போர், தாம் கடவுள் திருமுன் நிற்பதாகவே உணர்வர்.

வற்றாது வளம் பெருக்கிப் பாரத நாட்டை ஊட்டி வளர்க்கும் நான்கு பேராறுகளும் மானச சரோவரத்தின் நாற்புறங்களினின்றுமே தோன்று கின்றன. அதன் வடபுறத்தினின்று சிந்துவும், கீழ்ப் புறத்தினின்று பிரம்மபுத்திராவும், தென்றிசையி னின்றும் கங்கையின் உபநதிகளுள் ஒன்றாகிய கர்னுலியும், மேற்பானின்று சட்லிஜும் உற்பத்தியாகி இமயப் பெருமலையை ஊடுருவிப் பெருகிவந்து பாரத நாட்டிற் பாய்ந்து அறிவும் செல்வமும் கொழிக் கின்றன. அவை மானச சரோவரத்தினின்று வாய்க்கால்களாகத் தோன்றவில்லை யாயினும், அதன் நான்கு பக்கங்களினின்றும் தனித்தனி ஊற்றுக்களாக ஊறிப் பெருகுகின்றன. யாத்திரி கர்கள் அதன் கரையில் கூடாரம் அமைத்துத் தங்கு வர். கயிலை யாத்திரையிலேயே மானச சரோவரக் கரை வாசம் மனத்திற்கு இனிமை பயப்பதாகும். ஆடவர் அப்புனித தீர்த்தத்தில் நீராடித் தர்ப்பணம் செய்வர். மகளிர் அதற்குத் தூப தீபம் காட்டி வந்தனை வழிபாடு செய்து மகிழ்வர். யாத்திரிகர் மானச சரோவரத்தின் புனித நீரைக் குப்பிகளில் நிறைத்துக் கொள்ளுவர்; அதன் கரையில் உள்ள பன்னிறக் கற்களில் சிலவற்றையும், மணலையும் நினைவுப் பொருள்களாக எடுத்துச் செல்லுவர். அங்கு வளரும் ஒருவகை மணமுள்ள தவனத்தை மானச சரோவரப் பிரசாதமாகக் கொண்டு செல்லு வதும் உண்டு. கயிலையைப் போலவே யாத்திரிகர் மானச சரோவரத்தையும் வலம் வருவர். அதனை வலம் வருவது அரிய அனுபவமாகும். வழியில் கடத்தற்கரிய பல ஆறுகளைக் கடத்தல் வேண்டும்.

மானச சரோவரத்திற்கு மேற்பால் இராட்சஸ தடாகம் என்னும் பெரிய நீர்நிலை உள்ளது. திபேத்

தியர் அதனை இராட்சஸ ஏரி என்று வழங்குகின்றனர். அஃது ஒரு சிறிய கடல்போன்று காணப்படுகின்றது. அதன் இடையில் ஆங்காங்குத் தீவுகள் போன்ற பல திட்டுக்கள் தெரிகின்றன. அதன் நீர்ப்பரப்பும் மானச சரோவரம் போன்றே பசுமை நிறமுடையதாகும். அசுரர்களும் இராட்சஸர்களும் அதன் கரையில் தங்கித் தவம் செய்தனர். இலங்கை அரசனாகிய இராவணன் அதன் கரையில் இருந்தே நெடுங்காலம் கடுந்தவம் செய்தான் என்றும், அதுபற்றியே அஃது இராட்சஸ தடாகம் என்று பெயர் பெற்றது என்றும் கூறுகின்றனர். மானச சரோவரம் தெய்வத் தன்மைக்கு இருப்பிடமாக இலங்குவது போல இராட்சஸ தடாகம் அசுரத் தன்மைக்கு நிலைக்களமாக உள்ளது. அதன் அமைப்பும் தோற்றமும் இராக்கதர்களுடைய இழிதகைமைகளை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. அவர்களுடைய வலிமையைப் போன்று அஃது அளவிடப்படாத ஆழமும் பரப்பும் உடையதாக இருக்கிறது. அவர்களுடைய உள்ளம் போன்றே அதன்பால் ஒழுங்கும் நேர்மையும் தெளிவும் தூய்மையும் இல்லை. அவ்விரு தடாகங்களும் ஒன்றை ஒன்று அடுத்து அமைந்து மாறுபட்ட அவ்விரு தன்மைகளின் வேறுபாட்டைத் தெள்ளிதின் விளக்கிநிற்கின்றன.

இராட்சஸ தடாகம்

கயிலையங்கிரியையும் மானச சரோவரச் சூழலையும் நீங்குவது எளிதன்று. அவற்றை அடைவதற்கு வேண்டுவதினும் நீங்குவதற்கு மிக்க மனவுறுதிவேண்டும். யாத்திரிகர் அவற்றின்பால் பதிந்த தம் உள்ளத்தை ஒருவாறு முயன்று மீட்டுக்

மீண்டு வருதல்

கொண்டு அவற்றை வணங்கித் துதித்துவிட்டு அரிதிற் பிரிவர். கயிலாயச் சூழலின் தென்வரம் பாகிய குர்லாக் கணவாய்வரை கயிலை மலையும் மானச சரோவரமும் காட்சி வழங்கிக்கொண் டிருக்கும். கணவாயைக் கடந்ததும் அக் கண் கொள்ளாக் கடவுட் காட்சி புறக்கண்ணுக்குப் புலனுகாது மறைந்துவிடும். சென்ற வழியே மீள்வதால் செல்லுகையில் அனுபவித்த இன்னல் களும் இடுக்கண்களும் மீண்டு வருகையிலும் உண்டு. ஆயின் யாத்திரையை முடித்து மீளும் வெற்றிக் களிப்பில் அவை உணரப்படுவதில்லை. செல்லுகை யில் ஏற்றமாக இருந்தவை மீண்டு வருகையில் இறக்கமாக மாறுகின்றன; இறக்கமாக இருந்தவை ஏற்றமாகக் காணப்படுகின்றன. பனியடை படிந்து பாற்கடல்போன்று தோன்றிய இடங்கள் புல் பூண்டுகள் வளர்ந்து பசுமிலைப் பரப்பாகக் காணப் படும்; கல்லும் கரடுமாகக் காணப்பட்ட இடங்களி லெல்லாம் செடியும் கொடியும் செழித்து வளர்ந்து விழிக்கு விருந்து செய்யும்.

திபேத்தில் உள்ளவரை நாளுக்கு நாள் குறைந்துவரும் பசி இந்தியாவின் எல்லையை எய்திய பின்னர் அம்முறையே நாள்தோறும் மிகத் தொடங்கும். உணவை வெறுத்த உள்ளம் அதனைப் பெற ஏங்கும்; எவ்வளவு உண்டாலும் பசி அடங் காது பெருகும். எத்தனை முறை உண்டாலும் அது தீராது. இடைவிடாது எதையேனும் உண்டு கொண்டேயிருக்குமாறு தூண்டும். திபேத்தில் தொடர்ந்து பல நாட்கள் சத்துக் குறைந்த உணவை உண்ணுவதாலும், குளிர் மிக்க உறை பனிச் சூழலில் உறைவதாலும் உடல் முழுதும் தினவு உண்டாகும். இரு கரங்களாலும் குருதி

வடியச் சொரியினும் அரிப்பு அடங்காது. அவ் வயிற்றுப் பசியும் உடற்றினவும் இந்தியாவை அடைந்த பின்னரும் பல நாட்கள் நீங்காது நீடித் திருக்கும். சத்தும் சுவையும் உள்ள சமைத்த உணவை உண்டும், உடலில் எண்ணெய் பூசிக் குளித்தும் வர அவை நாளடைவில் சிறிது சிறிதாகத் தணியும்.

10. செலவின் பயன்

மனித வாழ்க்கையை நீண்டதொரு யாத்திரை யாகக் கூறுவது மரபு. கயிலாய யாத்திரை உண்மை யாகவே மனித வாழ்க்கையை நிகர்ப்பதாகும். இன்ப துன்ப நுகர்ச்சியும், புதிய பொருள்களையும் மக்களையும் கண்டு பழகிப் பயன்படுத்திக் கோட லும் போன்ற வாழ்க்கை அனுபவங்கள் பலவும் கயிலாய யாத்திரையிலும் நிகழ் கின்றன. உயர்வும் தாழ்வும், இன்பமும் துன்பமும், அச்சமும் ஆறுதலும், வீழ்ச்சியும் மீட்சியும் மாறிமாறி வரும் மனித வாழ்க்கையின் சிறப்பியல்பினை மலைவழிச் செலவு தெளிவுற எடுத்துக் காட்டுகின்றன. மனித வாழ்க்கை விளையாட்டாகத் தொடங்கிப் போராட்ட மாக மூள்வதுபோல மலைவழிச் செலவும் சிறு குன்றுபோலத் தோன்றும் இமயமலையின் அடி வரையில் தொடங்கி, எல்லையின்றிப் பரந்தும் ஆகாயம் அளாவி உயர்ந்தும் உள்ள பெருமலைப் பரப்பில், இறங்கியும் ஏறியும் இடுக்கண்கட்கு இடையில் முடிவின்றிச் செல்லுகிறது. இமயப் பெருமலையின் உட்பகுதியிற் செல்லின் அஃதோர் தனி உலகமாகக் காணப்படுகிறது. அது சில விடங்களில் சரிந்து தாழ்ந்தும், சிலவிடங்களில்

அரிய அனுபவங்கள்

நிமிர்ந்து உயர்ந்தும், சிலவிடங்களில் சமநிலமாகப் பரந்தும் உள்ளது. அது சிலவிடங்களில் இருள் செறிந்த பெருவனங்களால் மூடுண்டும், வேறு சில இடங்களில் சிறு செடி கொடிகளால் போர்க்கப் பட்டும், மற்றும் சிலவிடங்களில் வெற்றுடலோடும் காணப்படுகிறது. சிலவிடங்கள் நீரற வறண்டும், சிலவிடங்கள் நீர்வளம் சிறந்தும் உள்ளன. உரு மிக்கொண்டு உருண்டோடும் பேராறுகளும், ஊர்ந்து செல்லும் ஓடைகளும், சரிந்து விழும் அருவிகளும், அச்சமும் அமைதியும் உவகையுமாகிய உணர்ச்சி வேறுபாடுகளை மாறிமாறி யெழுப்பிக் கொண்டிருக்கும். திபேத்தின் நிலை முற்றிலும் மாறானது. திபேத்து நாட்டிற் செல்லுவது கரைகாணாத பெருங்கடலில் செல்லுவது போன்றது. அச்செலவில் திகைப்பு உணர்ச்சி ஒன்றே உள்ளத்தில் நிலைபெற்று நிற்கும். பனியடைப் பரப்பில் செல்லுவது வாழ்க்கையிலேயே பெறு தற்கு அரிய அனுபவமாகும்.

இரவின் இனிமையை உணர்ந்து அனுபவிப்ப தற்கு இமயமலையே ஏற்ற இடமாகும். இரவில் அங்கு அமைதி அரசாளுகின்றது. இருட்போர்வை யினுள் அம்மலைப் பரப்பு முழுவதும் அருட் பொலிவு பெற்று விளங்குகின்றது. மாவும் மரமும் மண்ணும் கல்லும் ஆகிய யாவும் தியானத்தில் திளைத்திருப்பனபோன்று தோன்றுகின்றன. அந்நிலையில் இயங்குவன, நிலைவன, அறிவுள்ளன, அறிவில்லன என்னும் வேற்றுமை அறவே மறைந்து, அனைத்துப் பொருள்களும் தம்முள் ஒன்றி ஒருமையுறுகின்றன. இயற்கைத்தாய் அனைத்துப் பொருள்களையும் இன்ப வெள்ளத்துள்

இராக்காலம்

ஆழ்த்துகிறாள். உள்ளத்தில் அமைதியும் தெளிவும் பெருக இன்பத்தேன் பொங்கி வழிகின்றது. ஏனை உணர்ச்சிகள் யாவும் செயலற்று உறக்கத்தில் ஒடுங்க, இறையுணர்ச்சி ஒன்றே விழித்து நின்று வினையாற்றுகின்றது. இரவின் இன்னாமையைத் திபேத்தில் உணரலாம். உறைபனிப் பரப்பில் உடலும் உள்ளமும் ஒருங்கே கெடுகின்றன. குளிர் காற்றின் கொடுமையால் உடல் கருகித் தீய்ந்து விடுகிறது. தோல் ஒரு புரை உரிந்து விடுகிறது. கண்ணும் மூக்கும் கன்னங்களும் வெடித்து வீங்கி விடுகின்றன. குளிர் காற்று உடலில் படுவது கூரிய ஊசிகொண்டு குத்துவதுபோன்றிருக்கும். வெப்பம் நீர் உறையும் அளவினும் குறைந்துவிடும். கடுங் குளிர் உயிரையும் நடுங்கச் செய்யும். ஒன்றன்மீது ஒன்றாகப் பல கம்பள உடைகளை அணிந்து அவற்றின்மீது கனமான கம்பளப் போர்வையைச் சுற்றிப் போர்த்துக்கொண்டு மூட்டைபோலச் சுருண்டு கிடக்கவேண்டும். வெளியுலகம் அமைதியில் ஆழ்ந்திருக்க, உள்ளம் வேதனைகளோடு போராடிக்கொண்டிருக்கும் இந்நிலையில் அங்கு ஓர் இரவு ஒரு யுகமாகத் தோன்றும்.

நாம் உள்நாட்டில் நாடோறும் அனுபவிக்கும் அனுபவங்கள் யாவும் கயிலாய யாத்திரையில் புதுமையுடையனவாகக் காணப்படுகின்றன. இமய மலைப் பரப்பிலும் திபேத்திலும் மழை பெய்வது ஒரு புதிய அனுபவமாகும். மாசு மறுவின்றித் தெளிந்திருக்கும் வானத்தில் மாயவித்தையில் நிகழ்வது போலத் திடீரென்று மாறுதல் உண்டாகும். காளமேகம் போன்ற கார்மேகம் எங்கிருந்தோ புகைந்து எழுந்து விரைந்து ஓடிவரும். கணப்

மழை

பொழுதில் தரையில் உள்ள திரைகடலே கிளர்ந்து எழுந்து கவிந்துகொண்டது போல வானம் முழு தும் வளைந்து மூடிக்கொள்ளும். மலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும். பிரளயகாலப் பேரிருள் போன்ற காரிருள் எங்கும் சூழ்ந்துகொள்ளும். வானம் வெடித்துப் பிளப்பது போன்ற மின்னல் கண்ணைப் பறிக்கும். மலைகள் ஒன்றோடொன்று தகர்ந்து இடிந்து உருள்வது போன்ற பேரிடி செவியைச் செவிடுபடச் செய்யும். அந்நிலையில் மழை பொழியத் தொடங்கும். ஒவ்வொரு மழைத்துளியும் நெல்லிக் காய் அளவு இருக்கும். அதன் விசையும் செறிவும் மலைப்பாறைகளையும் நொறுக்கிச் சிதறச் செய்யும். மாவோ, மக்களோ, மலைப்பாறைகளின் கீழ் ஒண்டி ஒளிந்துகொண்டால் அன்றி உயிர்பிழைத் தல் அரிது. மலை முழுதும் மழையின் ஆரவாரம் மனத்தைக் கலங்கச் செய்யும். கல்லும் மண்ணும் நீரும் மேலிருந்து கீழே குதித்து ஓடும். சில வேளை களில் ஆலங்கட்டி மழை பொழிவதும் உண்டு. மிளகு அளவு முதல் கொட்டைப்பாக்கு அளவு வரை உள்ள ஆலங்கட்டிகள் பேரிரைச்சலோடு பொழியும். மழை தொடங்கியது போலவே கட்டிப் பிடித்து நியுத்தினாற்போலப் பொட்டென்று நிற்கும். ஆரவாரம் அடங்கி எங்கும் அமைதி நிலவும். வானத்தை மூடி மறைத்துக்கொண்டிருந்த மேகக் கூட்டம் விழுந்தடித்துக் கொண்டு விரைந்து ஓடி மறையும். தெளிவடைந்த வானத்தில் செஞ்சுடர்ப் பரிதி முன்போலவே ஒண்கதிர் பரப்பி ஒளிரும். மலைகள் உருகிப் பெருகுவது போன்ற காட்சி உள்ளத்தில் உவகையைப் பெருக்கும்.

திபேத்தின் மழையனுபவம் வேறு வகை

யானது. அங்கு நீர்த்துளிக்கு மாறுகப் பனிக் கட்டியே பொழியும். குளிர்காலத்தில் அது குன்று களையும் புதைத்துவிடும். வேனிற் காலத்து அஃது அத்துணைக் கடுமையாகப் பொழிவதில்லை. குளிர் காற்றைத் தொடர்ந்து பளிங்குப் பிளவு போன்ற பனியடைச் செதில்கள் சிதறும். அவை நந்தியா வர்த்த மலர்களையும், முல்லை முகைகளையும், மல்லிகை மலர்களையும் வானவர் வாரி இறைப்பது போன்று தோன்றும். பொங்கி வழியும் பால்நுரை போல மலை முகடுகளினின்றும் பனியடை நழுவி விழுந்து கொண்டிருக்கும். நிலப்பரப்பு முழுதும் பனியடையால் மூடப்பட்டுப் பாற்கடல் போன்று காட்சியளிக்கும். மலைகள் யாவும் வெள்ளி மலைக ளாக மாறிவிடும். எங்கும் யாவும் தூய வெண்மை நிறமாகக் காணப்படும். வானம் தெளிந்த பின்னர் பரிதியின் கதிர்கள் அவற்றின்மீது தோயும் பொழுது அவை உருகிய வெள்ளிக் குழம்புபோல மிளிரும். அது மறத்தற்கரிய வியத்தகு காட்சி யாகும்.

மக்கள்-மலைவாணர்

கயிலாய யாத்திரையில் நாம் காணும் மக்கள் மலைவாணரும், பூட்டியரும், திபேத்தியருமே ஆவர். மலை வாணர்கள் உடையானும் உண வானும் எனைப் பழக்க வழக்கங்களானும் மாறுபாடு உடையராகக் காணப்படினும் அவர்கள் அனைவரும் இந்தியர்களே. வாழும் இடத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர்களுடைய புறவாழ்க்கை வேறுபட அமைந்திருப்பினும், அகவாழ்க்கையில் உள்நாட்டு மக்கட்கும் அவர்கட்கும் இடையே வேறுபாடு இன்று. அவர்கள் தங்கள் உடல் உடைகளையும், சுற்றுப் புறத்தையும், தூய்மையுடையனவாகப்

போற்றிக்கொள்ள அறியார்; ஆயினும் அவர்கள் உள்ளத்தில் கள்ளம் காண்டல் அரிது. அவர்கள் தோற்றத்தில் முரட்டுத்தன்மை வாய்ந்தவர்களாகத் தோன்றினும், அவர்களுடைய உண்மையும், அன்பும், இரக்கமும், ஒப்புரவும் நம்மனோரை வியக்கச் செய்கின்றன. வாழும் இடத்தின் இயல்பால் உடல் திண்மையும், உள்ளத் துணிவும், உழைப்பின் உறுதியும் அவர்கட்குப் பிறவிப் பேறுகளாக அமைந்துள்ளன. அவர்கள் உயிரைப் பணயமாக வைத்து வாழ்க்கையை ஒரு விளையாட்டாக நடத்துகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர், மக்கள் வாழ்ந்த முறையிலேயே அவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். நவீனம் என்னும் நச்சுக் காற்று இமயமலையின் உட்பரப்பில் இன்னும் புகவில்லை. பாரத நாட்டின் பண்டை வாழ்க்கை முறை அங்கு இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இயற்கை அன்னை வழங்கும் குறைந்த பொருள்களைக் கொண்டே அவர்கள் நிறைந்த வாழ்க்கை நடத்திவருகின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை இயற்கையின் துணைகொண்டு அவர்களே செய்துகொள்ளுகின்றனர். சுடுகல்லும் சுண்ணமும் இன்றியே வீடுகட்டிக் கொள்ளுதல் இயலும் என்பதை இமயமலையில் காணலாம். பணத்தின் துணையின்றியே மனிதன் வாழ முடியும் என்பதற்கு மலைவாணர் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாகும். மலைவாணர் மகளிர் இயற்கையின் எழிலோவியங்கள் ஆவர். செயற்கை நாகரிகத்தால் சிதையாத இயற்கை நலத்தின் இருப்பிடங்களாக அவர்கள் உள்ளனர். அவர்கள் கள்ளம் அற்ற உள்ளமும், குற்றம் அற்ற ஒழுக்கமும் அனைவரையும் தலைவணங்கச் செய்வன. இயற்

கைத் தூய்மையும், இனிமையும், அமைதியும் நிறைந்து தெய்வ ஒளிபெற்றுத் திகழும் அவர்களுடைய முகத்தில் பெண்மையும் தாய்மையும் தவழ்கின்றன. ஆடவர்களை ஒப்பவே மகளிரும் ஓய்வின்றி உழைக்கின்றனர். வயல் வேலைகள் தீர்ந்து வீட்டில் இருக்கையிலும் அவர்கள் வீண்பொழுது போக்குவதில்லை. நூல் நூற்றல், கம்பள ஆடை நெய்தல், இரத்தினக் கம்பளம் செய்தல், கம்பளங்கட்குச் சாயமூட்டுதல், உடைகள் தைத்தல் போன்ற ஏதேனும் ஒரு தொழிலைச் செய்த வண்ணம் இருப்பர்.

மலைவாணர்களில் பெரும்பாலோர் சீனர்களைப் போன்ற முகத் தோற்றம் உடையவர்கள். அவர்கள் தங்களை இராஜ புத்திரர்கள் என்று கூறிக் கொள்ளுகின்றனர். அவர்கள் பஷ்டி என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பூணூல் அணிகின்றனர். அவர்களிற் பெரும்பாலோர் பயிர்த்தொழில் செய்து வாழ்பவர்; சிலர் கடைவைத்து வாணிகம் செய்தும் வருகின்றனர். அவர்களில் பண்டிதர்கள், க்ஷத்திரியர்கள் என இரு வகையினர் உள்ளனர். சில விடங்களில் அகர்வால் என்னும் வேறொரு வகையினரும் இருக்கின்றனர். அவர்களிடையே தொழில், உடை, உணவு ஆகிய எவ்வகையிலும் வேறுபாடு இல்லை. உடல் முழுதும் நனைய நீராடுவதும், ஆடையைத் துவைத்து உலர்த்தி உடுப்பதும் அவர்கள்பால் காணமுடியாத செயல்களாகும். அவர்கள் உணவு சமைக்கு முன்பும், உணவு கொள்ளு முன்பும் கை, கால், முகம் இவ்வுறுப்புக்களைக் கழுவிக்கொண்டு உடைமாற்றிக் கொள்ளுவர். இவ்வுடை மாற்றமே அவர்கட்கு நீராட்டமாகும். உண்ணுதற்கு முன்னர் சிறிது

உணவை எடுத்து நெருப்பில் இடுவது அவர்கள் வழக்கம். அவர்கள் உடலினின்றும் ஒருவகைத் துர்நாற்றம் வீசும். அவர்கள் அடிக்கடி ஹூக்கா பிடிப்பர். மகளிரிடையே முகம் மூடும் வழக்கம் இல்லை. ஆடவரும் மகளிரும் தக்ளி கொண்டு நூல் நூற்கின்றனர். ஆட்டு மயிரால் கம்பளம் நெய்வதும் அவர்கள் செய்யும் தொழிலாகும்.

மலைவாணர்கள் நாம் வணங்கும் கடவுளரையே வணங்குகின்றனர். நாம் கொண்டாடும் பண்டிகைகளிற் பல அவர்களாலும் கொண்டாடப் படுகின்றன. ஆடி மாதத்தில் முதல் நாளை அவர்கள் சங்கராந்திப் பண்டிகை நாளாகக்கொண்டாடுகிறார்கள். கண்ணன் பிறந்த நாளாகிய ஸ்ரீஜயந்தி அவர்களால் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. அன்று ஆடவரும் மகளிரும் பக்தியோடு கண்ணன் புகழைப் பாடி மகிழ்வர். ஊர் தொறும் மகளிர் கூடிக் கும்மியடித்துக் களியாட்டயர்வர்.

மூட்டை சுமக்கும் கூலியாட்களும், குதிரைக் காரர்களும் முரட்டுத் தன்மை வாய்ந்தவர்களாயினும் நம்பிக்கைக்கு உரியவர்கள். அவர்களுடைய உண்மையும் உறுதியும் உழைப்பும் வியத்தற்குரியனவாகும். அவர்கள் தம்முள் அளவளாவுவதே போரிடுவதுபோன் றிருக்கும். சில சமயங்களில் அவர்களுக்குள் போரே மூண்டுவிடுவதும் உண்டு. வாய்ப்போர் முற்றிக் கைப்போராக மாறும். மூட்டைகளை இறக்கி வைத்துவிட்டு மற்போர் தொடங்கி விடுவர். அடியும் குத்தும் இடியிடிப்பது போன்று கேட்கும். போர் ஓய்ந்ததும் அவர்கள் அதனை அறவே மறந்து முன்போலவே நண்பர்களாக மாறுவது வியக்கத் தக்கதாகும். அவர்கள் ஒரு

வரை ஒருவர் தட்டிக்கொடுத்தும் கட்டித் தழுவியும் மகிழ்ந்து குலாவுவர். வீரர்கட்குரிய இவ்வியன் குணம் மலைவாணரிடையே சிறப்பாகக் காணப் படுகிறது.

பூட்டியர்

இமயமலைப் பரப்பில் பூட்டியர் என்னும் ஒரு வகுப்பினரும் மிகுதியாக வாழ்கின்றனர். தவள கங்கைக்கு வடக்கிலுள்ள பிரதேசம் அவர்களுடைய நாடாகும். தர்மா, பையான்ஸ், சௌடான்ஸ், ஜோஹர் என அவர்களில் பல பிரிவுகள் உள்ளன. அவர்கள் தங்களை இராஜபுத்திர மரபினர் என்று கூறிக் கொள்கின்றனர். அவர்களில் பலர் பூணூல் அணிகின்றனர். அவர்கள் அனைவரும் வாணிகத் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். திபேத்து நாட்டின் வாணிகம் முழுவதும் பூட்டியர் வசமே உள்ளது. அவர்கள் உடல் வன்மை வாய்ந்தவர்கள். முகத் தோற்றத்தில் அவர்கள் பெரிதும் சீன மக்களை ஒத்திருக்கின்றனர். அவர்கள் பேசும் மொழி இந்தியும் திபேத்திய மொழியும் கலந்த ஒரு கலப்பு மொழியாகும். பூட்டிய மகளிர் திபேத்திய மகளிரினும் அழகு மிக்கவர்கள். திபேத்தியருக்கும் பூட்டியருக்கும் இடையே மணக் கலப்பு உண்டு. கயிலாய யாத்திரையில் நாம் கண்டு பழகும் மக்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் திபேத்திய மக்கள் ஆவர். அவர்களைப் பற்றிய செய்திகள் முன்னர் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

பயன்

இங்ஙனம் பல புதிய அனுபவங்களைப் பெறுதலும், பலவேறு வகைப்பட்ட மக்கள் இனங்களைக் கண்டு பழகலும் அன்றிக் கயிலாய யாத்திரையால் வேறு பல நன்மைகளும் எய்துகின்றன.

நவீன வசதிகட்கு அடிமைகளாகி அவை இன்றி வாழ்க்கை அமையாது என்று கருதும் உள்நாட்டு மக்கட்குக் கயிலாய யாத்திரை பெரும்பயன் விளைப்பதாகும். அவை இன்றி இயற்கையின் உதவி கொண்டே இன்பமாக வாழ்தல் கூடும் என்னும் உண்மையை இவ் யாத்திரை அங்கைக் கனியென நன்கு தெளிவாக்குகின்றது. இச்செலவினை மேற்கொண்டு முடிப்போர் இன்னுமையை இன்பமெனக் கோடலும், இடுக்கண் கண்டு நடுக்கமுறாமையும் ஆகிய இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத இரு பேரியல்புகளும் ஒருதலையான் எய்தப் பெறுவர்.

உடல் நலம்

ஊர்ச் செலவு உடல் நலத்துக்கு உகந்தது என்று மருத்துவர் கூறுகின்றனர். உடல் நலக்கேட்டுக்கு உரிய முதற் காரணம் உடலைப்பற்றிய நினைவே ஆகும். உடலை மறப்பின் அதனைப்பற்றிய நோயும் மறைந்தொழியும். உடல் நலிவுக்குத் துணைக் காரணம் உழைப்பின்மை. உறுப்புகட்கு உழைப்புத் தரின் உடல் தானே உரம்பெறும். எனவே உடலை மறத்தலும் உறுப்புகட்கு உழைப்புத் தருதலுமே உடல் நலம் பேணுதற்குரிய சிரிய முறைகளாகின்றன. ஏனை ஊர்ச் செலவுகளில் இவை பெறப்படுவதில்லை. கயிலைச் செலவில் இவ்விரண்டும் ஒருங்கு நிகழ்கின்றன. வருத்தம் தரும் துன்பங்கட்கும், அச்சம் தரும் அபாயங்கட்கும் இடையில் உள்ளம் இறை நினைவிலேயே ஒன்றி நிற்றலின் உடலைப்பற்றிய உணர்ச்சி அறவே அகன்று விடுகிறது. கல்லும் கரடும் நிறைந்த மலை வழியில் நாடோறும் இடைவிடாது நடத்தலாலும், நிமிர்ந்து நிற்கும் மலைகளில் ஏறியும், சரிந்து இறங்கும் இறக்கங்களில் இறங்கியும் செல்லுதலாலும்

உடலுறுப்புகளுக்கு உழைப்பு உண்டாகிறது. காலை முதல் மாலைவரை உடலில் வியர்வை சுரந்து வடிந்த வண்ணம் இருக்கிறது. நெடிய மலைகளில் நிமிர்ந்து ஏறுகையில் வீங்கும் நெட்டுயிர்ப்பு பிராணாயாமமாக அமைகின்றது. வேர்வைப் பெருக்கும் ஆழ்ந்த நெட்டுயிர்ப்பும் இரத்தாசயத்தையும் சுவாசாசயத்தையும் தூய்மைப்படுத்தி, அவற்றோடு தொடர்புடைய கருவிகட்கு உறுதியளிக்கின்றன. அளவுக்கு விஞ்சிய வெப்பம் போலவே அளவுக்கு விஞ்சிய குளிரும் உயிர்கட்கு அழிவு செய்வதாகும். வெப்பம் மிக்க பாலைவனங்களில் செடி கொடிகள் எரிந்து அழிவது போன்று உறைபனிப் பிரதேசங்களிலும் அவை கரிந்து அழிவதைக் காண்கின்றோம். சிற்றுயிர்கள் தீயில் மடிவது போலவே உறைபனியிலும் மடிகின்றன. கயிலாயம் செல்வோர் பல நாட்கள் தொடர்ந்து உறைபனிப் பரப்பில் உறைவதால் அவர்கள் உடலில் உள்ள ஊறு விளைக்கும் கிருமிகள் யாவும் மடிந்தொழிகின்றன. இவ்வகையால் கயிலாய யாத்திரை உடலை மறப்பித்து, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, உறுப்புகட்கு உழைப்புத் தந்து, நோய்க் காரணங்களைக் களைந்து நலம் செய்கின்றது.

உடல் நலமே அன்றி ஏனைச் செலவுகளால் எய்தலாகாத அளவு அறிவு நலமும் கயிலைச் செலவு எய்துவிக்கின்றது. நூற்கல்வியொன்றே கொண்டு அறிவு நலம் எய்துதல் இயலாது.

அறிவு நலம்

ஓர் இடத்திலேயே வாழ்ந்து, ஒரு மொழியே பயின்று, ஓர் இன மக்களோடேயே பழகி நூற்கல்வி யொன்றே பெற்று அமைவோர் கிணற்றுத் தவளை போன்று குறையறிவும் குறுகிய நோக்கமும் உடையராவர். அறிவு

நிரம்பி நோக்கம் விரிவுறுதற்குப் பலமொழிகளையும் பயின்று, பலவிடங்கட்கும் சென்று, பலவேறு மக்க ளினங்களோடும் பழகி, பலப்பல பொருள்களையும் நேருறக்காண்டல் வேண்டும். அவ்வகையாற் பெரும் அனுபவமே அறிவுக் குறையைப் போக்கிப் பரந்த நோக்கத்தைப் பெறுவித்தற்குரிய சீரிய கல்வி யாகும். யாத்திரை போன்று அக்கல்வியை எய்து வித்தற்குரிய சாதனம் பிறிது இன்று. அத்தகைய யாத்திரைகளில் கயிலாய யாத்திரை தலையாய சிறப் புடையதாகும். அது பழைமை சான்ற நம் பாரத நாட்டின் விழுமிய பண்பினையும், வியக்கத்தக்க பெருமையினையும் முழுதும் அறிந்து பயன்பெறு தற்குத் துணைபுரிகின்றது. குமரிமுதல் கயிலைவரை வாழும் மக்கள் அனைவர் உள்ளத்திலும் ஒப்பற்ற ஓர் இலட்சியமே ஊன்றி நிற்பதையும், அஃது இடத் தானும் மொழியானும் இனத்தானும் பழக்க வழக் கங்களானும் வேறுபட்டுள்ள அனைவரையும் ஒன்று படப் பிணைத்து வைத்திருப்பதையும் கயிலை யாத் திரை செல்வோர் கண்கூடாகக் காணலாம். பல்லா யிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாரத நாட்டின் பண் பாட்டினையும், மக்கள் வாழ்க்கை முறைகளையும் அறிய விரும்புவோர் கயிலை யாத்திரையின் வாயி லாக அவற்றைக் காட்சி அளவையாற் கண்டு அறியலாம். இமயமலையின் அடிவரைக்கு அப்பால் நவீன நாகரிகத்தைக் காண்டல் அரிது. மலையின் உட்பரப்பில் இன்றும் பண்டைப் பாரத தருமமே பயின்று வருகிறது. மக்கள் பண்டை முறையி லேயே வாழ்ந்து வருகின்றனர். அங்குப் பணத் திற்கு மதிப்பு இல்லை. திபேத்தில் பாரத தருமம் பௌத்த மதத்தின் பெயரால் வழங்கி வருகிறது. அங்குப் பணப் புழக்கம் மிகவும் குறைவாகும்.

பணம் இன்றேல் வாழ்க்கையே இல்லை என்று கருதும் நமக்குப் பணத்தின் உதவி இன்றியே இன்பமாக வாழும் திபேத்திய மக்களின் வாழ்க்கை இறும்பூது பயக்கும்.

மக்கள் வாழ்க்கை, உடல்நலம் அறிவு நலங்களோடு அமைவதில்லை. அவ்விரண்டிற்கும் ஆதாரமாகிய உயிர் நலமும் கூடிய வழியே வாழ்க்கை முழுமை எய்தும். கயிலாய யாத்திரை பயக்கும் ஆன்ம நலத்தை அளவிட்டு உரைத்தல் அரிதாகும். இமயப் பெருமலை பாரத நாட்டின் பண்டைத் தருமத்தைப் பாதுகாக்க இயற்கையின் அமைந்த அரணாக உள்ளது. அதன்கண் பாரத நாட்டின் பாரமார்த்திகச் செல்வம் சிதைவின்றிச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த முனிவர் பெருமக்கள் முயன்று கண்ட ஆன்ம தத்துவங்கள் யாவும் அதனுள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வான்ம தத்துவத்தின் உயிர்நிலையாகக் கயிலாயம் அமைந்துள்ளது. இயற்கையின் உண்மை ஆராய ஆராய அகன்று சென்று இறுதியில் இறையொளி காட்டி இன்பம் ஊட்டும் இயல்பினது. இயற்கை நிலையமாகிய இமயமலையும் அவ்வாறே செல்லச் செல்ல எல்லையின்றிப் பரந்து சென்று முடிவில் கடவுள் தத்துவமாக விளங்கும் கயிலையின் பால் கொண்டு சேர்க்கின்றது. இவ்வகையால், கயிலாய யாத்திரை இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் பண்டை முறையினை உணர்த்துகின்றது. அறிவு, அன்பு, அருள் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு இயன்றதே பாரத நாகரிகமாகும். அந் நாகரிகத்தின் சேம நிலையமாக

ஆன்ம நலம்

உள்ள இமயமலை அம் முப்பெரும் பண்புகளையும் கங்கை, சிந்து, பிரமபுத்திரா என்னும் மூன்று பேராறுகளின் வழியாகப் பெருக்கிப் பாரத நாட்டைப் பண்படுத்தி வளர்த்து வருகிறது.

இவ்வாறு கயிலாய யாத்திரை, இறைவனை நாடிச் செல்லும் வாழ்க்கைச் செலவின் ஒவ்வொரு சிறு பகுதியையே விளக்கும் ஏனைத் தலயாத்திரைகள் போலல்லாது, மக்கள் உயிரின் தோற்றம், வளர்ச்சி, முடிவாகச் சென்று அடையும் கடவுள் நிலை ஆகிய அனைத்தையும் ஒருங்கு விளக்கும் பெருஞ் சிறப்புடையது. எனவே வாழ்க்கைச் செலவின் வகையினை உணர்ந்து அதனை முறைப்பட நடத்திப் பயன்பெற விரும்புவோர்க்குக் கயிலை யாத்திரை உறுதுணை உதவுவதாகும்.